பக்கங்கள்: 18+VIII=26

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 22 ஞாயிற்றுக்கிழமை (07-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:348

### நடைமுறையில் எழக்கூடிய சட்டச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக

# வெளிநாட்டுச் சட்ட வல்லுநர்கள் புலிகளின் வரைவை ஆராய்கின்றனர்

## தனித்தனி அறிக்கைகள் விரைவில் கிடைக்கும் என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,நவ.7

**விடுதலைப் புலிகளால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான வரைவை வெளிநாடுகளில் உள்ள புலிகளின் சட்ட வல்லுநர்கள் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றனர்.**

**தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும்போது அதில் ஏதாவது பிரிவுகளில் சட்டச் சவால்கள் உருவாக வழி இருக்கின்றதா என்பதைக் கண்டறிவதற்காக வரைவின் ஷரத்துக்களைப் பகுதி பகுதியாக - தனித்தனியே - சட்ட வல்லுநர்கள் ஆராய்கின்றனர். அவர்களது அறிக்கைகள் சமாதானப் பேச்சு ஆரம்பமாவதற்கு முன்பாகப் புலிகளின் தலைமையிடம் சமர்ப்பிக்கப்படும்.**

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உதயனுக்கு அளித்த ஒரு செவ்வியில் இத்தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.**

விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் குழுவுக்குத் தலைமை வகித்து ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணஞ் செய்த தமிழ்ச்செல்வன் கடந்த திங்களன்று கிளிநொச்சி திரும்பினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு வெளிநாடுகளில் செய்துவரும் பிரசாரங்களை முறியடிப்பதற்காகவும், புலிகள் இயக்கம் மீதான சர்வதேசப் பார்வையைத் தெளிவுபடுத்துவதற்காகவும் புலிகளின் அரசியல் குழு இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டது.

தங்களது பயண அனுபவங்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன் உதயனுக்கு அளித்த ஒரு செவ்வியில் விவரித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### உதயனுடன் தீபாவளி வாழ்த்து அட்டைகள்

வாசகர்களுக்கு....!

இன்றைய உதயனுடன் வாசகர்களுக்கு இரண்டு தீபாவளி வாழ்த்து மடல்கள் வழங்கப்படுகின்றன.



ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) நிறுவனத்தினர், 'உதயன் - சுடர் ஒளி' நிறுவனங்களுடன் இணைந்து அதன் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக வழங்கும் வாழ்த்து அட்டை ஒன்றும் - 'உதயன் - சுடர் ஒளி' நிறுவனங்களின் நிர்வாகம் வாசகர்களுக்காக அச்சிட்டு வழங்கும் தீபாவளி வாழ்த்துமடல் ஒன்றுமாக இரண்டு மடல்கள் இன்றைய உதயனுடன் இலவசமாக விநியோகிக்கப் படுகின்றன. உங்கள் முகவரிடம் தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்...!



## ஆய்வுகூட உபகரணங்களை எடுத்துவர படையினர் தடை!

யாழ்ப்பாணம்,நவ.7

ஆசிய அபிவிருத்தி வங்கி யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு வழங்கிய ஆய்வுகூட உபகரணங்களைத் தரைவழியாக எடுத்துவர ஓமந்தையில் உள்ள படையினர் அனுமதிக்கவில்லை.

விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி 'பெக்ரொ போட்டோ மீற்றர்' என்ற ஆய்வுகூடக் கருவி உட்பட ஆய்வுகூட உபகரணங்களை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு வழங்கியிருந்தது.

இந்த உபகரணங்கள் கொழும்பில் இருந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே சூரியகாந்தியில்


- ★ ஈழத்தமிழர்கள் இலவு காத்த கிளிகளா?
- ★ யுத்தத்தின் விலை....!
- ★ பூமரங்களை மொட்டையடிக்கும் சிறுவர் சிறுமியர்...
- ★ அமெரிக்கா நோக்கிய ஆன்மீகப் பயணம்...
- ★ அமெரிக்கத் தீபாவளி - ஹலோவீன்
- ★ ஈராக் போரின் இன்னொரு முகம்.

இவற்றுடன் - கடுக்கதை, யாரொடு நோவோம்..., யாழ். பாணம், கவிதைகள்...


## வன்னியின் பல பகுதிகளில் மழையால் பெரு வெள்ளம்

### மக்கள் இடம்பெயர்வு; போக்குவரத்துகள் பாதிப்பு!

கிளிநொச்சி,நவ.7

வன்னிப் பகுதியில் இரண்டாவது நாளாக நேற்றுப் பரவலாகப் பெய்த பலத்த மழை காரணமாகச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன; பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நேற்றுப் பிற்பகல் பலத்த மழை பெய்தது. இதனால் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசமெங்கும் பாரிய சொத்தழிவு ஏற்பட்டது; மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்தது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நேற்று மாலை சுமார் 3 மணிநேரமாகப் பெய்த கடும் மழை காரணமாக வீதிகள் எங்கும் வெள்ளம் பாய்ந்தோடுகின்றது. புதுக்குடியிருப்பு வர்த்தக நிலையங்கள் பல இடிந்து வீழ்ந்துள்ளன. மேலும் பல வர்த்தக நிலையங்கள் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. புதுக்குடியிருப்பில் இருந்து செல்லும் மாத்தளன் வீதி, பரந்தன் வீதி, முல்லைத்தீவு வீதி என்பன போக்குவரத்துச் செய்யமுடியாத

(16ஆம் பக்கம் பார்க்க)

## அ,புரம் -திருமலை வீதி இனி ராஜீவ்காந்தி நெடுஞ்சாலை

### இருநாட்டுக் கூட்டறிக்கையில் தகவல்

புதுடில்லி,நவ.7

அநுராதபுரத்துக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட பிரதான வீதிக்கு 'ராஜீவ் காந்தி நல்லெண்ண நெடுஞ்சாலை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வீதியைப் புனரமைக்கவும் கிராமப் புறங்களின் அடிப்படைக் கட்டமைப்புகளைச் சீர்செய்யவும் இலங்கைக்கு இந்தியா நிதி உதவி வழங்குகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயத்தின் முடிவில் இரு நாடுகளும் நேற்றுக் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் விநியோகம், சமூக அபிவிருத்தித் திட்டங்கள், பயிற்சி நிலையங்கள் என்பவற்றுக்காகவும் இந்த நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளது.

பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் வளாகப் புனரமைப்புக்கும் இந்திய அரசு நிதி உதவி அளிக்கவுள்ளது.

அத்துடன், 7.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கும் இந்தியா முன்வந்துள்ளது.

இது தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக தொழில்நுட்பவியலாளர்கள் குழு ஒன்று அடுத்தவாரம் இலங்கைக்கு வரும் என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

(ஐ-3)

## சேது சமுத்திரத் திட்ட ஆவணங்களை இலங்கைக்கு வழங்க இந்தியா சம்மதம்

புதுடில்லி,நவ.7

சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதகங்கள் எனக் கூறப்படும் விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு வசதியாக அத்திட்டத்தின் விஞ்ஞான ரீதியான ஆவணங்களை இலங்கைக்கு வழங்க புதுடில்லி இணங்கியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இந்திய உயர்மட்டத் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் இதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி ஆகி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றில் நீந்திப் பழகிய இளைஞன் மூழ்கி மரணம்!

### ஆவரங்காலில் பரிதாப சம்பவம்

அச்சுவேலி,நவ.7

நண்பர்களுடன் கிணற்றில் நீந்திப் பழக முற்பட்ட இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் ஆவரங்காலில் இடம்பெற்றிருக்கிறது.

ஆவரங்கால் சவாரித்திடலுக்கு அருகே உள்ள கிணற்றில் நீந்திப் பழகிய இளைஞனே உயிரிழந்தார். நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மழைநீர் நிறைந்திருந்த கிணற்றில் நீந்துவதற்காகக் குதித்த பிரஸ்தாப இளைஞன் நீண்ட நேரமாக வெளியே வராததைக் கண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)



கரையோர வளங்களைப் பாதுகாத்து பராமரிப்பது தொடர்பான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ் செயலகத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், கரையோர வளங்கள் பாதுகாத்துப் பராமரிப்பது தொடர்பான நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் எம்.கே.எஸ்.விஜயரத்ன, கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஹெட்டியாராச்சி, கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜீ.பியசேன ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# வடக்கு - கிழக்கு கடற்றொழில் அபிவிருத்தி திட்டம் தேசியக் கொள்கையுள் உள்ளீர்ப்பு

## கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.7

இலங்கைத் தேசிய மீன்பிடிக் கொள்கைகளுள், வடக்கு - கிழக்கு கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களும் உள்வாங்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஹெட்டியாராச்சி.

கரையோர வளங்களைப் பாதுகாத்துப் பராமரிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் அதில் கலந்துகொண்டு 'கடற்றொழில் நன் னீர் மீன்பிடி தொடர்பான தேசியக் கொள்கை' எனற தலைப்பில் உரையாற்றினார். அதன்போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து மீன்பிடி அன்றாட வாழ்க்கைக்காக மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இன்று அது பணம் ஈட்டும் ஒரு தொழிலாக மாற்றம் கண்டுள்ளது. கிட்டத்தட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் இதன் மூலம் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

கடற்றொழில் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் எமக்கு அதிகளவான அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. மீன்பிடித் தொழிலின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைப் பயன்படுத்தி மீனவ சமுதாயங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எமது அமைச்சு மேற்கொண்டுள்ளது - என்றார்.

இலங்கைக் கரையோர வளங்களைப் பாதுகாத்து பராமரிப்பதற்கான அமைப்பின் இணைச் செயலாளர் கலாநிதி எஸ்.அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஹெட்டியாராச்சி, கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஜீ.பியசேன, அமைப்பின் தலைவர் எஸ்.விஜயரத்ன, வடமாகாண கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.சித்திரவடிவேல், யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் உட்படப் பலர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-5)

## நீர்வேலியில் நடமாடும் வங்கிச் சேவை

தெல்லிப்பழை,நவ.7

சுன்னாகம் மக்கள் வங்கி தீபாவளியை முன்னிட்டு நடமாடும் சேவை ஒன்றை இன்று நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தில் நடத்தவுள்ளது.

காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ள இந்நடமாடும் சேவையில், 15 ஆயிரம் ரூபா வைப்புச் செய்து கணக்கொன்றை ஆரம்பிப்பவர்கள் அல்லது தமது கணக்கில் வைப்புச் செய்பவர்கள் அழகிய தீபவிளக்கொன்றைப் பெறமுடியும் என வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். மேலும் குழந்தைகள், பாடசாலைச் சிறுவர்களுக்கான கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (3-150)

# மினி ஒலிம்பிக் கிரிக்கெட்டில் யாழ். பல்கலை அணி சம்பியன்

வலி.வடக்கு,நவ.7

இலங்கைப் பல்கலைக்கழகங்களிடையே கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துடுப்பாட்ட அணியினர் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கொழும்புப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் கொழும்புப் பல்கலைக்கழக அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ரி.யதர்தன் 29 ஓட்டங்களையும், எஸ்.தனேஸ்காந் 23 ஓட்டங்களையும், எ.ரஜீபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பி.விதுராஜ் 4 விக்கெட்டுக்களையும் எம்.மகிவர்த்தனா, கே.சரட்டினி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்புப் பல்கலைக்கழக அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 111 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த என்.சந்திரபால 53 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரி.சுபாஸ்கரன், ரி.யதர்தன், ரி.சர்வானந் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ரி.றொபேசன், ஜி.அருள்ராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

யாழ் பல்கலைக்கழக அணியினர் கொழும்புப் பல்கலைக்கழக அணியினரை 5 ஓட்டங்களால் வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் களனி பல்கலைக்கழக அணியும் பேராதனைப் பல்கலைக்கழக அணியும் மோதின. இதில் களனிப் பல்கலைக்கழக அணியினர் வெற்றிபெற்றனர்.

இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக இலங்கை கிரிக்கெட் அமைப்பின் செயலாளர் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதல் சுற்றில் விளையாடிய ரஜரட்டைப் பல்கலைக்கழக அணி, றுகுணு பல்கலைக்கழக அணி, களனிப் பல்கலைக்கழக அணி என்பவற்றை வெற்றிகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (8-5-86-100)

# மீட்புநிதி மீளளிக்கப்படும் இடங்கள் தமிழீழ நிதித்துறை நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.7

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிக்கத் தெரிவுசெய்யப்பட்டோருக்கு அதனை மீளளிப்புச் செய்வதற்கான கால அட்டவணை ஒன்றை தமிழீழ நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்திருக்கின்றார். வன்னி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மீட்புநிதி மீளளிப்புச் செய்யப்படும் இடங்கள், காலநேரம் போன்ற விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு முகமாலை நுழைவாயில் அருகே அமைக்கப்பட்டுள்ள நிலையத்தில் வைத்து மீட்பு நிதி மீளளிக்கப்படும்.

2004ஆம் ஆண்டு வரை மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டோரில் இதுவரை கடனை மீளப்பெற்றுக்கொள்ளாதோரும் இங்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிப்பு ஒழுங்கு வருமாறு:-

### வன்னி மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ● 13.11.2004 (சனி) | | | | |
| ★ பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | - நல்லூர்-பூநகரி | - காலை | 08.30 | மணி |
| ★ முழங்காவில் மகா வித்தியாலயம் | - முழங்காவில் | - மு.ப. | 09.45 | மணி |
| ★ வீடத்தல்தீவு றோ.க. பாடசாலை | - விடத்தல்தீவு | - மு.ப. | 11.30 | மணி |
| ★ கறுக்காய்க் குளம் அ.த.க. பாடசாலை | - கறுக்காய்க்குளம் | - பி.ப. | 12.30 | மணி |
| ● 14.11.2004 (ஞாயிறு) | | | | |
| ★ மாங்குளம் மகா வித்தியாலயம் | - மாங்குளம் | - காலை | 08.00 | மணி |
| ★ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் | - ஒட்டுசுட்டான் | - மு.ப. | 09.30 | மணி |
| ★ நெடுங்கேணி மகா வித்தியாலயம் | - நெடுங்கேணி | - மு.ப. | 10.30 | மணி |
| ★ வித்தியானந்தாக் கல்லூரி | - தண்ணீரூற்று | - ந.ப. | 12.00 | மணி |
| ★ ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | - புதுக்குடியிருப்பு | - பி.ப. | 02.30 | மணி |
| ★ விசுவமடு மகாவித்தியாலயம் | - விசுவமடு | - பி.ப. | 04.00 | மணி |
| ● 15.11.2004 (திங்கள்) | | | | |
| ★ வருவாய்ப்பகுதிச் செயலகம் | - புளியங்குளம் | - காலை | 08.30 | மணி |
| ★ வருவாய்ப் பகுதிச் செயலகம் | - மல்லாவி | - மு.ப. | 11.30 | மணி |
| ★ அக்கராயன் மகா வித்தியாலயம் | - அக்கராயன் | - பி.ப. | 01.30 | மணி |
| ★ கிளி மத்திய கல்லூரி | - கிளிநொச்சி | - பி.ப. | 03.30 | மணி |

### யாழ். மாவட்டம்

இடம் : முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.
நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை.

● 17.11.2004 (புதன்)
★ நல்லூர்
★ உடுவில்

● 19.11.2004 (வெள்ளி)
★ மானிப்பாய்
★ சங்கானை
★ காரைநகர்
★ வேலணை
★ வடமராட்சி கிழக்கு
★ பச்சிலைப்பள்ளி

● 18.11.2004 (வியாழன்)
★ யாழ்ப்பாணம்
★ கோப்பாய்
★ தெல்லிப்பழை

● 20.11.2004 (சனி)
★ கரவெட்டி
★ பருத்தித்துறை
★ சாவகச்சேரி

# வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்ட கரம் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு,நவ.7

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் கரம் உள்ளக விளையாட்டுப் போட்டி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது.

வயது ரீதியாக மட்டுப்படுத்திய மற்றும் திறந்த போட்டியாகவும் இப்போட்டிகள் இடம்பெற்றன.

இம்முறை இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோர்களின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**
**(ஆண்கள் தனி)**

இறுதிப் போட்டியில் விளையாடிய என்.கமலரூபன் 26-00 என்ற புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனாகவும் என்.சிந்துஜன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**16 வயதுப் பிரிவு**
**(ஆண்கள் தனி)**

இறுதிப் போட்டியில் விளையாடிய என்.சனேந்திரா 21-15 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும் ஆர்.நிதர்ஷன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**16 வயதுப் பிரிவு**
**(ஆண்கள் இரட்டையர்)**

இறுதிப்போட்டியில் விளையாடிய என்.சனேந்திரா, கே.சாமிலன் அணியினர் 18-02 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும் பு.கெனத்ஜீத்ரோ, ரி.ஜெருசன் அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**18 வயதுப் பிரிவு**
**(ஆண்கள் தனி)**

இறுதிப் போட்டியில் விளையாடிய என்.யுகேந்திரா 14-10 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும், என்.சனேந்திரா இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**18 வயதுப் பிரிவு**
**(ஆண்கள் இரட்டையர்)**

இறுதிப் போட்டியில் விளையாடிய பி.கஜரூபன், எஸ்.ஜனகன் அணியினர் 22-00 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும் என்.சனேந்திரா, கே.சாமிலன் அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்கள் இரட்டையர் திறந்த போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாடிய எஸ்.சற்குணமூர்த்தி, எஸ்.விமலகாந் அணியினர் 24 - 12, 25 - 07 என்ற புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனாகவும் ரி.ஜீவகன், எ.பரமநாதன் அணியினர் 14 - 12 என்ற புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (8-5-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,நவ.7

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டத்தினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி சில்வெஸ்டர் விளையாட்டுக் கழகம்.

வல்வை விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென். நீக்கலஸ் விளையாட்டுக் கழகம்.

(8-5-70-86)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,நவ.7

வலி.மேற்கு சங்கானை பிரதேச விளையாட்டுப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் -

இப்போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று சங்கானை விளையாட்டு அலுவலர் த.சந்திரமதி தெரிவித்துள்ளார். (8-5-204)

# புஷ்ஷின் அமைச்சரவையில் விரைவில் மாற்றம்; கொலின் பவல், ரம்ஸ்பீல்ட் பதவிகள் பறிபோகும்

வாஷிங்ரன்,நவ.7

அமைச்சரவை மாற்றம் தவிர்க்க முடியாதது. புதியவர்கள் சிலர் அமைச்சர்களாக்கப் படலாம் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றுள்ள அதிபர் புஷ், கடந்த வெள்ளிக் கிழமை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அமைச்சரவை மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகளை மாற்றியமைப்பது குறித்து ஆலோசனை செய்துவருகிறேன். அமைச்சரவை மாற்றம் தவிர்க்க முடியாதது. நிச்சயமாக அமைச்சரவையில் மாற்றம் இருக்கும். ஆனால், யார் யாருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்பதை இப்போது என்னால் கூறமுடியாது. இது போன்ற மாற்றங்கள் எந்த ஒரு நிர்வாகத்திலும் வழக்கமாக நடக்கக்கூடியதே - என்றார்.

இதற்கிடையில், தற்போதைய இராணுவ அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பீல்டு, வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஆகிய இருவரையும் மாற்றுவது குறித்து குடியரசுக்கட்சித் தலைவர்களிடையே ஆலோசனை நடைபெற்று வருகிறது. எனினும் உடனடியாக மாற்றம் எதுவும் இருக்காது. சில காலத்திற்குப் பிறகே மாற்றம் இருக்கும் என்று வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



ஜோர்ஜ் புஷ் கொலின் பவல் ரம்ஸ்பீல்ட்

ரம்ஸ்பீல்ட்டுக்குப் பதிலாகத் தற்போது இராணுவத் துணை அமைச்சராக இருந்து வரும் பால் உல்போவிட்சா, இராணுவ அமைச்சராக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. எனினும் ஈராக்கில் சோதனையிட்டு பேரழிவு ஆயுதங்களைக் கைப்பற்ற முடியாமல் போனதால் பால் உட்போவிட்சாமீது செனட் சபை அதிருப்தியில் உள்ளது.

இதுகுறித்துப் பென்ரகன் தலைமைச் செய்தித் தொடர்பாளர் லாரன்ஸ் டி ரீட்டா கூறுகையில்,

72 வயதாகும் ரம்ஸ்பீல்ட் ஈராக்கில் பெரும் பணி செய்துள்ளார். இனிமேல் அவரது பணி, பனிப்போருக்குப் பிந்திய காலத்துக்கு ஏற்றவாறு அமெரிக்க இராணுவத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதே என்றார்.

இதேபோல் கொலின்பவல் மாற்றத்தை மறுத்த வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் பவுச்சர் கூறுகையில், அடுத்த சில வாரங்களில் பவலின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் தொடங்கிவிடும். இதற்காகப் பயணத்திட்டம் தயாராகி வருகின்றது - என்றார். (8)

# சென்னையில் பலத்த மழை: சுரங்கப் பாதைகளில் வெள்ளம்



சுரங்கப் பாதையொன்றில் வெள்ளம்

சென்னை,நவ.7

சென்னை நகரில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இதனால், சுரங்கப் பாதைகளில் வெள்ளம் சூழ்ந்தது.

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதால் சென்னையில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு வானம் இருள் சூழ்ந்ததுபோல் காட்சி அளித்தது. சிறிது நேரத்தில் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து இரவு 9 மணி வரை பலத்த மழை பெய்தது.

மழையின் காரணமாக சென்னை நகரில் வீதிகளில் எங்கு பார்த்தாலும் மழைநீர் வெள்ளம் போல் ஓடியது.

அண்ணா சாலை, கடற்கரை சாலை உட்பட முக்கிய சாலைகளில் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து சென்றன. இதனால், இரவு 10 மணி வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கிண்டி அருகே ரயில் பாதையில் மழைநீர் வெள்ளம்போல் ஓடியது. இதனால், எழும்பூர்-தாம்பரம் மின்சார ரயில்கள் தாமதமாகச் சென்றன.

வியாசர்பாடி, கணேசபுரம் சுரங்கப் பாதையில் மார்பு அளவுக்கு தண்ணீர் ஓடியது. இதனால், சுரங்கப் பாதையை யாரும் கடந்து செல்ல முடியவில்லை. வாகனங்கள் சுரங்கப் பாதையின் இருபுறமும் அணிவகுத்து நின்றன.

இதேபோல் பெரம்பூர் ஆட்டுத்தொட்டி சுரங்கப பாதையிலும் மழைநீர் வெள்ளம் போல் ஓடியது. அதிகாரிகள் மோட்டார் பம்புகள் மூலம் சுரங்கப பாதைகளில் உள்ள தண்ணீரை வெளியேற்றினார்கள். (8)

# இத்தாலி விமானத்தில் கோளாறு அஜித், ஷாலினி உயிர்தப்பினார்கள்

சென்னை,நவ.7

நடிகர் அஜித்குமார் அவரது மனைவி ஷாலினி ஆகியோர் சென்ற விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது, எந்த அசம்பாவிதமுமின்றி அஜித், ஷாலினி உட்படப் பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர்.

சரண் இயக்கத்தில் அஜித் நடிக்கும் புதிய படம் அட்டகாசம். இப்படத்துக்கான பாடல் காட்சியைப் படமாக்கப் படக்குழுவினர் இத்தாலி சென்றிருந்தனர், அஜித்துடன் அவரது மனைவி ஷாலினியும் சென்றிருந்தார். இத்தாலியின் தலைநகரம் மிலனிலிருந்து படக்குழுவினருடன் இருவரும் இந்தியா திரும்ப விமானத்தில் ஏறினர்.

மிலன் நகரிலிருந்து புறப்பட்டதும் பனி மூட்டம் அதிகமாக இருந்தது. விமானத்திலும் கோளாறு ஏற்பட்டது, . இதனால் விமானம் தொடர்ந்து பறக்க முடியாத நிலை உண்டானது. உடனே விமானம் மீண்டும் மிலன் விமான நிலையத்துக்கே திரும்பியது. பனி



மூட்டம் காரணமாக விமானங்கள் சேவையில் ஈடுபடவில்லை.

இதனால் ஒரு நாள் முழுவதும் அஜித், ஷாலினி, சரண், அட்டகாசம் பட நாயகி பூஜா உள்ளிட்டோர் விமான நிலையத்திலேயே தங்கியிருந்தனர். பின்பு விமானம் மூலம் டுபாய்க்கு வந்து அங்கிருந்து நாடு திரும்பினார்கள். (8)

# பலூஜா நகரம் மீது மீண்டும் தாக்குதல் அமெரிக்க இராணுவம் தொடங்கியது

பக்தாத்,நவ.7

ஈராக்கில் சிறுபான்மையாக உள்ள சன்னி முஸ்லிம்கள்தான் அமெரிக்க இராணுவத்தை எதிர்த்துக் கடுமையாகப் போர் புரிந்து வருகிறார்கள். சன்னி முஸ்லிம்கள் பெரும் அளவில் வசிக்கும் நகரமான பலூஜாவில்தான் தீவிரவாதிகளின் தலைவனான சர்க்காவி பதுங்கி இருக்கிறார். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் இந்த நகரம் இருக்கிறது. சர்க்காவி சரணடைய வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கா பெரிய அளவில் தாக்குதல் நடத்தும் என்று ஈராக் பிரதமர் அல்லவி எச்சரித்து இருக்கிறார்.

இந்த எச்சரிக்கையைத் தீவிரவாதிகள் உதாசீனப்படுத்திவிட்டனர்.

உலக அரங்கில்

இதைத் தொடர்ந்து அந்த நகரின் மீது விமானப்படையும், பீரங்கிப்படையும் நேற்று முன்தினம் தாக்குதலைத் தொடங்கின. தீவிரவாதிகளும் திருப்பித் தாக்கினர்.

நகருக்குச் செல்லும் அனைத்து வழிகளும் மூடப்பட்டன. நகரை இராணுவம் சுற்றி வளைத்துக்கொண்டுள்ளது.

போர் விமானங்கள் குண்டு வீசியதில் 3 பேர் பலியானார்கள்; 4 பேர் காயம் அடைந்தனர். (8)

# யஸீர் அரபாத் இறந்த பின்னர் உடலை காஸாவில் புதைப்பதற்கு உடன்பாடு

ஜெருசலேம்,நவ.7

பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத் இறந்த பிறகு அவர் உடலை எங்கே புதைப்பது என்பதில் இஸ்ரேலுடன் பலஸ்தீனியர்களுக்கு உடன்பாடு ஏற்பட்டது.

75 வயது பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் சுய நினைவு இழந்த நிலையில், பிரான்ஸ் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக்கொண்டு இருக்கிறார்.




அவர் இன்னும் மரணமடையவில்லை என்ற போதிலும் அவர் இனிமேல் உயிர் பிழைப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டு உள்ளது.

இறந்த பிறகு தனது உடலை புனித நகரமான ஜெருசலேமில்தான் புதைக்க வேண்டும் என்று அரபாத் விரும்பினார். அங்குதான் அவர் பிறந்தார். 1967ஆம் ஆண்டு நடந்த யுத்தத்தின் போது ஜெருசலேம் நகரை இஸ்ரேல் கைப்பற்றித் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

ஜெருசலேம் நகரில் அரபாத்தின் உடலை புதைப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று இஸ்ரேல் அறிவித்துவிட்டது.

இதனால், அரபாத் உடலை எங்கே புதைப்பது என்பதும் பெரிய சர்ச்சையானது.

ஜெருசலேம் நகருக்கு பலஸ்தீனர்கள் சொந்தம் கொண்டாடிவரும் நிலையில் அங்கே அரபாத் உடலைப் புதைக்க அனுமதித்தால் அது அவர்களின் உரிமைக்கு வலுச் சேர்த்ததாகிவிடும் என்று இஸ்ரேல் அஞ்சுகிறது. அதனாலேயே அவர் உடலை ஜெருசலேமில் புதைக்கக் கூடாது என்பதில் அது உறுதியாக இருக்கிறது.



இதைத் தொடர்ந்து காசாப் பகுதியில் அரபாத் உடலைப் புதைக்கலாம் என்று இஸ்ரேல் பிரதமர் ஷரோன் கூறியிருக்கிறார்.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தில் இந்தப் பிரதேசமும் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டதுதான். இங்கு இருந்து வெளியேற இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

காஸாப் பகுதியில் அரபாத் உடலைப் புதைப்பதற்கு பலஸ்தீனர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர். ஜெருசலேம் இல்லை என்பது இறுதியாகிவிட்டால் காஸாப் பகுதி ஏற்கக் கூடியதுதான் என்று பலஸ்தீனத் தலைவர்கள் கூறியுள்ளனர். யஸீர் அரபாத்தின் தந்தை கானிஸ் உடல் காஸாவில்தான் அடக்கம் செய்யப்பட்டது. எனவே, காஸா அரபாத்தின் விருப்பத்துக்குரிய இடம்தான் என்று அவரது உறவினர்கள் கூறினர். (8)

## உலகத் திரைப்பட விழாவில் 'ஆட்டோகிராப்!'



சென்னை,நவ.7

நியூயோர்க்கில் நடக்கும் உலகத் திரைப் பட விழாவில் கலந்துகொள்ள சேரனின் 'ஆட்டோகிராப்' படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

திரைப்பட இயக்குநர் சேரன் தயாரித்து, இயக்கி, ஹீரோவாக நடித்து பெரும்வெற்றி பெற்ற படம் 'ஆட்டோகிராப்' இப்படத்திற்கு இங்கு மட்டுமல்லாமல் உலக அளவிலும் வரவேற்பு கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்படம் கடந்த செப்ரெம்பர் மாதம் கனடா நாட்டில் நடந்த படவிழாவில் திரையிடப்பட்டது. வரும் 13ஆம் திகதி அமெரிக்காவில் நியூயோர்க்கில் நடைபெற இருக்கும் [illegible] உலகத் திரைப்பட விழாவில் கலந்துகொள்ள 'ஆட்டோகிராப்' படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் 29ஆம் திகதி இந்தியாவில் கோவாவில் நடைபெறும் இந்தியத் திரைப்பட விழாவிலும் இப்படம் திரையிடப்படவுள்ளது. (8)

## சட்டவிரோத மின்பாவனையாளர் அதிகரிப்பு

கரவெட்டி, நவ.7

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனையாளரின் தொகை அதிகரித்துள்ளதால் அதிகார பூர்வமான மின்பாவனையாளர்கள் பெரும சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்கள் இவ்வாறு சட்டவிரோதமாக மின்னைப் பாவிப்பதினால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய நிலைமை காணப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக மின்சாரசபைப் பிரிவில் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (8-70-203)

## சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு

நவாலி, நவ.7

அபவிருத்திக்கான சமூக அமைபுக்களின் வலையமைப்பின் அனுசரணையுடன் மானிப்பாய் பிரதேச அரசசார்பற்ற நிறுவனத்தினரால் நடத்தப்படும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிகக்கு ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-100)

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட நினைவு மலர்களுக்கான கவர்கள் விற்பனைக்கு உண்டு.
**பிள்ளையார் அச்சகம், நல்லூர்.**

## அறிவித்தல்

இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட விடுதிச்சாலை 2005ஆம் ஆண்டு திறக்கப்படவுள்ளது. இங்கு தரம் 6இற்கு மேற்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படவிருப்பதால் அனுமதிபெற விரும்புவோர் தீபாவளி முடிந்து அதற்குப் பின்னர் வருகின்ற சனி, ஞாயிறு தினங்களில் விடுதிப் பொறுப்பாளரைச் சந்தித்து விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
**விடுதிப் பொறுப்பாளர்.**
(38386)(26-14-42-17)

## இலங்கை வங்கி மேற்தரக் கிளை யாழ்ப்பாணம்

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

அண்மையில் எமது வங்கி வாடிக்கையாளர் பகுதியில் ஒரு தொகைப்பணம் வாடிக்கையாளர் ஒருவரினால் கண்டெடுக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்குரியவர் உடன் முகாமையாளரைச் சந்திக்கவும்.

இப்பணத்தைக் கண்டெடுத்த வாடிக்கையாளரையும் உடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.
(சி.38795)(42-17-14)

## 31ஆம் நாள் நினைவலைகள்



**அமரர் சபாரட்ணம் விவேகானந்தன்**

அன்னைமடியில் 31-12-1942 — சிவனடியில் 08-10-2004

பாடசாலை லேன், ஆறுகால்மடத்தைச் சேர்ந்த **சபாரட்ணம் விவேகானந்தன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் இல்லத்தில் இன்று (07-11-2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு, அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!*

பாடசாலை லேன்,
ஆறுகால்மடம்.
**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள.**
(சி-38791)(26-42-17-14)

## சிற்றூழியர் (PEON) தேவை

எமது நிறுவனத்துக்கு சிற்றூழியர்கள் உடன் தேவை.
நற்சான்றுப் பத்திரத்துடன் நேரில்வரவும்.
சந்தைப்படுத்தும் முகாமையாளர்:
**உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**
(சி-38785)(26-42-14-17)

## Invitation

53rd Annual festival of Carols
by
The Youth of the North
at
The Uduvil Girls' College Hall
on
Saturday 13th Nov., 2004, 10.00 a.m.

Principal, Uduvil Girls' College,
Coordinating Committee,
Schools Combined Choir.
(சி-38785)(42-14-17)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

*மானிப்பாயில் பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை*

தகைமைகள்:
1. க.பொ.த. (சா.த.) ஐந்து முக்கிய பாடங்களில் விசேட சித்திபெற்று தேர்ச்சிபெற்றிருத்தல் வேண்டும் அல்லது க.பொ.த. (உ.த) சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
2. தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. முன்னனுபவம் / பொலீஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்களுக்குச் சலுகையுண்டு.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட தகைமையுடையவர்கள் சுயமாகச் சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பத்தை 10.11.2004இற்கு முன்பாக அனுப்பிவைக்கவும். வேதனம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**விளம்பர இல. 2418,
மே/பா உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.**
(C/38798) (2414-17-42)


# தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




## யாழ்ப்பாணத்திலும் தாராளமாகக் கிடைக்கின்றன

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-lon
என்றும் முன்னணியில்

S-lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

உதயன்

## அர்த்தமுள்ள பிடிவாதம்

பேச்சுமேசைக்கு விடுதலைப் புலிகள் வருவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு அதிகரித்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கின்றார்.

இந்த நம்பிக்கையை அவர் இலங்கையில் வைத்து வெளியிடவில்லை. இந்தியாவுக்குப் போய் - அங்கு பகிரங்கப் பொது நிகழ்வில் வைத்து அவர் வெளியிட்டிருக்கின்றார்.

ஏதோ தானும், தனது அரசும் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பவர்கள் போலவும் - புலிகள்தான் இறுக்கமான போக்கில் - விட்டுக்கொடுக்காமல் பிடிவாத நிலைப்பாட்டில் - இருப்பவர்கள் போலவும் -

அங்கு கதை அளந்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

தாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவின் அடிப்படையில் பேச்சு என்ற விவகாரத்தில் விடாப்பிடியாக - நெகிழ்வுப் போக்கைக் காட்டாத பிடிவாதத்தில் - புலிகள் இருக்கின்றார்கள் என்பது உண்மைதான்; வாஸ்தவம்தான்.

ஆனால், அது காலங்காலமாகத் தமிழர் தரப்புக் காட்டிவந்த நெகிழ்வுப் போக்கின் பெறுபேறாகக் கிட்டிய விபரீதங்களின் அனுபவிப்பால் ஏற்பட்ட பிடிவாதம்; காலங்காலமாக மேற்கொண்டுவந்த விட்டுக்கொடுப்புகளுக்குப் பதிலாகச் சந்தித்த ஏமாற்றங்களினால் ஏற்பட்ட மன ஓர்மத்தின் விளைவு.

அதை மூடிமறைத்துவிட்டு, தமிழர் தரப்பு நெகிழ்வுப் போக்கைக் காட்டாமல், விடாப்பிடி உறுதியோடு செயற்படுகின்றது என்று காட்ட முயன்றிருக்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

தற்போதைய அமைதி முயற்சிகள் தொடங்கிய சமயத்தில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையையோ, இடைக்கால நிர்வாகத்தையோ புலிகள் வற்புறுத்தவில்லை. ஆனால், போரினால் பாதிப்புற்று பேரழிவைச் சந்தித்த வடக்கு - கிழக்கு மக்களின் அவசிய - அவசர - அன்றாட - தேவைகளையும், பிரச்சினைகளையும் கவனிக்க ஓர் இடைக்கால ஏற்பாடு தேவை என்பதை மட்டும் வற்புறுத்தினர். அதை அப்போதைய ஐ.தே.முன்னணி அரசும் ஒப்புக்கொண்டது.

அந்த அரசுடன் சேர்ந்து அவ்வரசுக்கு வசதியான வகையில் - அந்த அரசின் விருப்பத்துக்கும், இணக்கத்துக்கும் அமைவாக - ஓர் ஏற்பாட்டை இது விடயத்தில் செய்துகொள்ளப் புலிகள் உடன்பட்டனர். அந்த அமைப்புக்கு அதிக அதிகாரங்களையோ, செல்வாக்கையோ புலிகள் அப்போது கோரவில்லை. அந்த இடைக்கால ஏற்பாடு ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் இறுதித்தீர்வுக்கான பேச்சுக்களை நடத்தவும் புலிகள் இணங்கி அந்தத்திசையில் அரசுடன் பேச்சுக்களையும் நடத்தினர்.

இப்போது 'ஒஸ்லோ பிரகடனம்' என்று தென்னிலங்கையில் திரித்துக் கூறப்படுகின்ற - மூன்றாவது சுற்றுப்பேச்சின் பயனாகப் பிறந்த - உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் ஒரு தீர்வைத் தேடும் முயற்சி பற்றிய - விவகாரம் கூட அப்படித்தான் எட்டப்பட்டது.

ஆனால், நடந்தது என்ன?

யுத்தத்தால் பாதிப்புற்று, தமது தாயகப் பூமியிலிருந்து இடம்பெயர்ந்து, அன்றாட வயிற்றுப்பாட்டுக்கு - ஜீவனோபாயத்துக்கு - அவசியமான தொழில்களையும் இழந்து, அகதிமுகாம்களிலும், நலன்புரிநிலையங்களிலும் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும தமிழர்களின் பிரச்சினைகள் ஏதுவுமே தீர்க்கப்படவில்லை.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை, யுத்தம் நிறுத்தப்பட்டதால் அழிவுகளும், உயிர், உடைமை இழப்புகளும், உடல் பாதிப்புகளும் தொடராமல் போயுள்ளதைத் தவிர வேறெதுவும் நடக்கவில்லை. அவர்களது அவல வாழ்க்கை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. அது நீங்குவதாக இல்லை.

ஆனால், தென்னிலங்கையைப் பொறுத்தவரை நிலைமை அப்படியல்ல. யுத்தநிறுத்தத்தின் - அமைதியின்- லாபத்தை (Peace Dividend) தென்னிலங்கைதான் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு அது கிஞ்சித்தும் கிட்டவில்லை.

தமிழரின் அன்றாட - அத்தியாவசிய - அவசர - பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசின் இணக்கத்துடன் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் முதல் 'சிரான்' அமைப்புவரை எல்லாமே செல்லாக்காசாகிப்போனதுதான மிச்சம்.

இந்த ஏமாற்றத்தின் - ஏமாற்றப்பட்டதன் - விளைவுதான் தமிழர் தரப்பின் இப்போதைய பிடிவாதத்துக்குக் காரணம்.

கடந்த ஐம்பது வருடங்களாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பல்வேறு சமாதான முயற்சிகள், அமைதிப்பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. பல உடன்பாடு, ஒப்பந்தங்கள், இணக்கப்பாடுகள் காணப்பட்டன. ஆனால், எந்தப் பலனும் இல்லை; எந்த முன்னேற்றமும் இல்லை. ஏமாற்றப்பட்டதை - ஏமாந்ததை - தவிரப் பயன் ஏதும் கிட்டவேயில்லை.

எனவே, இனிமேலும் விரைந்து ஓர் இறுதித் தீர்வு காண்போம் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு அர்த்தமோ - அடித்தளமோ - ஆதாரமோ - இருப்பதாக இல்லை.

அதனால்தான் காலத்தைப்பிடிக்கும் இறுதித்தீர்வு முயற்சிக்குள் இறங்கமுன்னர், இடைக்காலத் தீர்வு குறித்துப் பேச்சு நடத்தி, ஓர் இணக்கம் கண்டு, அதை நடைமுறைப்படுத்திய பின்னர் இறுதித் தீர்வு குறித்துப் பேசலாம் என்று தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான புலிகள் அடித்துக்கூறுகின்றார்கள்; விடாப்பிடியாக நிற்கிறார்கள்; பிடிவாதம் காட்டுகின்றார்கள்.

காலங்காலமாகக் காட்டப்பட்டுவந்த நெகிழ்வுப் போக்கின் உச்சத்தில் வேறுவழியின்றி பீறிட்டு வெடித்த பிடிவாதம் இது. அதில் நியாயம் உண்டு.

# தீவுப்பகுதிக்கான போக்குவரத்து எந்நேரமும் தடைப்படும் அபாயம்!

யாழ்ப்பாணம்,நவ.7

தீவுப்பகுதிக்கான போக்குவரத்து எந்நேரமும் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகப் பண்ணைப் பாலத்துக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் - யாழ். - ஊர்காவற்றுறை வீதியில் சில இடங்களில் ஒரு கரையில் இருந்து மறுகரைக்கு கடல்நீர் பாயத்தொடங்கியுள்ளது.

ஏற்கனவே பலத்த சேதமடைந்த நிலையில், போக்குவரத்தில் பெரும் சிரமங்களை ஏற்படுத்திவந்த யாழ். - ஊர்காவற்றுறை வீதி, தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக மேலும் சேதமடைந்துவருவதுடன் -

வீதியின் ஒருகரையில் இருந்து மறுகரைக்கு கடல்நீர் பாய்வதையடுத்து போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குண்டும் குழியுமாகவும் மாறிவருகின்றது.

கனரக வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு வாகனங்கள் நாளாந்தம் பயணஞ் செய்யும் இந்த வீதியினூடான போக்குவரத்துத் தடைப்படுமானால், தீவுப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் - சுட்டிக்காட்டப்படுகிறது.

தீவுப்பகுதிப் பிரதேச செயலகங்களில் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில், மேற்படி வீதியைப் புனரமைக்கும் விவகாரம் குறித்துப் பலதடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டது.

எனினும், இது விடயமாக, இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை - எனத் தீவுப்பகுதிக்குக் கடமை நிமித்தம் செல்லும் அரச அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (எ)

## சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்த நாளன்று சுந்தரர் தேவாரங்கள் நூல் வடிவில்

### அறக்கொடை நிதியத்தினர் ஏற்பாடு

வலி.வடக்கு,நவ.7

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை நிதியத்தினர் சுந்தரமூர்த்தி நாயனாரின் 7 ஆம் திருமுறைத் தேவாரங்களை நூல் வடிவில் பதிப்பிக்கவுள்ளனர்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது ஆண்டு பிறந்த நாளையொட்டி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை நிதியத்தினரால் முத்துவிழா மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாளன்று இவ்விரு நூல்களையும் வெளியிட்டுவைக்க அறக்கொடை நிதியத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாளன்று வறுமைக் கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலைகளுக்கும் மருந்துப் பொருள்கள் மற்றும் உப கரணங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-86-152)



யாழ். அராலி வீதியிலுள்ள வசந்த நகர்ப் பகுதியில் வசிக்கும் மக்கள் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாகப் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். சுமார் 150இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதியில் சிறுசிறு குடிசைகளிலும் சிறிய கல்மேடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் வசிக்கும் பெரும்பாலான மக்களின் இல்லிடங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அங்கு தொற்றுநோய்கள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. அந்த மக்களின் அவல நிலையை மேலேயுள்ள படங்கள் பிரதிபலிக்கின்றன. *(படங்கள்: தீபன்)*

## கல்லுண்டாய் குடியிருப்பு வீடுகளில் மீள்குடியமர உதவுமாறு கோரிக்கை

வலி.தெற்கு,நவ.7

நவாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கல்லுண்டாய் பகுதிக் குடியிருப்பு வீடுகளில் தாம் மீளக்குடியமர்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருமாறு மேற்படி குடியிருப்பாளர்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபையினூடாக யாழ். அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.

இக் குடியிருப்பைச் சேர்ந்த 16குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்போது வெவ்வேறு இடங்களில் தற்காலிகமாக வசித்து வருகின்றன. இவர்களுள் 13 குடும்பங்கள் அயற்பிரதேசங்களிலும் மூன்று குடும்பங்கள் வன்னிப் பிரதேசத்திலும் தற்போது குடியமர்ந்துள்ளன.

1975ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இக்குடும்பங்களுக்குக் கல்லுண்டாய்ப் பகுதியில் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. வீட்டு உரிமைக்கான ஆவணங்களும் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் இக்குடும்பங்கள் குடியிருப்பை விட்டு இடம்பெயர நேர்ந்தது.

வீடுகள், குண்டுத்தாக்குதல்களால் சேதமாக்கப்பட்டதுடன், இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர விடாது இராணுவத்தினர் தடைசெய்வதாகத் தெரிவித்து, தங்களைத் தமது சொந்தவீடுகளில் குடியிருக்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருமாறு இவர்கள் அரச அதிபரிடம் கோரியுள்ளனர். (எ-152)

## சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

குருநகர்,நவ.7

பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் வைத்திய சாலைகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகச் சேவைபுரிபவர்களைச் சேவை மூப்பு அடிப்படையில் சாதாரண தொழிலாளி மற்றும் காவலாளி பதவிகளுக்குப் பதவியுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் (நிர்வாகம்) இ.ரவீந்திரன் மேற்படி பதவியுயர்வு தொடர்பாக மாகாணத்திலுள்ள பிரதி மாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். வைத்தியசாலைகளில் உள்ள சாதாரண தொழிலாளி மற்றும் காவலாளி பதவிகளின் வெற்றிட விவரங்களை உடனடியாகத் தமக்கு அறிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

சுத்திகரிப்புத் தொழிலாளியாகக் குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றி சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்களிடம் இப்பதவி உயர்வு விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்து அவர்கள் மூலம் பூர்த்திசெய்யப்பட்ட விவரங்களை சுயவிவரக்கோவைகளின்படி உறுதிசெய்து இம்மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறும் - அவர் கேட்டுள்ளார். (எ-51)

நாளை

ஐப்பசி 23
திங்கட்கிழமை
(08.11.2004)
திதி : ஏகாதசி
பின்னிரவு 12.19 வரை.
நட்சத்திரம் : பூரம்
மு.ப.09.42 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 12.05 - 01.35
ராகுகாலம்: 7.35 - 9.05
(பழைய நேரப்படி)

## 'பெண் உள்ளம் உயர்தல்' நிகழ்வு கிராமங்கள் தோறும்

யாழ்ப்பாணம்,நவ.7

பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் 'பெண் உள்ளம் உயர்தல்' என்னும் நிகழ்ச்சித்திட்டம் கிராமங்கள் தோறும் நடைபெற்றுவருகின்றது.

பெண்கள் பண்பாட்டு மையத்தின் உயிர்ப்பூக்குநர்களால் நடத்தப்படும் இந்தத் திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஊக்குவித்து வருகின்றார்.

வட்டுக்கோட்டை, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் உயிர்ப்பூக்குநர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அங்குள்ள அங்கத்தவர்களுடன், குறிப்பாகப் பெண்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

இது தொடர்பாக உயிர்ப்பூக்குநர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

சில காலத்தின் முன்பு தலைநிமிர்ந்து தமது சொந்தக்காரியங்களையே துணிச்சலாகச் செய்ய முடியாமலும், கருத்துக்களை வெளியிடமுடியாமலும் இருந்தவர்களைப் பெண்கள் பண்பாட்டு மையம் தொடர்ந்து நடத்தும் 'ஆற்றலைத் தேடி...' பயிற்சிப் பட்டறையின் மூலம் புடம் போட்டு எழுச்சியும் செயல்முனைப்பும் உள்ளவர்களாக மாற்றியுள்ளது.

ஒடுங்கி உறைந்துபோய் ஒன்றும் செய்யமுடியாது என நசிந்து கிடக்கும் எமது பெண்கள் தேச விடுதலைக்கும், நிர்மாணத்துக்கும் உழைத்து, உயரிய பண்பாட்டுடன் கூடிய தமிழ்ச் சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்றனர். (8-202)

### உதயவாக்கு

உயர்ந்த முன்னேற்றமான மனிதனை விலங்குகளினின்றும் வேறுபடுத்துவது அவனுடைய எண்ணங்களாகும்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →
(C/36310)




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவ முள்ளவர்களும், பழக விரும்புபவர் களும் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு:
விள.இல.2426,
மே/பா. உதயன்.
(38340)(42)

## வலி.தென்மேற்கில் மாவீரர்தின ஏற்பாடுகள்

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேசத்தில் மாவீரர்வார நிகழ்வுகளை எழுச்சியுடன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலயமட்டத்தில் பொது அமைப்புகள் மற்றும் பொது நலமன்றங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் தற்போது கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுவருகின்றன. (எ-135)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**பரமேஸ்வரி துரையப்பா**

தோற்றம்
10-01-1940

மறைவு
20-10-2003

திதி: 07-11-2004

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுடன் எங்கள்
எண்ணம் எல்லாம் – அம்மா!

தகவல்: மு.துரையப்பா J.P.
'நிவேதிகா பவனம்',
கைதடி வடக்கு,
கைதடி. (38375) (26-14-44) - குடும்பத்தினர்.

## சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.7

நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த வாரம் இடம் பெற்றது.

அதில் தலைவராக ச.பிறேமதாஸன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். உப தலைவராக இ.புஸ்பலிங்கமும், செயலாளராக இ.ஜெகனும், பொருளாளராக கோ.தவக்குமாரும் தெரிவாகினர்.

பத்துப்பேர் அடங்கிய உறுப்பினர்கள் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (ஐ)

## சாவகச்சேரி நகரில் மிதிவெடி அகற்றும்பணிகள்

சாவகச்சேரி,நவ.7

'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினர் தென்மராட்சியில் இரு இடங்களில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகளை அகற்றிவருகின்றனர்.

சங்கத்தானை, இராக்கச்சி அம்மன் ஆலயச் சூழலிலும் வாரிவனேஸ்வரம் முத்துமாரி அம்பாள் ஆலயச் சூழலிலுமே இவ்வாறு மிதிவெடி அகற்றப்பட்டு வருகின்றது.

கச்சாய் வீதி - தம்பு தோட்டம் அருகில் உள்ள காணிகளில் படையினர் மிதிவெடிகளை அகற்றிவருகின்றனர். (எ-31)

## தங்க நகை, பணம் அபகரிப்பு!

தென்மராட்சி,நவ.7

பட்டப்பகலில் ஆள்கள் இல்லாத வீட்டில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள், பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த புதனன்று பிற்பகல் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஜன்னல் கம்பியை வளைத்து வீட்டினுள் புகுந்த திருடர்கள், அங்கிருந்து 15 தங்கப் பவுண் நகைகள், 30 ஆயிரம் ரூபா பணம் உட்படப் பெறுமதிமிக்க பொருள்களையும் அபகரித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## சைவப் பெருவிழாவும் பரிசளிப்பு வைபவமும்

நவாலி,நவ.7

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்கம் வருடாந்தம் நடத்தும் சைவப்பெருவிழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பஹிப்பாளர் வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், ஆசியுரையினை மூத்தநயினார் தேவஸ்தானக் குருக்கள் சிவஸ்ரீ க.கிருஸ்ணேஸ்வரக் குருக்களும், வாழ்த்துரையினை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சாமாவும், ஓய்வுபெற்ற ஆசிரியர் க.கதிரேசுவும் நிகழ்த்துவார்கள்.

சிறப்புரையினை இந்துகலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்குவார்கள்.

இறுதியாகப் பண்ணிசை நிகழ்வும் பரிசில் வழங்கலும் இடம்பெறும். (8-100-13)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**07.11.2004**

மீசாலை மேற்கைச் சேர்ந்த
யசீசன் - ஸ்ரீரஞ்சனி தம்பதிகளின்
செல்வப்புதல்வி செல்வி திரிசிகா
தனது முதலாவது பிறந்தநாளை
லண்டனில் இன்று (07.11.2004)
ஞாயிற்றுக்கிழமை வெகு
விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணா தாரகன், அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, இரத்தினகுமார் பெரியப்பா குடும்பம் (லண்டன்), சோதிஸ்வரன் பெரியப்பா குடும்பம் (ஹொலண்ட்), ஸ்ரீகாந்தன் பெரியப்பா குடும்பம் (கனடா), வேணு மாமா குடும்பம் (லண்டன்), சித்தப்பா, சித்தி (ஜேர்மனி), நிரோ மாமி மாமா (ஜேர்மனி) குடும்பம், தசாக்கா, லிசாக்கா, மேனனண்ணா, கார்த்திகாக்கா, மானசியக்கா, மாசிலனண்ணா, நிது அண்ணா, சாரு அண்ணா, விசாலி, வைஸ்ணவி, திவ்வியா, மச்சிமார்கள் பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங்களுடனும்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**திரிசிகா**

'பிருந்தாவனம்',
மீசாலை மேற்கு,
மீசாலை. (38374) (42-14-40)

- அம்மப்பா,
லயன் சி.சற்குணநாதன்
(Retd,T.A).

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



# அமரர் வீரகத்தி கந்தையா

தாயின்மடியில் ஜனனம்
**14-11-1924**

நாதன் கழலில் அஸ்தமனம
**08-08-2004**

*எங்கள் உயிர்மூச்சே!*

குன்றிலிட்ட தீபம் போல் ஒளி வீசி
எமக்கெல்லாம் அறிவுரைத்திட்ட உத்தமரே!
எங்கள் இன்பத்திலும் துன்பத்திலும்
வெற்றியிலும் தோல்வியிலும் இரண்டறக் கலந்து
எமையெல்லாம் கண்ணை இமை காப்பதுபோல் காத்தீரே!
எங்கிருந்தோ வந்த செய்தியினால் மனமுடைந்து
மின்னாமல் முழங்காமல் கொள்கையில் உறுதியாகி
எங்கு சென்றீரோ?
எம் காயத்தில் உயிர் இருக்கும்வரை
உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு
உறுதியுடன் தொடர்கிறோம் எங்கள் பயணத்தினை...

08-08-2004 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் *அமரர் வீரகத்தி கந்தையா* அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (07-11-2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு நடைபெறும். அந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, இன்று நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவன் குறிஞ்சி,
உடுப்பிட்டி. (38369) (26-14-44) - குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
30 - 03 - 1949



ஆண்டவன் அடியில்
26 - 10 - 1997

ஸ்ரீ விஸ்ணு மில் உரிமையாளரான

# அமரர் தம்பு கந்தசாமி

*ஆண்டேழு சென்றதப்பா ஆறவில்லை எம் துயரம்!*
*உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வுபோல்*
*இனி வருமா எம் வாழ்வு?*
*அன்பாய் அரவணைத்து ஆசை மொழி பேசி*
*எம்மை வாழவைத்த தெய்வமே!*
*உங்கள் திருமுகத்தை இனி எப்பிறப்பில் காண்போம் அப்பா?*

*பிரிவால் துயருறும்:*
கண்ணாம்பாள் - **மனைவி,**
**பிள்ளைகள்**
காண்டீபன், சங்கரன் } லண்டன்
லக்மினி, லாவண்யா, செந்தூரன்.

குடமியன்,
வரணி.
T.P.:077 - 6029197
(38361) (26-14-44)

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு
29 - 07 - 1924



உதிர்வு
20 - 10 - 2003

**அமரர் கந்தையா இராசையா**
திதி: 07-11-2004

## ஐந்தாம் வருட நினைவஞ்சலி.

அன்னை மடியில்
13 - 03 - 1979



மண்ணின் மடியில்
20 - 11 - 1999

**இராசையா துஷ்யந்தினி**
திதி: 20-11-2004

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்!


வசந்த மாளிகை,
கிழுவானை வீதி,
கோப்பாய் மத்தி. (38369) (26-14-44) - குடும்பத்தினர்.




பண்டிகைக்கால அதிரடி SALE
கண்ணைக் கவரும் புத்தம் புதிய சாறிவகைகள், ஏராளமான ஆண்,பெண்
சிறுவர், சிறுமியர்களுக்கான புதியதோர் உலகம்!
ஒருமுறை வந்து பாருங்கள்!
ரூபா 3000/= இற்கு மேலாகக் கொள்வனவு செய்கின்ற
ஆண்களுக்கு ஓர் அழகிய சேட்
பெண்களுக்கு ஓர் அழகிய பிளவுஸ் } பரிசு!
(C/38611)

# புஷ்ஷின் வெற்றிக்கு கைகொடுத்தார் ஒஸாமா!

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வெற்றிபெற்று மீண்டும் நான்கு ஆண்டுகாலம் அப்பதவியில் நீடிக்கப்போகிறார் என்பது உறுதியாகிவிட்டது.



இந்தத் தேர்தலில் ஈராக், ஆப்கான் நாடுகள் மீதான அதிபர் புஷ்ஷின் கொள்கைகளே அதிகமாகப் பேசப்பட்டன.

புஷ் அவசரப்பட்டுவிட்டார், தவறிழைத்து விட்டார், ஐ.நாவை மதிக்கத்தவறிவிட்டார், உலகம் முழுவதையும் அமெரிக்காவின் ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கப் பார்க்கிறார் என்றெல்லாம் பிரசாரம் செய்யப்பட்டது.

ஆரம்பக்கட்டங்களில் இந்தப் பிரசாரம் ஓரளவுக்கு புஷ்ஷிற்கு பாதகமாகவே இருந்தது. அதனால், ஜனநாயகக் கட்சிக்காரர்கள் அதிக ஊக்கமடைந்து காணப்பட்டனர்.

புஷ்ஷைப் பொறுத்தவரை அமெரிக்காவின் பாதுகாப்பை உறுதிசெய்து உலகப் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவது என்பதே முக்கிய விடயமாக முன்னெடுக்கப்பட்டது. அமெரிக்காவின் பாதுகாப்பு அவர் கையில்தான் பத்திரமாக இருக்கும் என்றவகையில் அவருடைய கட்சியினர் பிரசாரம் செய்துவந்தனர்.

நாட்டை ஆபத்தில் சிக்கவைத்துவிட்டார், தேசத்தில் பொருளாதாரம் சீரழிந்து போய்விட்டது, இவைகளிலிருந்து மீள்வதற்கு அவரைப் பதவியிலிருந்து அகற்றி ஜோன் கெரியை அப்பதவியில் அமர்த்தவேண்டும் என்று ஜனநாயகக் கட்சியினர் பிரசாரம் செய்துவந்தனர்.

கெரிதரப்பு வாதங்கள் ஆரம்பத்தில் வெற்றியளிப்பதாகவே தென்பட்டது. பத்திரிகை நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் அவ்வப்போது நடத்திவந்த கருத்துக்கணிப்புகள் கெரிககு ஆதரவு அதிகரித்து வருவதாகவே காட்டின.

இரு தலைவர்களும் பகிரங்கமாக நடத்திவந்த நேரடிக் கருத்து மோதல்களிலும் கூட புஷ் பெரிய அளவில் முன்னிலை வகித்தார் என்று கூறிவிடமுடியாது. ஆரம்பக்கட்டங்களில் கெரிக்கு முன்னேற்றம் தெரிந்தது. பின்னர் முன்னும் பின்னுமாக நிலை தளம்பியதே தவிர புஷ் பெரும் எடுப்பில் முன்னேறியிருந்தார் என்று சொல்வதற்கில்லை.

தேர்தலுக்கு ஒருசில தினங்களே இருந்த கட்டத்தில் ஒகை-ஓ மாநிலத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகளில் கெரியே முன்னிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### ஒகை-ஓ மாநிலம்

இந்த மாநிலத்தில் வெற்றிபெறுபவர்களே அமெரிக்காவின் அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருப்பர் என்பது ஒரு பாரம்பரியம்போல் கருதப்பட்டுவந்துள்ளது. அமெரிக்க அதிபர்களாகத் தெரிவானவர்கள் எவருமே இந்த மாநிலத்தில் தோற்றதில்லை. இங்கு வெல்லுபவர் வெள்ளை மாளிகைக்குச் செல்வர் என்பது அமெரிக்கர்களின் ஐதீகமாக இருந்துவந்துள்ளது. இந்த நிலைமையில் ஒகை-ஓ மாநிலத்தில் கருத்துக்கணிப்பின்போது கெரி முன்னிலை வகித்ததானது ஜனநாயகக் கட்சிக்காரர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. குடியரசுக்கட்சியின் மத்தியில் ஒருவித மருட்சி உருவாகத் தலைப்பட்டிருந்தது.

இதேசமயம் முன்னாள் அதிபர் பில் கிளின்ரன் போன்றவர்கள் கெரிக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் குதித்திருந்தமை அவர்களின் உற்சாகத்தை மேலும் அதிகரித்திருந்தது.

### பின்லேடன் அறிக்கை

இந்தக் காலகட்டத்தில்தான் புஷ்ஷின் பரம எதிரியும், உலகப் பயங்கரவாதத்தின் தலைமகன் என்று கருதப்படுபவருமான அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் அல்-ஜெஸீரா தொலைக்காட்சியில் விடுத்த அறிக்கை வெளியாயிற்று.

தேர்தல் ஆரவாரங்களில் ஆழ்ந்துபோய் பின்லேடனையும் அவருக்கு எதிராக புஷ் எடுத்த நடவடிக்கைகளையும் அந்த நடவடிக்கையிலிருந்து நழுவி ஆசியாவின் எங்கோ ஓர் மூலையில் ஒளித்துக்கொண்டிருப்பதையும், ஓரளவுக்கு மறந்துபோயிருந்த அமெரிக்க வாக்காளர்கள் திடீரென விழித்துக்கொண்டார்கள். அவர்களுக்கு, 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி உலக வர்த்தகமையத்தின் இரட்டைக் கட்டடங்கள் மீதும், பென்ரகன் பாதுகாப்புக் கட்டடத்தின் மீதும் பின்லேடனின் அல்கெய்டா தீவிரவாதிகள் விமானங்களைக் கடத்தித் தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய சம்பவம் நினைவுக்குவந்தன. அந்தச் சம்பவத்தில் 4ஆயிரம் பேருக்குமேல் கொல்லப்பட்டமை மனக்கண்களில் ஊசலாடின. இந்தச் செயலை அடுத்து ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதரவில் முகாமிட்டிருந்த பின்லேடன்மீது புஷ் நிர்வாகம் எடுத்த நடவடிக்கைகள் ஈராக்கில் சதாம் ஹுசேனுக்கு எதிராக அவர் மேற்கொண்ட தாக்குதல்கள் யாவும் அவர்களின் மனத்திரையில் ஒரு கணமாவது ஓடியே இருக்கும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.


ஆக, இந்த ஆசாமி மீது தொடுக்கப்பட்ட போரை நிறுத்தினால் என்ன நடக்கும்? பின்லேடன் பிடிபடாமலிருக்கும்வரை அமெரிக்கா மீதான

## அமெரிக்கத் தேர்தல் முடிவு: ஓர் அலசல்....

ஆபத்து நீடிக்கவே செய்யும். எனவே, பின்லேடனுக்கும் அவரது அல்கெய்டா அமைப்புக்கும் எதிரான நடவடிக்கையைப் புஷ் தொடரவேண்டும். புஷ் பதவியில் இன்னுமொரு 4 ஆண்டு காலம் இருப்பதே அமெரிக்காவுக்குப் பாதுகாப்பு என்று வாக்காளர்கள் கருதிவிட்டார்கள். அதன விளைவு கெரிக்கான ஆதரவு பின்னடைந்தது. புஷ் வெற்றிவாகை சூடினார்.

### தெரிந்த பிசாசு

எனவே, "தெரிந்த பிசாசு, தெரியாத பிசாசை விட மேல்" என்ற ஆங்கிலப் பழமொழிக்கேற்ப அமெரிக்கர்கள் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தியுள்ளார்கள்.



புஷ் எந்த நிலைமையில் என்ன மாதிரிச் செயற்படுவார் என்பதை அமெரிக்க மக்கள் கடந்த ஆண்டுகளில் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். பின்லேடனையும் அவரது அல்கெய்டாவையும் அவரால்தான் எதிர்நோக்க முடியும் என்று அமெரிக்கர்கள் தீர்மானித்துவிட்டார்கள் என்று சொல்லலாமல்லவா?

### பின்லேடன் டிமிக்கி

அல் - ஜஸீரா தொலைக்காட்சியில் அண்மையில் தோன்றிய ஒஸாமா பின்லேடன் அமெரிக்க அதிகாரிகளைக் கடுமையாக எச்சரித்துள்ளார். ஆப்கானிஸ்தானுக்கும் - பாகிஸ்தானுக்குமிடையிலான எல்லைப்பகுதியில் அவர் நடமாடிவருவதாக அமெரிக்க இராணுவத்தினர் கருதுகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஆப்கானிஸ்தானில் ஒஸாமா பின்லேடனைத் தேடிவரும் அமெரிக்கப் படையினரால் இன்னமும் அவர் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால், ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைகளில் அவர் காரில் பவனி வருவதாகக்கூடச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அல்-ஜஸீரா தொலைக்காட்சியில் 13 மாதங்களுக்குப் பின்னர் இப்பொழுதுதான் அவர் தோன்றியுள்ளார். ஆப்கானிஸ்தானில் பாறைகள் அடர்ந்த மலைப்பிரதேசத்தில் அவர் நடந்து செல்வது 2003ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இதே தொலைக்காட்சியில் காட்டப்பட்டிருந்தது.

கடைசியாக அவரால் வெளியிடப்பட்டுள்ள ஒலி-ஒளி நாடா நம்பகமானது என்று அமெரிக்க அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

"அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. தெரிந்தால் அடுத்த நிமிடம் நாங்கள் அந்த இடத்தில் இருப்போம்" என்று அமெரிக்க இராணுவ அதிகாரி மேஜர் ஸ்கொட்நெல்சன் என்பவர் கூறியிருக்கின்றார்.

ஒஸாமா எங்கிருக்கிறார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், நிச்சயமாக அவரைப் பிடித்தே தீருவோம் என்று கூறியுள்ளார் மேஜர் நெல்சன். ஆப்கானிஸ்தானில் 2001ஆம் ஆண்டு ஒஸாமா பின்லேடனைப் பிடிக்கவென்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தோல்வியடைந்ததையடுத்து 16ஆயிரம் அமெரிக்கப் படைகளைக் கொண்ட 18ஆயிரம் கூட்டணிப் படைகள்அங்கு நிலைகொண்டுள்ளன.

அமெரிக்க அதிபர் தேர்தலில் புஷ் மீண்டும் வெற்றிபெற்றிருப்பதால், அமெரிக்க மக்களின் ஆதரவு தமக்கு இருப்பதை மனதில் கொண்டு அவர் பின்லேடன் மீதான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவார் என்று எதிர்பார்க்கலாம். அதே சமயம் அமெரிக்கா மீதும் அமெரிக்க நிறுவனங்கள் மீதுமான அல்-கெய்டா அச்சுறுத்தல் குறைந்துவிட்டதாகவும் கொள்ளமுடியாது.

### கர்ஸாய் வெற்றி

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற முதலாவது ஜனநாயக முறையிலான அதிபர் தேர்தலில் அமெரிக்க சார்பான ஹமிட் கர்ஸாய் வெற்றிபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறை அச்சுறுத்தல்களைப் புறக்கணித்துவிட்டு 80 இலட்சம் ஆப்கான் வாக்காளர்கள் ஒரு மாதத்திற்கு முன்னர் அதிபர் தேர்தலில் வாக்களித்தார்கள்.

ஐ.நா.- ஆப்கான் கூட்டு தேர்தல் ஆணைக் குழுவைச் சேர்ந்த பேச்சாளர் சுல்தான் பஹீம் என்பவர் கர்ஸாயி வெற்றிபெற்றிருப்பதாக அறிவித்தார்.


வெற்றிபெற்றமை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டபோது கர்ஸாய் நாட்டில் இல்லை. அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஷின் அதிபர் ஷெய்க் சையத்பின் சுல்தான் அல் - நகயானின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக அங்குசென்றிருந்தார்.

கர்ஸாய் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செய்தி வெளியான அதே வேளையில் ஐ.நா. தேர்தல் அலுவலர்கள் மூவரைத் தீவிரவாதிகள் கடந்தவாரம் கடத்திச் சென்றிருப்பது ஆப்கான் அதிகாரிகளைக் கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

வட அயர்லாந்தைச் சேர்ந்த அன்னெட்டா பிளறிகன், செர்பியாவின் முஸ்லிம் அதிகமாக வாழும் றொஸொவோவைச் சேர்ந்த ஹிகிப்பே ஹபிபி மற்றும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த அங்கலிட்டோ நயான் ஆகிய ஐ.நா. அலுவலர்களே கடத்திச்செல்லப்பட்டுள்ளவர்களாவர். தேர்தல் முடிவுகள் வெளியான தறுவாயில் காபூல் வீதியொன்றில் ஐ.நா. அடையாளமிட்ட வாகனமொன்றிலிருந்து அவர்கள் ஆயுததாரிகளால் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்கள்.

### எமிரேட்டுகளின் அதிபர் மறைவு

வளைகுடா நாடுகளில் எண்ணெய் வளமிக்க ஐக்கிய அரபு எமிரேட்டுக்களின் அதிபர் ஷெய்க் சையத் பின் சுல்தான் அல் - நகயான் கடந்த செவ்வாயன்று காலமானதையடுத்து அரபுத்தலைவர்கள் பலரும் அபுதாபியில் வந்திறங்கியிருந்தார்கள். அதிபரின் நல்



லடக்கம் புதனன்று இடம்பெற்றது.

அரபு எமிரேட்டுகளை ஒன்றிணைத்து எண்ணெய்வள நாடாகக்கட்டியெழுப்பியவர் செய்க் செய்யத் என்று புகழப்படுகின்றார். புதன் கிழமை இடம்பெற்ற அவரது நல்லடக்கத்தில் கலந்துகொள்ள அரபுத் தலைவர்கள் பலரும் வருகைதந்திருந்தனர்.

### உலக வலம்

மேனா

அபுதாபி, துபாய், ஷார்ஜா, அஜ்மான், புஜாய்ரா, நஸ் அல் - கெய்மா மற்றும் உம் அல் - காய்வாயின் ஆகிய ஏழு ராஜ்யங்களைக் கொண்டது ஐக்கிய அரபு எமிரேட்டுக்கள் எனபபடும் கூட்டமைப்பு இந்த அரசுகளின் தலைவர்கள் கூடி அதிபரைத் தேர்ந்தெடுக்கவிருக்கிறார்கள். செய்க் மக்டோப் காலமானதையடுத்து உதவி அதிபர் செயிக்புக்ஆடாம் பின் ராஷட் அல் - மக்கட்டோம் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் துபாய்க்கும் அதிபராகவிருக்கின்றார்.

புதிய அதிபர் தெரிவாகும்வரை இவர் பதவிவகிப்பார் காலமான அதிபரின் மூத்த புதல்வர் முடிக்குரிய இளவரசர் செய்க் காலீன் பின் கைசயத் அல் - நகயான் தன்தைப்பிறகு அரபு துபாயின் ஆட்சியாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஏழு நாடுகளின் தலைவர்களைக்கொண்ட அதியுயர்சபை விரைவில் கூடிய புதிய அதிபரைத் தேர்ந்தெடுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்டுக்களின் மிகப்பெரியதும் செல்வமிக்கதுமான அபுதாபியின் அரசர் செயக் காஸாபின் செய்யது புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★

### பிரிட்டனில் புகைத்தலுக்குத் தடை

பிரிட்டனில் பொது இடங்கள், அலுவலகங்கள் மற்றும் உணவு விடுதிகளில் புகைத்தலுக்குத் தடைவிதிக்க பிரிட்டிஷ் அரசு ஆலோசித்து வருகின்றது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம்பெறும் இடங்களில் மட்டும் புகைத்தல் அனுமதிக்கப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

புகைத்தலைத் தடுப்பதற்கு இலங்கையும் இவ்வாறு நடவடிக்கை எடுப்பது நல்லது. புகைப்பவர்கள் தங்களுக்கு மட்டுமல்ல பிறருக்கும் இடைஞ்சல் ஏற்படுத்துகிறார்கள்.

### டிரக்குலாவின் சந்ததிகள்

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான பிரசார காலத்தில் இணையத்தளமொன்றில் வெளியான நம்பகமான தகவல் ஒன்றின்படி போட்டியிட்ட இருவரும் ஒருகாலத்தில் அமெரிக்காவில் வாழ்ந்தார் என்று கூறப்படும் இரத்தம் குடிக்கும் டிரக்குலாவின் வழித்தோன்றல்களாவர்.

இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கிராபிக் படமொன்றில் இன்றைய போட்டியாளர்களின் மூதாதையரான டிராக்குலா தேர்தலில் வாக்களிக்கவந்து எவருக்கு வாக்களிப்பது என்று தெரியாமல் விழிப்பதுபோல் காட்டப்பட்டுள்ளது. வலாச்சியாவின் இளவரசர் விலாடிஇல் என்பர் இரத்தம் குடிக்கும் டிராக்குலா என்று அழைக்கப்பட்டவர். புஷ் - கெரி இருவரும் டிராக்குலாவின் 34ஆவது வழித்தோன்றல்கள் என்று அந்த இணையத்தளம் விவரித்தது.

டிராக்குலா என்பவர் ஒருகாலத்தில் அமெரிக்காவில் வாழ்ந்தவர் என்றும் இவர் மனிதர்களைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சியவர் என்றும் கருதப்படுகின்றது.

டிராக்குலாவின் வழித்தோன்றல்கள் 10 ஆயிரம் பேருக்குமேல் அமெரிக்காவில் இருப்பதாக அந்த இணையத்தளம் தெரிவித்திருந்தது.

## வியாபாரிகளே! வாடிக்கையாளர்களே!!

இந்தியாவின் புகழ்பெற்ற

ALCO பெனியன்கள், கைக்குட்டைகள், ஜட்டிகள் இப்போது இலங்கையில்




சாரங்கள்

குறைவான விலை! நிறைவான சாரங்கள்!!



கிப்ஸ் (KIBS) சாரங்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்த ஓஷியானிக் இம்பெக்ஸ் ஸ்தாபனத்திற்கு சென்னை அக்யூரேட் லுங்கி கம்பனியின் தயாரிப்புக்களை விநியோகம் செய்வதற்கு நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை!

Tel: 011 2384131 Fax: 011 2326961

ஏக விநியோகஸ்தர்கள்:

OCEANICK IMPEX

ஓஷியானிக் இம்பெக்ஸ்

192, Main Street, Colombo-11

Tel: 2327168, 2336720


### வைத்தியசாலை சிரமதானம் மூலம் துப்புரவு

சாவகச்சேரி,நவ.7

கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

சித்த ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரி, தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனிடம் இவ்விடயம் பற்றித் தெரிவித்ததையடுத்து நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் சிரமதானம் நடைபெறவுள்ளது.

இச்சிரமதானப் பணி தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேசசபைகளின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது. (8-31)

### உணவுச்சாலைகள் சோதனை

தென்மராட்சி,நவ.7

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள உணவு நிலையங்கள் சுகாதாரப் பகுதியினரால் அடிக்கடி பரிசோதனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதை அடுத்துத் தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதால் உணவுநிலையங்கள் மீது அடிக்கடி பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (10-117)

## சேவை நலன் பாராட்டு 07-11-2004



செல்வி **பா.இராமலிங்கம்** (உப அதிபர்)

(B.A.Dip.in.Edu. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I)

அகவை முப்பத்து இரண்டில் ஆசிரியப் பணி ஏற்று
திருமலை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஏற்றபணி
திறம்படத் தொடர்ந்திட சொந்த ஊர் சேர்ந்திங்கு
நலமுறச் சேவையாற்றிட சைவப்பிரகாச வித்தியாசாலை.
அறிவொளியூட்டி அரும்பணி புரிந்து ~ உப
அதிபருமான அம்மணி இராமலிங்கம்
அகவை அறுபதில் ஓய்வை எய்தினார்
ஆசிரியப் பணி வாழ்க, ஆசிரியை வாழ்க, வாழ்க.

யா/இணுவில் இந்துக் கல்லூரி. - ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

(38339)(34-13-18)

## 45 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **முருகன் சிவஞானம்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18.04.1950 | 23.09.2004 |

கீழ்க்கரவை - மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு நீண்டகாலம் வசித்து மணற்பாதி, கரணவாய் கிழக்கைத் தற்போது வதிவிடமாகக் கொண்டிருந்த அமரர் **முருகன் சிவஞானம்** அவர்களது 45 ஆம் நாள் நிகழ்வுகளும் அந்தியேட்டிக் கிரியையும் இன்று (07.11.2004) ஞாயிற்றுக்கிழமை மணற்பாதி, கரணவாய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணற்பாதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(சி-38665)(34-18-13)

## கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு

## தொழிற்பயிற்சிகள்

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த/இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8 இல் அல்லது அதற்கு மேல் சித்திபெற்ற இளைஞர், யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு - அதனோடு குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி மூலம் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

1. **அலுமினியம் கட்டுமானப் பயிற்சிநெறி** - கொழும்பு மாவட்டம்
   Aluminium Fabricators Course
2. **தச்சுவேலை (இயந்திர) பயிற்சிநெறி** - திருகோணமலை மாவட்டம்
   Carpentry (Mechanised) Course
3. **பார இயந்திர இயக்குநர் பயிற்சிநெறி** - அநுராதபுர மாவட்டத்தில் உள்ள கல்குளம் பிரதேசம்
   Machinery Operator Course

இப்பயிற்சிநெறிக்கு தெரிவுசெய்யப்படுவோருக்கு தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமைகள்**

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விடமாக/பிறந்த இடமாகக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தரம் 8 அல்லது அதற்கு மேல் சித்தி பெற்றிருத்தல்.
3. பாரஊர்திச் சாரதி - அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (வகுப்பு ஏ) (இயந்திர இயக்குநர் பயிற்சிக்கு விண்ணப்பிப்போருக்கு மட்டும்)
4. 17 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதும் இருத்தல்.
5. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் இருத்தல்.

மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியுடன் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தை "A4" அளவுத்தாளில் தயாரித்து பூரணப்படுத்தி 30.11.2004 ஆம் திகதிக்கு முன்

**பணிப்பாளர் - தொழிற்பயிற்சி**
கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி,
வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.
2ஆம் மாடி,
64, காலி வீதி,
கொழும்பு - 03.
என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**க. மகானந்தன்,**
**செயலாளர்.**

## பயிற்சிநெறிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிக்கும் பயிற்சிநெறி:- ....................
2. முழுப்பெயர், ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்) :- ....................
3. முதல் எழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :- ....................
4 விலாசம், ஆங்கிலத்தில்:- ....................
5 முழுப்பெயர், தமிழில்:- ....................
6 இலங்கைப் பிரஜையா? ஆம்/இல்லை:- ....................
7 தேசிய அடையாள அட்டை இல. :- ....................
8 ஆண்/பெண்:- ....................
9. குடியியல் நிலை :- ....................
10. பிறந்த திகதி :- ....................
11. (1) பிறந்த மாவட்டம் :- ....................
    (2) தேர்தல் மாவட்டம் :- ....................
    (3) தேர்தல் தொகுதிப் பிரிவு:- ....................
12. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பாடம், ஆண்டுகளுடன்) :-

13. வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் தகைமைகள் (பெற்றிருப்பின்) :-

| நிறுவனம் | துறை | காலம் |
|---|---|---|
| | | |

14. மொழித் தேர்ச்சி :-

| | வாசித்தல் | எழுதுதல் | பேசுதல் |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |
| சிங்களம் | | | |

15. தொழில் அனுபவம் (இருப்பின்) :-

| காலம் (மாதங்களில்) | தொழில் புரிந்த இடம் | மாதாந்த வேதனம் ரூபா. |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

இத்துடன் தேசிய அடையாள அட்டையின் (இருபுறம்) நிழற்பிரதி சமர்ப்பிக்கின்றேன்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதுமென வெளிப்படுத்துகிறேன். பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளதென எச்சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என நான் நன்கறிவேன்.

.................... ....................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

(C/38552)(42-34-13-18)

# மீட்புநிதி கடன் மீளளிப்பு - 2004

யாழ்ப்பாணம்,நவ.7

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டோரில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந் தோரின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட் டோரில் ஒரு பகுதியினரின் விவரங்கள் இங்கு பிரசுரமாகின்றது.

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| ந/23 | சுந்தரம் மார்க்கண்டு |
| ந/32 | நமசிவாயம் பொன்னுத்துரை |
| ந/62 | மயில்வாகனம் சோமசுந்தரம் |
| ந/95 | மார்க்கண்டு ஞானசுந்தரம் |
| ந/101 | சிவக்கொழுந்து கந்தையா |
| ந/122 | செல்லர் பொன்னையா |
| ந/126 | சபாபதி பரமநாதன் |
| ந/128 | செல்லப்பா பேரம்பலம் |
| ந/132 | பொன்னம்பலம் இராசையா |
| ந/134 | இராசையா இராசநாயகம் |
| ந/206 | தம்பையா சீவரத்தினம் |
| ந/226 | பொன்னையா அரியரத்தினம் |
| ந/274 | கந்தையா இரத்தினம் |
| ந/285 | அப்பாப்பிள்ளை சுப்பையா |
| ந/343 | சின்னத்தம்பி முத்தையா |
| ந/393 | செல்லையா இராசையா |
| ந/434 | கதிரவேலு சுந்தரம்பிள்ளை |
| ந/475 | குயின்ரின் செல்வகுமார் யேசுதாசன் |
| ந/492 | சுப்பையா நாகலிங்கம் |
| ந/507 | ஐயாத்துரை இராசதுரை |
| ந/522 | செங்காரப்பிள்ளை சொக்கலிங்கம் |
| ந/545 | தம்பிப்பிள்ளை தயாளரட்ணம் |
| ந/575 | வல்லிபுரம் கதிர்த்தம்பி |
| ந/628 | செல்லையா சிவஞானம் |
| ந/725 | கார்த்திகேசு மதியாபரணம் |
| ந/786 | சுப்பிரமணியம் பரமேஸ்வரன் |
| ந/808 | சடாச்சரம் சோமலிங்ககுமார் |
| ந/809 | சின்னத்தம்பி சுப்பிரமணியம் |
| ந/894 | வீரசிங்கம் கனகரத்தினம் |
| ந/910 | தாமேதரம்பிள்ளை வைத்திலிங்கம் |
| ந/917 | பரராஜசிங்கம் பாலசிங்கம் |
| ந/947 | வல்லிபுரம் காளிதாசன் |
| ந/999 | சரவணமுத்து பொன்னம்பலம் |
| ந/1004 | நல்லதம்பி பசுபதிப்பிள்ளை |
| ந/1009 | கந்தையா பொன்னுத்துரை |
| ந/1015 | திருமதி லீலாவதி ராஜசிங்கம் |
| ந/1057 | சின்னத்துரை தயாபரன் |
| ந/1067 | திருமதி சின்னத்தங்கச்சி நாகரத்தினம் |
| ந/1083 | முத்துத்தம்பி சுகிர்தலிங்கம் |
| ந/1110 | நாகலிங்கம் திருவிளங்கம் |
| ந/1127 | ஆசைப்பிள்ளை அழகக்கோன் |
| ந/1129 | திருமதி கேதீஸ்வரி கந்தப்பசேகரம் |
| ந/1142 | கந்தையா கதிர்காமத்தம்பி |
| ந/1152 | செல்லத்துரை கனகரெத்தினம் |
| ந/1160 | திருமதி யோகம்மா கந்தையா |
| ந/1203 | கிருஷ்ணபிள்ளை நாகராசா |
| ந/1232 | கார்த்திகேசு இரத்தினசபாபதி |
| ந/1256 | கனகரத்தினம் சோமசுந்தரம் |
| ந/1279 | திருமதி சுந்தரலட்சுமி நடராசா |
| ந/1296 | சபாரத்தினம் வேலும்மயிலும் |
| ந/1320 | சின்னத்துரை கனகரத்தினம் |
| ந/1342 | திருமதி இராசலட்சுமி முத்துக்குமாரு |
| ந/1366 | செல்வி செல்வராணி நடராஜா |
| ந/1397 | செல்லமாணிக்கம் சுப்பிரமணியம் |
| ந/1419 | லூதர்ஜோர்ஜ் இராஜரட்ணம் |
| ந/1424 | திருமதி யோகம்மா சிவகுருநாதன் |
| ந/1437 | திருமதி இரத்தினபூசணம் சின்னத்துரை |
| ந/1439 | வல்லிபுரம் முத்துக்குமாரு |
| ந/1440 | குமாரசாமி ராஜ்குமார் |
| ந/1451 | முத்தையா கணபதிப்பிள்ளை |
| ந/1457 | சின்னத்தம்பி நாகராசா |
| ந/1461 | திருமதி கிருபைமலர் பொன்னுத்துரை |
| ந/1491 | செல்லத்துரை வைரமுத்து |
| ந/1528 | செல்லத்துரை இராசையா |
| ந/1585 | கந்தையா கனகரத்தினம் |
| ந/1594 | கந்தையா கதிரவேலு |
| ந/1604 | திருமதி புவனேஸ்வரி மாசிலாமணி |
| ந/1609 | திருமதி மீனாட்சியம்மா நடராஜசர்மா |
| ந/1654 | வேலுப்பிள்ளை இராசையா |
| ந/1665 | சின்னத்தம்பி இராசையா |
| ந/1729 | திருமதி தங்கம்மா கந்தையா |
| ந/1756 | மோர்சஸ் ஜெயராசா |
| ந/1795 | வீரகத்தி இராசையா |
| ந/1858 | மாணிக்கம் இளையவன் |
| ந/1886 | ஆறுமுகம் கனகலிங்கம் |
| ந/1894 | இராசா கனகசபாபதி |
| ந/1897 | தாமோதரம்பிள்ளை கிருஷ்ணசாமி |
| ந/1903 | நாகலிங்கம் காசிப்பிள்ளை |
| ந/1924 | சங்கரப்பிள்ளை மயில்வாகனம் மகேசன் |
| ந/1960 | சிறிரங்கம் பொன்னையா |
| ந/1982 | முத்துவேல் பஞ்சாட்சரம் |
| ந/1985 | அருணாசலம் பரமநாதன் |
| ந/2002 | நல்லதம்பி இராசரத்தினம் |
| ந/2008 | வைத்திலிங்கம் இரத்தினம் |
| ந/2020 | பொன்னையா செல்வராசா |
| ந/2053 | இராமலிங்கம் சுப்பிரமணியம் |
| ந/2094 | சிதம்பரநாதர் தம்பு |
| ந/2119 | றப்பியேல் பர்னாந்து. அருளானந்தம் |
| ந/2140 | மத்தேசு யோண் |
| ந/2151 | சிமியோன் குருசுமுத்து |
| ந/2186 | ஆறுமுகம் கந்தசாமி |
| ந/2230 | வே.முத்தையா பேரம்பலம் |
| ந/2247 | இராமுப்பிள்ளை பொன்னம்பலம் |
| ந/2259 | துரையப்பா பஞ்சரத்தினகோபால் |
| ந/2303 | பொன்னம்பலம் சீவரத்தினம் |
| ந/2374 | கந்தையா திருச்செல்வம் |
| ந/2375 | திருமதி தெய்வானை கனகசபை |
| ந/2392 | வல்லிபுரம் வைத்திலிங்கம் |
| ந/2402 | திருமதி அன்னபூரணம் நாகரத்தினம் |
| ந/2418 | பொன்னையா மார்க்கண்டு |
| ந/2434 | திருமதி இரத்தினபூபதி இராமநாதன் |
| ந/2436 | பஞ்சாட்சரக்குருக்கள் சர்வேஸ்வரக்குருக்கள் |
| ந/2440 | திருமதி சற்குணவதி நாக்லிங்கம் |
| ந/2463 | பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை |
| ந/2536 | வேலுப்பிள்ளை துரையப்பா |
| ந/2552 | சீனியர் வீரவாகு |
| ந/2569 | திருமதி பவளம் பாலசிங்கம் |
| ந/2600 | வைத்திலிங்கம் கந்தையா |
| ந/2609 | சீவரத்தினம் கனகசபாபதி |
| ந/2637 | சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை |
| ந/2669 | நாகலிங்கம் இராசரத்தினம் |
| ந/2695 | சின்னையா சிவஞானம் |
| ந/2722 | சுப்பையா சோமசுந்தரம் |
| ந/2769 | இலங்கையர் வேலாயுதம் |
| ந/2771 | கந்தர் வைத்திலிங்கம் |
| ந/2782 | சபாரட்ணம் அருளம்பலம் |
| ந/2790 | சுப்பிரமணியம் அருளானந்தம் |
| ந/2818 | முத்தையா கைலாசபிள்ளை |
| ந/2868 | வயித்தியநாதர் தம்புநல்லையா |
| ந/2891 | திருமதி பத்மாசனி இராசையா |
| ந/2893 | சுப்பையா பஞ்சரத்தினம் |
| ந/2900 | மாணிக்கம் சம்பந்தர் பிரான்சிஸ் |
| ந/2919 | வல்லிபுரம் இராசையா |
| ந/2953 | சரவணமுத்து சதாசிவம் |
| ந/3127 | சின்னத்துரை கைலாசபிள்ளை |
| ந/3141 | வல்லிபுரம் மகேசன் |
| ந/3168 | சபாபதிப்பிள்ளை நடேசர் |
| ந/3177 | மத்தேசு பொன்னுத்துரை |
| ந/3198 | விசுவலிங்கம் பஞ்சரத்தினம் |
| ந/3244 | திருமதி செல்லம்மா பொன்னுத்துரை |
| ந/3315 | வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை சண்முகராசா |
| ந/3330 | சுப்பிரமணியம் தாமோதரப்பிள்ளை |
| ந/3350 | பொன்னுச்சாமி தருமலிங்கம் |
| ந/3382 | திருமதி யோகம்மா கைலாசபிள்ளை |
| ந/3426 | கந்தையா இராசையா |
| ந/3457 | சின்னையா குமாரசூரியர் |
| ந/3459 | சண்முகம் சின்னப்பு இராமசாமி |
| ந/3527 | திருமதி பரிபூரணம் சின்னத்துரை |
| ந/3549 | வேலுப்பிள்ளை சபாரத்தினம் |
| ந/3552 | சக்கரியாஸ் சந்தியப்பிள்ளை |
| ந/3567 | மாதன் சரவணமுத்து |
| ந/3614 | வைத்திலிங்கம் .நடராசா மாணிக்கவாசகர் |
| ந/3684 | முத்துலிங்கம் தங்கராசன் |
| ந/3697 | கனகசபை இரங்கநாதன் |
| ந/3712 | தங்கமுத்து நாகலிங்கம் |
| ந/3734 | சுப்பிரமணியம் சத்தியநாதன் |
| ந/3779 | தம்பு தர்மலிங்கம் |
| ந/3783 | சின்னத்தம்பி சச்சிதானந்தம் |
| ந/3793 | இரத்தினம் நவரத்தினம் |
| ந/3821 | திருமதி புவனேஸ்வரி சிவனேசன் |
| ந/3826 | கனகசபை .சிவகுருநாதர் தாமோதரம்பிள்ளை |
| ந/3860 | செல்லையா பழனித்துரை |
| ந/3866 | சின்னத்துரை இலங்கநாதன் |
| ந/3879 | செல்லையா பொன்னுத்துரை |
| ந/3883 | செல்லையா செல்வப்பிரகாசம் |
| ந/3921 | திருமதி அன்னம்மா இராமசாமி |
| ந/3950 | சுப்பிரமணியம் நடராசா |
| ந/3973 | மயில்வாகனம் மகேந்திரன் |
| ந/3979 | பொன்னையா கந்தசாமி |
| ந/3998 | திருமதி கமலாதேவி நடராசா |
| ந/4037 | மார்க்கண்டு இராசேந்திரம் |
| ந/4064 | சின்னத்தம்பி குமாரசாமி |
| ந/4067 | திருமதி கமலாசினி சின்னையா |
| ந/4097 | செல்லத்துரை முத்துக்குமாரு |
| ந/4103 | திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர் |
| ந/4131 | சங்கரப்பிள்ளை செல்வரெத்தினம் |
| ந/4140 | கந்தப்பு தாமோதரம்பிள்ளை |
| ந/4150 | திருமதி சிவபாக்கியம் சிவஞானசுந்தரம் |
| ந/4163 | வீரகத்தி சண்முகரத்தினம் |
| ந/4205 | திருமதி லீலாவதி நடராசா |
| ந/4298 | கந்தையா சின்னையா |
| ந/4315 | நாகலிங்கம் சின்னத்துரை |
| ந/4321 | இளையதம்பி நடராசா |
| ந/4333 | வைரவநாதர் ஞானானந்தன் |
| ந/4367 | செல்லர் சிவராசா |
| ந/4394 | தம்பிமுத்து தம்பிநாதன் |
| ந/4420 | பொன்னம்பலம் நடராசா |
| ந/4492 | கந்தையா சண்முகம் |
| ந/4493 | ஜோசப் தேவசகாயம் |
| ந/4524 | திருமதி லக்சுமி கந்தசாமி |
| ந/4571 | கணபதி செல்லத்துரை |
| ந/4586 | வீரவாகு ஐயாத்துரை |
| ந/4589 | ஆறுமுகம் கணபதிப்பிள்ளை |
| ந/4628 | அம்பலவாணர் கண்ணுத்துரை |
| ந/4656 | அப்புக்குட்டி தம்பிஐயா |
| ந/4689 | திருமதி கமலேஷ்வரி இரத்தினசிங்கம் |
| ந/4708 | தம்பையா கனகராஜா |
| ந/4751 | திருமதி கனகாம்பிகை சிவசிவாப்பிள்ளை |
| ந/4767 | திருமதி நித்தியானந்தராணி முத்துக்குமாரசாமி |
| ந/4780 | மதியாபரணம் குணரட்ணம் |
| ந/4784 | ஆறுமுகம் இராசரத்தினம் |
| ந/4808 | தில்லையம்பலம் பரம்ஜோதி |
| ந/4833 | கனகசபை செல்லையா |
| ந/4836 | திருமதி நளினாதேவி சுகுமாரன் |
| ந/4848 | திருமதி சத்தியவல்லி நடராசா |
| ந/4895 | கந்தையா நாகலிங்கம் |
| ந/4910 | செல்லத்துரை வினாயகமூர்த்தி |
| ந/4920 | அப்பாத்துரை நடராசா |
| ந/4928 | திருமதி இரத்தினம் கனகரத்தினம் |
| ந/4946 | திருமதி மலர் செல்வராஜா |
| ந/4948 | பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம் |
| ந/4963 | அருணாசலம் முத்துத்தம்பி |
| ந/4974 | துரைசிங்கம் நடராசா |
| ந/4976 | றொஜேஸ் அரசரட்ணம் ஜோசப் |
| ந/5022 | திருமதி சிவகாமிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| ந/5099 | மயில்வாகனம் சிவகுமார் |
| ந/5125 | வேலாயுதர் சின்னத்தம்பி |
| ந/5148 | திருமதி இராசம்மா நடராசா |
| ந/5184 | கந்தையா தருமலிங்கம் |
| ந/5379 | கதிரிப்பிள்ளை சீனிவாசகம் |
| ந/5384 | முருகேசு சுப்பிரமணியம் |
| ந/5386 | அருணாசலம் கனகரட்ணம் |
| ந/5426 | முருகேசு தம்பிஐயா |
| ந/5479 | சின்னத்தம்பி மாசிலாமணி |
| ந/5509 | சோமசுந்தரம் பொன்னுத்துரை |
| ந/5577 | பசுபதிக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள் |
| ந/5604 | கார்த்திகேசு பாலசிங்கம் |
| ந/5610 | கணபதிப்பிள்ளை மயில்வாகனம் |
| ந/5688 | சீனிவாசகம் ஆனந்தசுந்தரம் |
| ந/5724 | திருமதி சாயுச்சியம் தம்பிஐயா |
| ந/5738 | சின்னப்பு கனகரத்தினம் |
| ந/5767 | பண்டாரி பொன்னன் |
| ந/5785 | திருமதி மனோன்மணி இராசதுரை |
| ந/5787 | திருமதி சிவகங்கை சதாசிவம் |
| ந/5839 | திருமதி இலட்சுஅம்மாள் பஞ்சாட்சரக்குருக்கள் |
| ந/5872 | திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை |
| ந/5873 | சிவகுரு ஆனந்தராசா |
| ந/5929 | செல்லையா சிவசுப்பிரமணியம் |
| ந/5938 | சின்னத்துரை நடராசா |
| ந/5958 | திருமதி விசாலாட்சி கந்தையா |
| ந/5995 | சபாபதிப்பிள்ளை பரராசசிங்கம் |
| ந/5998 | சுந்தரம் பாலசுப்பிரமணியம் |
| ந/6053 | அப்பாபிள்ளை சிதம்பரநாதன் |
| ந/6055 | தம்பிப்பிள்ளை இராசரத்தினம் |
| ந/6059 | திருமதி மாணிக்கம் நடேசு |
| ந/6083 | சின்னையா இராசநாயகம் |
| ந/6111 | திருமதி நாகம்மா கணபதி |
| ந/6118 | நாகர் குழந்தை |
| ந/6167 | வீரகத்தி தங்கராசா |
| ந/6195 | செல்லப்பா கனகசபை |
| ந/6209 | இளையதம்பி பொன்னையா |
| ந/6219 | பஞ்சாட்சரக்குருக்கள் இரத்தினசபாபதிக்குருக்கள் |
| ந/6221 | திருமதி இரத்தினம்மா வேலாயுதபிள்ளை |
| ந/6223 | வயிரவநாதன் நடராசா |
| ந/6231 | திருமதி கண்மணி இராசையா |
| ந/6247 | சண்முகம் சின்னக்கிளி |
| ந/6249 | கந்தையா செட்டியார் ஆறுமுகம் |
| ந/6277 | ஐயன் அப்புத்துரை |
| ந/6313 | சுப்பையா கணேசபிள்ளை |
| ந/6334 | செல்லையா சதாசிவம் |
| ந/6341 | பொன்னம்பலம் செல்வரத்தினம் |
| ந/6354 | செல்லப்பா பரமு |
| ந/6366 | திருமதி சின்னம்மா நடராஜா |
| ந/6426 | செல்லையா கந்தசாமி |
| ந/6469 | திருமதி பொன்னம்மா வல்லிபுரம் |
| ந/6473 | திருமதி இராசம்மா செல்லத்துரை |
| ந/6476 | சண்முகம் சின்னையா |
| ந/6490 | சண்முகப்பிள்ளை மயில்வாகனம் |
| ந/6537 | வேலுப்பிள்ளை சிவராமலிங்கம் |
| ந/6543 | செல்லையா கனகசபாபதி |
| ந/6564 | திருமதி கனகம்மா குணரத்தினம் |
| ந/6636 | திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் |
| ந/6673 | யோசேப் அப்புத்துரை |
| ந/6692 | திருமதி பாக்கியம் வைத்திலிங்கம் |
| ந/6706 | தம்பு இரத்தினலிங்கம் |
| ந/6728 | செல்வி லிசிஞானமணி தம்பையா |
| ந/6735 | ஆறுமுகம் ஐயாத்துரை |
| ந/6737 | செல்வி சௌந்தரராணி யூகன் |
| ந/6822 | அம்பலவாணர் சுந்தரராசா |
| ந/6837 | வல்லிபுரம் செல்லத்துரை |
| ந/6870 | மாரியப்பா நாகரட்ணசெட்டியார் |
| ந/6912 | திருமதி சரஸ்வதி நல்லையா |
| ந/6937 | பொன்னையா பாலச்சந்திரன் |
| ந/6948 | கனகசபை திருநாவுக்கரசு |
| ந/6955 | ஆறுமுகசாமி குகேந்திரா |
| ந/6971 | செல்லப்பா மயில்வாகனம் |
| ந/6972 | திருமதி நேசராணி சின்னையா |
| ந/6994 | வயிரமுத்து பொன்னையா |
| ந/7011 | திருமதி தீபகாந்திஅம்மா இரத்தினசபாபதி |
| ந/7019 | செல்லத்துரை சபாரத்தினம் |
| ந/7029 | பரமசாமி சேதுப்பிள்ளை |
| ந/7088 | செல்லப்பா ஆறுமுகம் |
| ந/7120 | முத்தையா செல்வராஜா |
| ந/7135 | திருமதி ஞானரட்ணம்மாள் சின்னத்தமபி |
| ந/7137 | திருமதி சரஸ்வதி சுயம்புலிங்கநாதன் |
| ந/7216 | திருமதி செல்வமணி தவரட்ணசிங்கம் |
| ந/7217 | திருமதி நாகம்மா கந்தசாமி |
| ந/7221 | திருமதி சிவபாக்கியம் கந்தையா |
| ந/7224 | இராசலிங்கம் நடராசா |
| ந/7297 | செல்லப்பா செல்வராஜா |
| ந/7304 | திருமதி திரேசா ஜோசப் |
| ந/7344 | வேலுப்பிள்ளை சதாசிவம் |
| ந/7382 | திருமதி மாணிக்கம் வள்ளியம்மை |
| ந/7405 | கதிரவேல் விவேகானந்தன் |
| ந/7408 | திருமதி கமலாதேவி சுந்தரலிங்கம் |
| ந/7410 | திருமதி சின்னாச்சி தம்பு |
| ந/7416 | சி.பொன்னையா மயில்வாகனம் |
| ந/7465 | அருணாசலம் இராசகுலபாலசூரியர் |
| ந/7506 | வீரகத்தி பரமநாதன் |
| ந/7541 | துரைராசா புலேந்திரன் |
| ந/7573 | கனகரட்ணம் பூபாலசிங்கம் |
| ந/7606 | வைரவப்பிள்ளை சபாபதி |
| ந/7624 | வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| ந/7685 | யோசப் அன்ரன் பிறின்ஸ் |
| ந/7692 | முத்து கந்தையா |
| ந/7732 | செல்வி செல்வராணி சோமசுந்தரம் |
| ந/7752 | திருமதி அருளம்மா சின்னத்துரை |
| ந/7765 | திருமதி நாகரத்தினம் இராசசுந்தரம் |
| ந/7767 | துரையப்பா இராசையா |
| ந/7779 | சதாசிவம் தர்மலிங்கம் |
| ந/7796 | ஆறுமுகம் சுப்பிரமணியம் |
| ந/7821 | சிவராமலிங்கம் மகேசன் |
| ந/7840 | பெனடிற் இம்மானுவல் சபாரட்ணம் |
| ந/7854 | தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை |
| ந/7860 | வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி |
| ந/7861 | கதிரவேலு சுப்பிரமணியம் |
| ந/7862 | நல்லையா இராசநாயகம் |
| ந/7867 | பரமு தாமோதரம்பிள்ளை |
| ந/7871 | இரத்தினசபாபதி தவபாலன் |
| ந/7875 | திருமதி ஜெயராணி கனகசூரியர் |
| ந/7888 | திருமதி றோகினிஅம்மா மயில்வாகனம் |
| ந/7921 | தம்பிராசா குருசாமி |
| ந/7922 | ஆறுமுகம் கந்தசாமி |
| ந/7944 | திருமதி மேரிஜெபமணி முத்தையா |

*(தொடரும்)*

உ

காரைநகர். பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்

## விசேட அறிவித்தல்

தற்சமயம் அறங்காவலர் சபையில் நிர்வாகமாற்றம் ஏற்பட்டுள்ளமையால், இக்கோயிலுக்கு நன்கொடை செய்யவிரும்பும் அம்பிகை அடியார்கள், அறங்காவலர் சபைத் தலைவரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

அன்பளிப்புச் செய்யவிரும்பும் அடியார்கள் அதனைக் காசோலையாகவோ (Crossed & Account Payee Only) காசுக்கட்டளையாகவோ பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரியில் இருக்கும் இலங்கை வங்கிகளிலுள்ள இக்கோயிலின் கணக்கில் வைப்புச் செய்யவும்.

பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோயில்

| | |
|---|---|
| இலங்கை வங்கி, | இலங்கை வங்கி, |
| City Office | Second City Branch |
| A/C No.01000.200.762.3 | A/C No.500.01.1159.4 |
| பிறிஸ்டல் வீதி, கொழும்பு-01. | ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |

நன்கொடை நிதியை நேரடியாக வைப்புச் செய்த ரசீதை (Deposit Slip) திரு.ச.ச.இராசரத்தினம், அறங்காவலர் சபைத தலைவர், 98, விவேகானந்த மேடு, கொழும்பு - 13 என்ற விலாசத்திற்கு அனுப்பிக் கோயில் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் பெயரால் வேறு எவருக்கும் எக்காரணம் கொண்டும் வேறு அங்கத்தவர்களிடமோ, பண உதவி அல்லது தங்கநகைகள் எதனையும் கையளிக்க வேண்டாம் என்றும் அம்பிகை அடியார்களை மிகவும் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

(சி-38561) (34-14-44-24)

தலைவர், அறங்காவலர் சபை,
பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்.

## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் காயம்!

கிளிநொச்சி,நவ.7

முழங்காவில் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்றுமுன் தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யோகரத்தினம் விஜயகாந்தன் (வயது 21) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோதே இந்த விபரீதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் கிளிநொசசி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிசசையின் பொருட்டு நேற்றுமுன் தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(8-12)

## மன்னார் நீதிமன்று அனுமதி

கொழும்பு,நவ.7

மன்னார், உயிலங்குளம் இராணுவ முகாமில் சந்தேகத்திற்கிடமான பகுதிகளைத் தோண்டுவதற்கு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எப்.அப்துல்லா நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்படி முகாம் அமைந்துள்ள பகுதியில் பலர் கொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருப்பதாகத் தமக்குக் தகவல் கிடைத்திருப்பதாகவும் -

அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான இடங்களைத் தோண்டுவதற்குத் தமக்கு அனுமதி வழங்குமாறும் -

இரகசியப் பொலீஸார் மன்னார் மாவட்ட நீதிமன்றில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிவான் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

(எ-12)

## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணஞ்செய்ய வருவோருக்கும், விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும்கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்துதருவோம். மேலும் எங்கள் இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்தநேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக கைத்தொலைபேசி எண்: 0065 9751 4941, தொலைநகல்: 0065 6481 6144

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சிலசமயங்களில் கஷ்டம். அதனால் 3 கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
10, Anson Road, # 15-14 International Plaza,
Singapore 079903.

(26-24-14) (26954)

## ஆடை விற்பனைக்கு



இறக்குமதி செய்யப்பட்ட ஆடவர், மகளிர், சிறுவர்களுக்கான சகல விதமான, தரமான,

- ★ நவீன ஆடைகளும்,
- ★ உதை பந்தாட்ட உடைகளும்,
- ★ தொப்பிகளும்(எல்லா அளவிலும்)

விற்பனைக்கு உண்டு.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

MC TEX
Millenium Super Market
61/10,Keyzer Street, Clombo-11
T.P.: 2335689,2423985,4736003

(C/38644)

## மாபெரும் மலிவு விற்பனை



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

**மகா சில்க்ஸ் + பியூட்டி சில்க்ஸ்**

புடைவை நிறுவனங்களின் விசேட கழிவிலான மாபெரும் மலிவு விற்பனை
பண்டிகையை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட தரம்மிக்க புடைவை வகைகள்
இன்றைய நாகரிகத்திற்கேற்ப

- ▲ திருமணப் பட்டுப் புடைவைகள், சாறிவகைகள்
- ▲ பஞ்சாபி - சோளி கிற் - ஸ்கேட் & பிளவ்ஸ்

மற்றும் றெடிமேட் ஆடைகள் அனைத்தும்

**மகா சில்க்ஸ்**
32, 40A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-38668)(34-14-44-24)

**பியூட்டி சில்க்ஸ்**
69, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

## Northumbria University (U.K)யின் செப்ரெம்பர் 2004 கல்வியாண்டிற்கு அனுமதி பெற்ற NIIT மாணவர்களை வாழ்த்துகின்றோம்!

northumbria UNIVERSITY
great learning great experience great future


**Study for 2 years at NIIT and complete the final year at Northumbria**

NIIT



K.Vijayasarathi, M. I. Ismail, P. Samaranayake, R. Mohamed
T. Dahanayake, A. S. A. Shifan, A. K. Hemaratne, K. S. Weerasinghe
Manju Menaka, Mohamed Roshan, S. L. Disasekara, M. F. Jiffry

northumbria UNIVERSITY
great learning great experience great future
Compelete at




NIIT enabled by cyberSKILLS
enabling the young professional for a better future

For Information on University Entry
**Business Management School, University of Northumbria Principal Representative In Sri Lanka**

591, Galle Road, Colombo 06.
Telephone 2 504 757 / 2 360 978
Fax : 2 504 758
Email : northumbria@sltnet.lk

NIIT
GLOBAL LEADERS IN EDUCATION AND TRAINING

347, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 222 7250

# தேசிய கடற்பூங்காவாகப் பிரகடனம் செய்வதே கச்சதீவைப் பாதுகாக்க ஒரே ஒரு சிறந்த வழி!

## சிரேஷ்ட விரிவுரையாளர் சூசை ஆனந்தன் தெரிவிக்கிறார்

**கடந்த 3ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் 'இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எ.சூசை ஆனந்தன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். இதன் போது இந்திய இலங்கை அரசுகளுக்கிடையே இழுபறி நிலையில் உள்ள கச்சதீவு விவகாரம் பற்றியும் அவர் விரிவாக விளக்கினார். அந்தக் கருத்துரையின் முழுவிவரமும் இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கையின் வடபகுதியில் பாரம்பரிய நீர்ப்பரப்புக்கள் என அழைக்கப்படுகின்ற பாக்கு நீரிணை, பாக்குவிரிகுடா, மன்னார் வளைகுடா ஆகிய கடற்பிரதேசங்கள் என்று மில்லாதவாறு இன்று கேந்திரமுக்கியத்துவமிக்க ஒரு பகுதியாக மாறி வருகின்றது. சேதுகால்வாய்த்திட்டம், ஆதாம்பால தரைவழிப்பாதை, கச்சதீவு விவகாரம், ஈழ அகதிகள் பயணம், இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை, எண்ணெய் வள அகழ்வு என்றவாறு இப்பகுதியின் முக்கியத்துவம் வலுவடைந்து வருகின்றது. இதில் கச்சதீவை இந்தியா நிரந்தரக் குத்தகைக்குக் கோருவது முக்கியத்துவமுடைய ஒரு விவகாரமாக மாறியுள்ளது. இத்தீவினை விரைவாக தமிழ்ப் பிரதேசத்தின் தேசியகடற்பூங்காவாக பிரகடனப்படுத்துவதன் மூலம் இதனைப் பாதுகாக்க முடியும்.

இவ்வாறு யாழ்பல்கலைக்கழக புவியற்றுறை மண்டபத்தில் கடந்த 3 ஆம் திகதி இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக கருத்துரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.சூசை ஆனந்தன் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு மனித சஞ்சாரமற்ற ஒரு தீவாகும். இலங்கை - இந்திய கடற்பகுதியின் மையத்தில் உள்ள இத்தீவு உரிமை கோரல் விடயம் 1974 ஆம் 1976 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய கடலோர எல்லை வகுக்கப்பட்டபின் ஒரு முடிவுக்கு வந்த போதிலும் - இன்று மீண்டும் அது அரங்கிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கு இதன் கேந்திர முக்கியத்துவமிக்க இட அமைவே பிரதான காரணியாகவுள்ளது.

### கச்சதீவு இலங்கைக்குரியது

1974 ஆம் ஆண்டு ஒப்பந்தப் பிரகாரம் இத்தீவு இலங்கைகுரியதாகிய போதிலும் - பாரம்பரியமாக இந்திய மீனவர்கள் இத்தீவில் அனுபவித்து வந்த உரிமைகள் பேணப்பட வகை செய்யப்பட்டது. ஆயினும், 1976 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இன்னோர் ஒப்பந்தத்தின பிரகாரம் இந்தப் பாரம்பரிய உரிமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதனை எதிர்த்து தமிழ்நாட்டில் பல எதிர்ப்புக்கள் ஏற்பட்ட போதிலும் காலப் போக்கில் அது அடங்கிப் போயிற்று. ஆனாலும் இந்திய யாத்திரிகர்களும், மீனவர்களும் இத்தீவினை பயன்படுத்த தடைகள் ஏதும் இலங்கை அரசினால் விதிக்கப்படவில்லை. துரதிர்ஷ்ட வசமாக 1983 இல் இங்கு ஏற்பட்ட அரசியல் இராணுவ நெருக்கடிகள் காரணமாக வடபகுதி கடற்பிராந்தியம் தடைசெய்யப்பட்ட ஒரு வலயமாக மாறியது. தடையை மீறி கடலில் நுழைந்த இலங்கை - இந்திய மீனவர்கள் - ஸ்ரீலங்கா படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகி மடிந்தனர். இப்பிராந்தியம் இரத்தகளரி நிறைந்த ஓர் இடமாக கடந்த 20 வருடங்களாக இருந்து வந்தது. இக்காலப்பகுதியில் இந்திய மீனவர்கள் சார்பில் தமிழ்நாடு, கச்சதீவினையும் அதன் சுற்றாடலில் 5 மைல் பகுதியையும் நிரந்தரக் குத்தகைக்கு தரும்படி மத்திய அரசினைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. குறிப்பாக முதலமைச்சர் ஜெயலலிதா இதில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தார். 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் மீன்பிடிப்பதற்கு இருந்த தடைகள் அகற்றப்பட்டன. இதனைப் பயன்படுத்தி - தமிழ்நாட்டு மீனவர்கள் ஆயிரக்கணக்கில் இங்கு படையெடுத்து இங்குள்ள வளங்களைச் சூறையாடிச் சென்றனர்.


கச்சதீவுக்கு தெற்கில் அமைந்துள்ள மன்னார் வளைகுடாப் பகுதியானது 10500 சதுர கிலோ மீற்றர் பரப்புடையதாகவும் 1986 இல் இப்பகுதி இந்திய கடற்பூங்காவாக மாற்றப்பட்டது. இங்கு 3600 தாவர விலங்கு உயிரினங்கள், 117 உயிரிகள், பாலூட்டிகள், டொல்பின்கள், கடலாமைகள் காணப்படுவதாகவும் 1989 இல் கடல் உயிர்க்கோளமாக இது பிரகடனப் படுத்தபடாதாகவும் கூறப்படுகிறது.

இதேபோன்று கச்ச தீவினையும், அதனைச சூழ்ந்துள்ள கடற்பகுதியையும் தேசிய கடற்பூங்காவாகப் பிரகடனப்படுத்துவதின் மூலம் எதிர்கால கடல்வள ஆய்வுக்குரிய மையமாகவும் இதனைப் பயன்படுத்தலாம். அத்துடன், எதிர்காலத்தில் உல்லாசப்பயணக் கைத்தொழில் விருத்திக்கும் இத்தீவினை பயன்படுத்தலாம்.

ஆகவே இதனை தமிமீழத்தின் தேசிய கடற்பூங்காவாகப் பிரகடனப்படுத்துவதின் மூலம் இந்தியா நிரந்தரக் குத்தகைக்கு கோருவதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். வடபகுதி சூழல பாதுகாப்பு அமைப்புகளும் அரச அலுவலர்களும் இத்தீவினை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

### இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை

இன்று இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை சர்ச்சைக்குரியதாகியுள்ளது. இந்தப் பிரச்




சினை தொடர்பாக ஆராய முற்படும்போது 1974 காலப் பகுதியிலிருந்து நோக்கவேண்டும். 1974 இல் தான் முதன் முதலில் இலங்கை - இந்திய கடல் எல்லை தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இக்காலப் பகுதியில் இரு நாட்டு மீனவர்களும் கச்சதீவுப் பகுதிகளில் மீன்பிடித்தலில் ஈடுபட்ட போதிலும் பிரச்சினைகள் எழவில்லை. காரணம் நவீன உபகரணங்களைக் கொண்ட பெரியளவிலான மீன்பிடி அந்நேரம் நடைபெறவில்லை.

ஆயினும், 1983 இன் பின் இலங்கையின் வடபகுதியில் யுத்தம் வெடித்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட கடல் வலயத் தடைச் சட்டம் வடபகுதி மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்வதைக் கட்டுப்படுத்தியது. எனினும், இதனைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் எமது பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர். 3½ தொன் நிறையுடைய றோலர்களைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டனர்.

இக்காலப்பகுதியில் இலங்கைக் கடற்படையினால் இவர்களுக்கு அச்சுறுத்தலும் இருந்தது. அண்ணளவாக 138 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டனர். ஆனாலும், 2002 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையில் பெரியளவில் பிரச்சினைகள் எழவில்லை. காரணம் கடல்வலயத் தடைச்சட்டத்தால் எமது வட பகுதி மீனவர் கடலுக்குச் செல்ல முடியாதிருந்தமையாகும்.

### புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீன்பிடி

2002 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து நிலைமை மாறியது. இந்திய மீனவர்கள் யுத்த அச்சமின்றி எமது கடலுக்குள் ஆழ ஊடுருவி மீன்பிடித்தலில் ஈடுபட்டனர். தினமும் சுமார் 2000 வரையான அவர்களின் றோலர்கள் எமது கடற்பகுதியில் மீன்பிடித்தலில் ஈடுபட்டன. இந்த றோலர்கள் மூலம் எமது கடல் வளம் தின்மும் சுரண்டப்பட்டது.

எமது மீனவர்கள் 20 வருடகால யுத்தத்தினால் எல்லாவற்றையும் இழந்து இடம்பெயர்ந்த நிலையில் - கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான வசதிகளை இழந்த நிலையில் இருந்தபோது இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - இந்த யுத்த நிறுத்த காலத்தில் நூற்றுக்கணகான இந்திய மீனவர்கள் எமது கடலில் உள்ள வளங்களைச சுரண்டுகின்றனர்.


இவர்கள் எமது இப் பகுதிக்குள் ஊடுருவக காரணம் கச்சதீவை அடக்கிய இப்பிரதேசம் இறால் வங்கி என அழைக்கப்படும். அதிகளவு இறால் வகைகள், கடலட்டை, சங்கு என்பவற்றைக் கொண்டுள்ள ஒரு வளமான பகுதியாக இருப்பதேயாகும்.

### றோலர் மீன்பிடியின் தீமைகள்

றோலர்களினால் கட்டுப்பாடில்லாமல் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான மீன்பிடி, இப்பிரதேசத்தை வளமற்றதாக்கி விடலாம். இந்தியக் கரையோரப் பகுதிகளிலுள்ள வளமான கடற் பிரதேசங்கள் தற்பொழுது இவ்வாறன றோலர் மீன்பிடிச் செயற்பாட்டினால் வளமற்ற தாக்கப்பட்டு விட்டன. இதனால்தான் தமிழகத்தின் சில பிரதேசங்களில் றோலர் மீன் பிடித் தடை செய்யப்பட்டிருக்கின்றது. இவை பயன் படுத்தும் இழுவை வலைகள், கடலடித்தளத்திலுள்ள அனைத்து வளங்களையும் வழித்து எடுக்கின்றன.

இதன் காரணமாகத்தான் எமது மீனவர்கள் தற்பொழுது 100 றோலர்களளவில் வைத்திருக்கின்ற போதிலும் கூட - றோலர் மீன்பிடியை எமது பிரதேசங்களில் நிறுத்தியுள்ளோம்.

இந்திய றோலர்கள் கிழமையில் 3 நாள்கள் எமது கடற்பகுதியில் பிரவேசிப்பதனால் கிழமையில் 3 நாள்கள் எமது மீனவர்கள் அச்சத்தால் கடலுக்குப் போகாமல் இருக்கின்றனர். இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் பல இலட்சம் ரூபாய்கள் பெறுமதியுள்ள வலைகளை



அறுத்து வருவதுடன் எமது மீனவர்களுக்கு உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அடாவடித்தனங்கள் தொடர்பாக இலங்கை அரசிடமும் கடற்படையிடமும் எமது மீனவர்கள் முறையிட்டும் பலனேதும் ஏற்படுவதில்லை. கடற்படை சமாளிப்புக்காக இடைக்கிடை இந்திய மீனவர்களைக் கைதுசெய்கின்றது.

பொறுமையிழந்த எமது மீனவர்களால் 2003 ஜனவரியிலும் 128 இந்திய மீனவர்கள் படகுகளுடன் பிடிக்கப்பட்டனர். ஆனாலும் இந்தியத் தூதுவரின் வாக்குறுதியையடுத்து இவர்கள் விடுவிக்கப்பட்டபோதும் பின்னரும் அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதனால், வடபகுதி தமிழ் மக்களுக்கும் இந்தியத் தமிழருக்கும் இடையேயான உறவுகள் சிக்கலடைந்து வருகின்றன.

**தொகுப்பு: தேவா**

• இந்நிலையை இலங்கை அரசு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் நிலையே இன்று காணப்படுகின்றது. விடுதலைப் புலிகளால் இந்திய மீனவர்கள் அச்சுறுத்தப்படுவதாக அரசு பிரசாரம் செய்கிறது. இது ஆரோக்கியமான விடயமல்ல.

தமிழ்நாட்டுப் பேராசிரியர் சூரியநாராயணன், கச்சதீவும் அதன் 5 மைல் சுற்றாடலையும் நிரந்தரக் குத்தகைக்கு இந்தியா பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பதிலாக 'வோஜ் பாங்கை' இலங்கை மீனவர்களுக்குக் கொடுக்கலாம் என்றும் கூறியுள்ளார். இது சாத்தியமில்லை. வங்காள விரிகுடாவுக்கு எமது மீனவர்கள் போய் மீன் பிடிப்பதென்பது சாத்தியமில்லை. அத்துடன், சிங்களப் பிரதேசத்தைத் தாண்டிச் செல்வதெனபதும் எமது மீனவர்களுக்குச் சாத்தியமற்றது.

இந்த நிலையில் தான், பல்கலைக்கழக மட்டத்திலிருந்து ஒரு கோரிக்கையை முன்வைகின்றேன். கச்தீவை தேசிய கடற்பூங்காவாகப் (National Marine Park) பிரகடனப்படுத்த வேண்டும் என்பதே அது.

கச்சதீவு-நெடுந்தீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்டதாக இருப்பதால் நெடுந்தீவு உதவி அரச அதிபரும், யாழ்ப்பாண அரச அதிபரும் இவ்விடயத்தில் கூடுதலாக அக்கறை எடுக்க வேண்டும். அவர்களுக்கே அப்பொறுப்புண்டு.

## அரச அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் வலியுறுத்து

இந்தியாவும் இலங்கையும் 1974-1976 ஒப்பந்தங்களை மதிக்க வேண்டும். ஜனநாயகம் பற்றிப் பேசும் இவர்கள் இச்சட்டங்களை மதிப்பதில்லை. கடந்த 20 வருடங்களில் எமது மீனவர்கள் இலங்கைக் கடற்படையிடம் நம்பிக்கை இழந்து விட்டார்கள். கடந்த வாரமும் கடற்படையினரிடம் அடிவாங்கியுள்ளார்கள்.

### மீனவருக்குரிய பாதுகாப்பை கடற்படை வழங்கவில்லை

எமது மீனவர்களுக்குரிய பாதுகாப்பை இலங்கைக் கடற்படை வழங்குவதில்லை. இதனால் அவர்கள் மீது எமது மீனவர்கள் நம்பிக்கையிழந்து விட்டனர். எமது கடற்பரப்பை பாதுகாக்க தனியான படை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள்தான் இந்திய மீனவர்களை அச்சுறுத்துகிறார்கள் என இலங்கை அரசு பிரசாரம் செய்கின்றது.

ஆனால், விடுதலைப் புலிகளால் எமக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என இந்திய மீனவர்கள் கூறுகின்றார்கள். இதிலிருந்து இதன்பின்னால் அரசியல் பின்னணி ஒன்று இருப்பது தெளிவாகின்றது - என்றார். ✪

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1972ஆம் ஆண்டு, மூலம் 3ஆம் பாதம், MBBS டாக்டருககு பண்பான, அழகிய, ஓரளவு படித்த மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 077 3107662. (38262)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 44 வயது, சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 36 வயதுக்குள், பொருத்தமான மணமகள் தேவை. வெளிநாட்டு P.R. உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2421, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (38154)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச உத்தியோகம் பார்க்கும், 28வயது, திருவாதிரை நட்சத்திர, நற்பண்புகளுடைய மணமகனுக்கு நற்குணமுள்ள, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: புதிய பாலம், தபாற்பெட்டி இல.10, வவுனியா. (37778)

கானான் திருச்சபையைச் சேர்ந்த, 39 வயது, ஜேர்மன் நிரந்தர வதிவுரிமையுடைய மணமகனுக்கு இதே சபையைச் சேர்ந்த, 33 வயதுக்குள் மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2420, C/o உதயன், யாழ்ப்பாணம். (38153)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1981 - (பரணி) கனடா, 1981 - கனடா, 1979 - கனடா(B.Sc.), 1978 - ஆஸ்திரேலியா, 1980 - ஜேர்மனி ஆகிய நாடுகளில் PR உடைய மணமகள்களுக்கு வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ மணமகன்மாரை எதிர்பார்க்கின்றோம். புகைப் படத்துடன் தொடர்புகொள்ளவும். T.P.: 031 222 4978. **Kesavan Marrage Service, 76, Alles Road, Negombo.** (38380)

## கோழிகள் விற்பனைக்கு

3 மாதங்கள் நிரம்பிய 150 பேட்டுக் கோழிகள் எம்மிடம் உடனே விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.பாலசிங்கம், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (38376)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 8.11.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம - வட்டுக்கோட்டை, R.S.K பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (38067)

## விற்பனைக்கு

மோட்டரோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சா.நாகரட்ணம் (சிறி), மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் (பி.ப. 5 மணிக்குப் பின்). (38351)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், உரும்பிராய் வீதியிலுள்ள அருளகத்திற்கு அண்மையில் கிணற்றுடன் 11 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வன் ஸ்ரோர்ஸ், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். தொலைபேசி இல.: 077 6264161, 0314 872866. (38180)

கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: த.கனகலிங்கம், 67/43, தர்மலிங்கம் அவனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (38362)

கருங்காலி, காரைநகர் மேற்கு, பிரதான வீதிக்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய 17 பரப்புக் காணி பனை, வேம்பு மற்றும் பிரயோசனமான வான் பயிர்களுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம்: 2425, உதயன், யாழ்ப்பாணம். (38319)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, கற்கோவளம் பாடசாலை ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பாலன், T.P.: 021 226 3016 (சி-38776)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் அருகருகே முறையே ஒரு பரப்பு 5.38 குளி, ஒரு பரப்பு 3.22 .குளி அளவு கொண்ட இரு காணிகள் வீட்டுடன் விற்பனைக்குண்டு. விருப்பப்படி சேர்ந்தோ, தனியாகவோ வாங்கலாம். வீட்டில் திருத்த வேலைகள் உண்டு. தொடர்பு: 28, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். T.P.: 222 5381 (38389)

## வீடும் காணியும் விற்பனைக்கு

இல. 25, சுவாமியார் வீதி, கொழும்புத் துறை, யாழ்ப்பாணத்திலுள்ள வீடும், 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112 505738, 0777 809649. (சி-38715)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான **Dobermann Pincher, Dachshurd** நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத திரைச் சந்தையடி, நல்லூர். (38315)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima Broiler** இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (**Electronic** நிறுவை). நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி நல்லூர். (38316)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகில் உள்ள புலவனார் வீதி. (38350)

## வாடகைக்கு

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் அறை வாடகைக்கு உண்டு. முழு வீட்டையும் நல்ல முறையில் பராமரிக்கக் கூடிய மாணவர்கள் அல்லது வேலைபார்க்கும் ஆண்கள் விரும்பத் தக்கது. தொடர்பு: 0112 505179. (38355)

யா/இந்து மளிர் கல்லூரிக்கு அண்மையில் புகையிரத வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. **SELECT SCOOTOR** விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6128216 (38388)

## சேவை

55,000 அமெரிக்க விஸா லொத்தர் (**Green Card**) விண்ணப்ப வீவரங்களை இலவசமாகப் பெற **Internet** மூலம் **USA** இற்கு அனுப்ப **Penquin B2/F23 Bloemendhas Flats, Colombo - 13. (T.P.: 2438367, 077** 3081764. (சி-38778)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு - இந்து, கிறிஸ்தவ அரச, தனியார் துறைகளில் கடமையாற்றும் மணமக்கள் உள்ளனர். தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (38373)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப பெற்றோர் தமது 40 வயது, 5' 4", அனுஷம், சிவந்த, இளமை அழகுடைய வைத்தியசாலையில் மருந்தாளராகவுள்ள மகளுக்கு வரனை எதிர் பார்க்கின்றனர். T.P.: 077 6110781 (38379)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக் குண்டு. இது நீரிழிவு. கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம். இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். *தொடர்பு:*

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021- 4590907.

(37114)

## யாழ். பல்கலையில் சிலிநாட்டுக் கலைஞரின் திரைக்காவியம்

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ். பல்லைக்கழகத் திரைப்பட வட்டத்தின ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் போலந்து இயக்குநர் றோமன் பொலன்ஸ்கியின் நெறியாழ்கையில் உருவான 'டெத் அன்த மெய்டன்' (**Death and the Maiden**) என்னும் ஆங்கில மொழித் திரைப்படம் தமிழ்த் துணைத் தலைப்புகளுடன் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

ப்ரபல சிலி நாட்டுக் கூவிஞனும் நாடக ஆசிரியருமான 'ஏரியல் டோர்வ்மன்' எழுதிய புகழ் பெற்ற நாடகத்தின் திரைவடிவமே இத்திரைப் படம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து ஒடிசி நாட்டியக் கலைஞரான ஷிலாலிபி பரிதாவின் ஒடிசி நாட்டிய நிகழ்வும் காண்பிக்கப்படும்.

படக்காட்சிகளின் இறுதியில் எழுத்தாளர் அ.யோசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறியாழ்கையில் கலந்துரையாடல் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-202)

## மாடிக்கட்டட வேலைகள் பூர்த்தி

சாவகச்சேரி,நவ.7

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி வகுப்பறைக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

பூர்த்தியடைந்த இந்தக் கட்டடம் இம்மாதம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய கட்டடத் தொகுதியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. அத்துடன், ஆரம்பப் பிரிவுச் சிறார்களின் நன்மைகருதி புதியகட்டட வளாகத்திற்கு முன்பாக விளையாட்டு உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன.(எ-31)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.7

சுன்னாகம் லயன்ஸ் கழகம், சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தவுள்ள இலவச மருத்துவமுகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், கண் பரிசோதனை ஆகிய பொது வைத்திய சேவைகளைப் பெற்றுப் பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-204)

## மரண அறிவித்தல்

### திருமதி சாம்பசிவம் சின்னம்மா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாம்பசிவம் சின்னம்மா நேற்று (06.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி (மேற்றன், யாழ். போதனா வைத்தியசாலை), மகாலக்சுமி, யோகாம்பிகை (சுவிஸ்), அருணகிரிநாதன் (சுவிஸ்), யோகேந்திரன் (கனடா), இந்திராணி, சர்வேஸ்வரி, யோகேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாபூசணம் செல்லத்துரை, குகாநந்தன் (கிளை முகாமையாளர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்), நித்தியானந்தகுமார் (சுவிஸ்), அருந்ததி (சுவிஸ்), புஸ்பமலர், ஞானமூர்த்தி (விற்பனைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சச்சிதானந்தன் (C.T.B) ஆகியோரின் அன்பு மாமியாரும் கேதீசன், அகல்யா, கிந்துஜா, அபர்ணா, விதுஷா, மாதுஷன், மாதங்கி, வைஷ்ணவி, சுவிஸில் வசிக்கும் அனுஷன், அஜந்தன், கனடாவில் வசிக்கும் தர்மிதா, அஜிதா, கௌரீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.11.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.குகாநந்தன் (மருமகன்).

*இராச வீதி,*
*அச்சுவேலி.* (38384)(42-11-17-24)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியராகக் கடமையாற்றுகின்றவரான

திருமதி P.செல்லத்துரை அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சின்னம்மா சாம்பசிவம்

அவர்கள் காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

(38377)(42-11-17-24)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனாவைத்தியசாலையில் தாதியராகக்கடமை புரியும்

செல்வி தனுசா இராமலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி முத்தம்மா இராமலிங்கம்

அவர்கள் காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயரிலாழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

- தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

(38378)(42-11-17-24)

### காவலாளி பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்துக்கு காவலாளி தேவை.
இரவு (பி.ப. 6.00 – காலை 6.00 வரை)
பகல் (காலை 6.00 – பி.ப. 6.00 வரை)
இரு நேரங்களிலும் அல்லது ஒரு நேரத்தில் காவல் கடமையில் ஈடுபடக் கூடியவர்கள் நேரில் வரவும். அல்லது விண்ணப்பிக்கவும்.

- அதிபர்.

*The Express Institute*
Irupalai, Kopay. (38383) (24-11-17)

### ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

புதிய கல்வி ஆண்டில்
தரம் 03 - O/L வரை

அனைத்துப் .பாடங்களும் கற்பிப்பதற்கான தகுதியும் அனுபவமும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் யாவும் கல்வித்தகைமைகள், கற்பித்தல் அனுபவங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து 15. 11. 2004ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

- அதிபர்

*The Express Institute*
Irupalai, Kopay. (38382) (24-11-17)

## வீதிகள் திருத்தப்படவில்லை

மானிப்பாய்,நவ.7

மானிப்பாய் வடக்கிலுள்ள உச்சியோடை வீதியும், இராசகாரியர் வீதியும் சுமார் 40 வருடங்களாகத் திருத்தப்படாமல் உள்ளதால் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

விவசாய நடவடிக்கைகளுக்காவும் பொதுத் தேவைகளுக்காகவும் அன்றாடம் பயன்படுத்தப்படும் இவ் வீதிகள் திருத்தப்படாமையால் அப்பகுதி மககள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (8-90-202)


## Foundation Degree Programme for Higher Education / Career

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for HigherEducation / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

- கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: G.C.E. O/L
- பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணனி ஆகிய துறைகள்.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களின் உதவியோடு UK, Canada, Australia, Newzealand, போன்ற நாடுகளில் உயர்கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு விஷேட ஆலோசனைகளும் பூரண VISA ஒழுங்கு முறைகளும் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

Foundation Degree

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

27, Hospital Road, Dehiwela.
Tel: 011 5518666, 0777 715788
E-mail: edulife@sltnet.lk

(C/38783)

# தம் வசதிக்கேற்ப வரலாற்றை மாற்றி மாற்றி எழுதுகின்ற சிங்கள வரலாற்று வல்லுநர்கள்

பிரதி தொழில் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மேவின்சில்வா நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆற்றிய உரை ஒன்றில் -

இராவணன் தொடர்பாகத் தெரிவித்த கூற்றுக்குப் பதிலடியாகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வரைந்த கட்டுரை இது.

"உலகிற்கு விமானத்தை அறிமுகப்படுத்தியவன் இராவணன். அவனே சிங்களவரின் முதலாவது அரசன். அவன் அறிமுகப்படுத்திய பின்னரே உலகம் விமானத்தைக் கண்டுபிடித்தது. அவன் வழியில் வந்த சிங்கள இனம் பல சாதனைகளைச் செய்துள்ளது." - என்று பிரதியமைச்சர் மேவின் சில்வா தனது உரையில் கூறிப் பெருமைப்பட்டுக்கொண்டார்.

அவரது இந்தக் கூற்றை மறுத்து, நாடாளுமன்றத்தில் மறுநாள் கேள்வி எழுப்ப முயன்றார் ஈழவேந்தன். ஆனால், மேவின் சில்வா அன்று சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

அதனால், சபாநாயகர் அதற்கு இடமளிக்கவில்லை.

இராவணன் யார் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக ஈழவேந்தன் இந்தக் கட்டுரையை வரைந்து 'உதயனு'க்கு அனுப்பியுள்ளார்.

**பொய்** சொல்லும் உரிமை எவருக்கும் உண்டு. ஆனால், பொருந்தப் பொய் சொல்ல வேண்டும். இல்லாவிடின் உலகின் ஏளனச் சிரிப்பிற்கு ஆளாக நேரிடும். சிங்களவர்கள் ஆளும் இனம் என்னும் ஒரே காரணத்தால் வரலாற்றைத் தாம் விரும்பியபடி திரிக்கலாம் என்று கருதுகின்றார்கள்.

குடித்தொகைக் கணக்கில் குதர்க்கம் பேசியுள்ளார் சேர் ஆதர் ரணசிங்க.

1947 இல் மக்கள் குடித்தொகை அறிக்கையின் முன்னுரையில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராய் விளங்கிய சேர் ஆதர் ரணசிங்கவின் பொருந்தாப் பொய்யுரையில் விஜனும் அவனுடைய எழுநூறு தோழர்களும் பாண்டியன் மதுரையில் இருந்து பெண் எடுக்கவில்லை என்றும் மாறாசரத்தில் உள்ள வட மதுரையில் இருந்துதான் பெண்களை வருவித்துத் திருமணம் செய்தனர் என்றும் பொருந்தாப் பொய் எழுதினார். உலக இயல்பின்படி பக்கத்து நாடுகளில் இருந்துதான் பெண் கொள்வது வழக்கம். சிங்களவன் புகழ் பாடும் கிறித்துவின் 6 ஆம் நூற்றாண்டில் எழுந்த மகாவம்சம் கூட விஜயனும் தோழர்களும் பாண்டி நாட்டு மதுரையில் இருந்துதான் பெண் எடுத்தனர் என்று கூறுகையில், சிங்களவரின் தாய் வழி முன்னோர் தமிழராய் இருப்பது தமக்கு அவமானம் என்று கருதுகின்ற நிலையில், சிங்கள வெறிக்கு ஆளாகி ஒரு படித்த மேதாவியாகிய சேர் ஆதர் ரணசிங்க கூட இத்தகைய, உலகம் எள்ளி நகையாடத்தக்க முறையில் பொருந்தாப் பொய் உரை கூறியுள்ளார். இவரைப் போன்றே தம் வசதிக்காக வரலாற்றை மாற்றி அமைக்கின்ற சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் காளான்போல் முளைக்கத் தொடங்கியுள்ளனர்.

மாண்புமிகு அவைத் தலைவர் லொக்கு பண்டார தமிழரின் முன்னோர் இராமன் என்று கூறுகின்றார்.

1980 களில் இன்றைய இலங்கை நாடாளுமன்றத்தின் மாண்புமிகு அவைத் தலைவராக (சபாநாயகராக) விளங்கும் லொக்கு பண்டார கூட அன்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் சிங்களவராகிய நாம்தான் உண்மையில் இராவண பரம்பரை என்றும் தமிழர்கள் இராமன் பரம்பரை என்றும் இதுவரை எவரும் சொல்லாத ஒரு புதுவிளக்கத்தைக் கொடுத்தார். அவருடைய புது விளக்கத்திற்கு அவர் கூறிய காரணம் இராமநாதன், இராமசாமி, இராமப்பிள்ளை, இராஜேஸ்வரம் போன்ற பெயர்கள் தமிழருக்கு இருப்பது தம் கூற்றினை மெய்ப்பிப்பதாகக் கூறியுள்ளார். வைணவம் போன்ற பிற மதத் தாக்குதலால் இராமன் பெயரோடு இணைந்த பல பெயர்களைத் தமிழர் சூட்டி உள்ளது

## இராவணன் பற்றிய மேவின் சில்வாவின் கூற்றுக்கு ஈழவேந்தன் பதிலடி

உண்மை. ஆனால், அது கொண்டு தமிழன் இராமன் மரபில் பரம்பரையில் வந்துள்ளான் என்று முடிவிற்கு வந்துள்ளது தான் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

அண்மையில் அவைத் தலைவர் திரு. லொக்குபண்டாரவுடன் நான் உரையாடிய பொழுது இச்செய்தியைக் குறிப்பிட்டு உங்கள் முடிவு தவறு என்று கூறியபோது பதில் கூறாது புன்முறுவல் பூத்தார்.

இன்றைய மாண்புமிகு அவைத்தலைவர் லொக்குபண்டார வழியில் சிந்திக்கின்ற இன்றைய பதில் தொழிலமைச்சர் அவர்கள் இவ்விதம் குருடுக்கு குருடு வழிகாட்ட இராவணன் சிங்களப் பெருமன்னன் என்று நிலைநாட்ட முனைந்துள்ளார். அவர் மேலும் ஒருபடி சென்று இராவணன் விமானம் வைத்திருந்தான் என்றும் உலகத்திற்கே விமானத்தை அறிமுகப்படுத்தியவர் இராவணன் என்றும் கூறுகின்றார். இராவணன் வானூர்தியை வைத்திருந்தாரா? இல்லையா என்பது வேறு கதை. ஆனால், உலகிற்கு விமானத்தை அறிமுகப்படுத்தியவர் இராவணன்தான் என்ற அவர் முடிவை உலகறிஞர்கள் ஏற்பார்களா? என்பது பெரும் கேள்விக் குறியேயாகும்.

இராவணன் செந்தமிழ் தழுவிய செந்நெறியாம் சிவநெறியைத் தழுவிநின்றான் என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் ஞானசம்பந்தர் தான் பாடியுள்ள திருநீற்றுப் பதிகத்தில் இராவணனைப் பற்றி பின்வரும் வரிகளைப் பாடியுள்ளார்.

"இராவணன் மேலது நீறு
எண்ணத்தகுவது நீறு" என்று இராவணன் பெரிய சிவபக்தன் என்பதை உலகிற்குப் பறைசாற்றியுள்ளார். இராவணன் புகழை 6 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 7 ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்த நாவுக்கரசர் தமது தேவாரப் பாடல்களில் பாடியுள்ளமைக்குப் பல சான்றுகள் உண்டு.

### கம்பன் கண்ட இராவணன்.

இராமன் புகழ்பாட வந்த கவியரசன் கம்பன் கூட இராவணனின், இறைவனை ஈர்க்கின்ற வீணை மீட்கும் ஆற்றலையும் இராவணனுக்கு சங்கரன் - சிவன் கொடுத்த வாளைப் பற்றியும் கூறியுள்ள செய்திகளை நாம் இங்கு நினைவு கொள்ளலாம். அத்தோடு, 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' என்று அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் வரைந்துள்ள நூலையும் இலக்கியத் திறனாய்வாளர் பயில்தல் பயன்பல அளிக்கும்.

இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற அளவிற்கு புலவர் குழந்தை எழுதிய இராவண காவியத்தை நுகர்வோர், இராவணனின் அளவிடற்கரிய புகழை நுகர்ந்து உவகை உறுதல் உறுதி. நூலின் உள்ளடக்கத்தை விரிக்க அஞ்சி விடுத்துள்ளோம்.

மேற்கூறிய எம் கருத்துகளுக்கு வலுவையும் 'சிறப்பையும் ஊட்டுகின்ற முறையில் புரட்சிக் கவிஞர் பாரதிசாசன் வீரத்தமிழன் என்ற தலைப்பில் ஈழவேந்தன் இராவணன் புகழை எம்மையெல்லாம் உணர்ச்சியின் உச்ச நிலைக்கு அழைத்துச் செல்லும் முறையில் பின்வருமாறு பாடுகின்றார்.

" தென்னிசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன் என்றன்.
சிந்தை யெலாம் தோள்க ளெல்லாம் பூரிக்குதடா!
அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத் தமிழன்
ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைததோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடை கொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்
என்றமிழர் மூதாதை என்றமிழர் பெருமான்
இராவணன்காண் அவன் புகழை இவ்வுலகம் அறியும்
வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசையொடிந்த தேகத்தில் வன்மை, வேண்டும்
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை மறச்செயல்க்ள் மிகவும் வேண்டும்
கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்
கீழ்ச் செயல்கள் விட வேண்டும் இராவணன்றன்
கீர்த்தி சொல்லி அவன் நாமம் வாழ்த்த வேண்டும்"

இப்பாடலில் குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம் என்றும் சூழ்ச்சி தன்னை வஞ்சகத்தை பொறாமை தன்னைத் தொகையாய் எதிர் நிறுத்தித் தூள் தூளாக்க வேண்டும் என்றும் பாரதிதாசன் குறிப்பது சிங்களவரைத்தான் என நாம் எண்ண இடமுண்டு. இவ்வரிகளில் இன்றைய குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டமாகிய சிங்களவர்களை நாம் எதிர்த்து அவர்களின் சூழ்ச்சியையும் வஞ்சகத்தையும் வெல்லவேண்டும் என்று நம் பாரதிதாசன் சொல்லாமல் சொல்லுகின்றார் போலும்.

திரு.மேவின்சில்வா இராவணன் தம் முன்னோர் என்றும், பெரும் சிங்கள மன்னன் என்றும் நாடாளுமன்றத்தில் 21.10.2004 இல் முழங்கினார். மறைந்த நடிகர் காமினி பொன்சேகாவிற்கு இரங்கல் உரை நிகழ்த்தியபோதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார். மறைந்த ஒரு மனிதனுக்கு இரங்கலுரை நிகழ்த்தியபோது

(14ஆம் பக்கம் பார்க்க)

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | சந் |
| | புத | சூ. ▲ செவ். கே. | வெ வீ |

## இந்த வார இராசி பலன்

## 07-11-2004 - 13-11-2004

**மாற்றம் :**
7.11.2004 இல் மகம் நட்சத்திரம் - சிங்கம் ராசியில் சந்திரன் நிற்கும்.

### மேடம்

**ப**ணவரவு கொடுக்கும். அடிக்கடி தொழில் நிலையில் ஒரு மந்தப்போக்கு இருக்கும். வீடு, காணி, பூமி சம்பந்தமான புத்திரர், சுபமங்களப் பேச்சு என்பன முக்கிய கட்டப் பேச்சுக்கொடுக்கும். மலச்சிக்கல், வயிற்றுவருத்தம், அடிக்கடி கோபம் வரும், பூமி சம்பந்தப பேச்சுக்கள் கொடுக்கும். நீதித்துறையினர், காவல்துறையினர், வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் - புதன், வியாழன்.*

### இடபம்

**சீ**ல்லறைபோட்டு, நோட்டுப் பெறும் யுக்திபற்றி அடிக்கடி யோசிப்பீர்கள். அடிக்கடி தடுமாற்றம், கல்வியில் சிந்தனை, பிள்ளைகளின் உயர்ச்சியில் நாட்டம் கொள்ளுவீர்கள், சலவருத்தம், இருதயநோய் வரலாம். வைத்தியத்துறையினர், மருந்து வியாபாரிகள் நன்மை அடைவர், தூரதேசத்துப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்- புதன், வியாழன்.*

### மிதுனம்

**எ**ன்னதான் குறைகேட்டாலும் விதிப்பலன் சுழற்சக்கரமாகி நல்ல பலனைக் கொடுக்கும் காலமாகும். பணவரவு தடைப்படும். ஆஸ்பத்திரிச் செலவு அதிகரிக்கும். கைகால் தாக்கம், முதுகுவலி, சளித்தொல்லை கொடுக்கும். வாய்வு வருத்தம் வரும். சட்டத்துறையினர், நிர்வாக பீடத்தினர்கள் அன்னியதேச நிறுவனங்களில் தொழில் செய்பவர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்- புதன், வியாழன்.*

### கடகம்

**பொ**ருள்பற்றிய சிந்தனை, பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும். அயலவர்களின் உதவி கிடைக்கும். சகோதரர்களுக்குப் பிரயாண்ணங்கள் கொடுக்கும். அடிக்கடி காலநேரம் தெரியாது கதைத்து வீண் பிரச்சினைகளை உருவாக்குவீர்கள். சளித்தொல்லை, வயிற்றுவருத்தங்கள் கொடுக்கும், அரசியல், சட்டத்துறையினர், கலைத்துறையினர்கள் வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்- புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

**பெ**ரியவர்கள் உதவுவார்கள், வாக்குக் கலகம் ஏற்படும். தொழில் நிலையில் நற்பலன்கள் கொடுக்கும். முழங்கால்நோ கொடுக்கும். உடல்நிலைத் தாக்கம் கொடுக்கும். கண்வருத்தம், காலில் உரசல் காயம், உஷ்ண குளிர் பீடைகள், குருத்துறையினர், ஆலயத்தில் வேலை செய்பவர்கள், வியாபாரிகள், மருந்துத் தொடர்பானவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்- புதன், வியாழன், சனி*

### கன்னி

**அ**டிக்கடி தடுமாற்றம், போட்டி மனோபார்வை ஏற்படும். அயலவர்கள் போட்டி போடுவார்கள். நண்பர்கள் உதவி செய்வார்கள். சளி, இடுப்பு வலி, கிருமித்தாக்கம் கொடுக்கலாம். தூர இடங்களுக்கான பிரயாணம் செய்பவர்கள் அதனைத் தவிர்த்தால் நன்று அல்லது இழப்புக்களைச் சந்திப்பீர்கள், மதுபானசாலை, ஹோட்டல், கலைத்துறைத் தொடர்பானவர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்- புதன், வியாழன், சனி.*

### துலாம்

**உ**றுதியான புதியதிட்டங்கள் உங்களால் உருவாகும். சட்டதிட்டப்படி செயற்படுவீர்கள். அன்னியர் உதவிகள் கிடைக்கும். பங்காளர்கள் உதவிகள் செய்வார்கள். தொழில் இலாபங்கள் கிடைக்கும். தூரத்து உறவு செய்தி அனுப்பும். தலைவலி, நாரிநோ, ஈரல் வருத்தம், கால் உபாதைகள் உண்டு. ஆசிரியர்கள், சட்டத்துறையினர், மருந்துத்துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்- புதன், வியாழன், சனி.*

### விருச்சிகம்

**அ**கத்தில் உள்ளது முகத்தில் தெரியும் என்பார்கள். உள்ளத்தில் தெளிவு வைத்து உறுதியான முடிவுகள் எடுங்கள். உடல்நிலை பாதிப்புக் கொடுக்கும், காலில் வலி ஏற்படலாம், வீண் பழி கேட்டல், சிலரின் வஞ்சனையால் நஷ்டங்கள் ஏற்படும். இரத்த மாற்றம், இடுப்புவலி வரலாம். இரும்புத் துறையினர், வியாபாரிகள் (வாகனப் பகுதி) கராஜ்காரர்கள், ஒட்டுவேலை செய்பவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### தனுசு

**தொ**ழில்நிலையில் மாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் வரும், இனஜனக் கொண்டாட்டங்கள், அன்னிய நண்பர்கள் உதவுவார்கள், மேலதிகாரிகள் உதவிசெய்வார்கள், எலும்புக்காயம், நோ, குடல், வயிற்று வருத்தங்கள் ஏற்படலாம். ஆசிரியத்துறையினர், வியாபாரிகள், நீதித் துறையினர்கள் நன்மையடைவார்கள். இடமாற்றம், பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், சனி.*

### மகரம்

**பு**திய பொறுப்புக்கள் தேடி வரும், இடமாற்றங்களால் நன்மை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை வரும், நரம்புப்பிடிப்பு, தொண்டை நோ, கால்வருத்தம் கொடுக்கும், அன்னிய தொண்டர் நிறுவன உதவியாளர்கள், கல்வி சம்பந்தப்பட்ட இடங்களில் வேலை செய்பவர்கள், குருத்துறையினர்கள் அதிகளவு நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், சனி.*

### கும்பம்

**தொ**ழில்நிலையில் மாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் வரும், இடமாற்றங்களால் நன்மைகள் கொடுக்கும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். கால்வீக்கம், மறதி, வாதநிலை தோன்றலாம். பிரயாணங்களைத் தவிர்க்கவும், அன்னியர்களால் உதவிகள் கிடைக்க இடமுண்டு. ஆசிரியர்கள், அரசியல்துறையினர், அரசநிர்வாகிகள் நன்மையடைய இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

### மீனம்

**பு**திய பொறுப்புக் கொடுக்கும். வியாபாரம், தொழில் நிலையில் மாற்றங்கள் ஏற்படும். எதிர்ப்பாலாரின் உதவிகளால் எதிர்பாராத மாற்றம், நன்மை ஏற்படும். சளித்தொல்லை, வயிற்று நோ, கால்வருத்தம் இருக்கும். மருந்து வியாபாரிகள், டாக்டர்கள், அந்நிய மருந்து விற்பனையாளர்கள், வாசனைப் பொருள் விற்பனையாளர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# நல்லூரில் கைவிடப்பட்ட பொருள்கள் உரியவர்களிடம்

## நல்லூரில் வைத்து நேற்றுக் கையளிப்பு

வலி.வடக்கு, நவ.7

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது அடியார்களினால் கைவிடப்பட்ட பொருள்களில் ஒருபகுதி, நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பணிமனையில் வைத்து உரியவர்களிடம் வழங்கப்பட்டது.

இதேநேரம் கைவிடப்பட்ட பொருள்களில் ஒரு தொகுதிப் பொருள்கள் உரியவர்களால் உரிமை கோரப்படாத நிலையில் கோட்ட அரசியல்துறைப் பணிமனையில் உள்ளன என்றும் -

இப்பொருள்களைத் தவறவிட்டவர்கள் உரிய பொருள்களின் அடையாளங்களைக் கூறி, நல்லூர் வைமன் வீதியில் உள்ள அரசியல்துறைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் கூறப்பட்டது.

உரிமை கோரப்படாத பொருள்களில் தங்க நகைகள், கைக்கடிகாரங்கள், கையடக்கத்தொலைபேசி, கைப்பைகள் என்பன அடங்கியுள்ளன.

(எ-86)




தென்னிந்தியாவில் இருந்து பரம்பரை ஜோதிடர்

அனைவருக்கும் P.T.R. இன் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

திரு. P.T.R. அவர்கள்

5 ஆவது முறையாக யாழ்ப்பாணம் வருகை. கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்த்து உங்களது எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ள இன்றே திரு. P.T.R ஐச் சந்திக்கவும்.

திரு.P.T.R ஐச் சந்திக்கும் இடம்:
ஜோதிடர் திரு.P.T.R அவர்கள்
பாலாஜி இன் விடுதி
293, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(38220) (37-26-14-46)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியையான
திருமதி கௌரி பாலகிருஷ்ணன்
அவர்களின் அன்புத் தந்தை

### வையிரவநாதர் நடராசா

அவர்கள் 05-11-2004 இல் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.
யாழ்ப்பாணம். (38396)(26-14-44)

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.


DR.M.G.R.DEEMED UNIVERSITY
Offshore Campus, Sri lanka.

2004-2005 ஆம் கல்வியாண்டுக்கான அனுமதிகள்

INTERNAL DEGREE COURSES

- BACHELOR OF COMPUTER APPLICATIONS(B.C.A) (A professional I.T.Degree)
- BACHELOR OF BUSINESS MANAGEMENT(B.B.M)
- MASTER OF BUSINESS ADMINISTRATION(M.B.A)

வலயக்கல்விப் பணிப்பாளரின் பரிந்துரைக் கடிதத்துடன் மாணவர்கள் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க இயலும்.

மங்களகரமாக ஆரம்பமாகின்றது

மாணவ மணிகளே!

நிகழும் தாரண வருஷம் ஐப்பசித் திங்கள் 22 ஆம் நாள் இன்று (7.11.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் 11.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

DR.M.G.R.DEEMED UNIVERSITY
INFORMATION & ADMISSION CENTRE

மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றது என்பதை அறியத்தருவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இதில் சேர்ந்து கற்க விரும்பும் மாணவர்கள் அனைவரும் நெறியைக் கற்றுப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.K.அகிலன்,
Managing Director.

T.P: 2840

INFORMATION & ADMISSION CENTRE,
195, NAVALAR ROAD, JAFFNA.

விரிவுரைகள், பரீட்சைகள் 281, ஆர்.ஏ.டீ.மெல் மாவத்தை, கொழும்பு-3, ஸ்ரீலங்கா என்ற முகவரியிலமைந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.
கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்.


# பண்டிதர் வடிவேல் காலமானார்

சைவப்புலவர், பண்டிதர், ஞானசிரோன்மணி இ.வடிவேல் நேற்றுமுன்தினம் திருகோணமலையில் காலமானார். அவருக்கு வயது85.

1919 இல் மட்டக்களப்பில் பிறந்த அவர், 1946 முதல் திருகோணமலையுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டார்.

1958 இல் காஞ்சி ஞானப்பிரகாச சுவாமிகளினால் சைவசித்தாந்தசிகாமணி என்று அவருக்குப் பட்டம் சூட்டப்பட்டது.

சுவாமி கெங்காதரனந்தாவை தமது ஆன்மீகக் குருவாகக் கொண்ட பண்டிதர் வடிவேல், திருகோணமலை சிவயோக சமாஜத்துடன் இணைந்துப் பணியாற்றியவர்.

தமிழ் இலக்கிய விற்பன்னரான அவர், தமது கதாகலாட்சேபம் மூலம் பலரின் மனதையும் கவர்ந்தவர்.

'திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்' என்ற பெயரில் அவர் ஆக்கிய நூல் பெரும் வரலாற்றுப் பதிவாகவும் திருகோணமலை இந்துக் கோயில்கள் பற்றிய பெருமைமிகு ஆவணமாகவும் போற்றப்படுகின்றது.

கோணமலை அந்தாதி, கோணேஸ்வரர் கல்வெட்டு ஆகிய நூல்களைப் பதிப்பித்த வடிவேல், திருகோணமலை கோணேஸ்வரர் கோயில் வரலாறு, திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு போன்றவை உட்படப் பல நூல்களை எழுதியவர். பல நூல்களையும் மலர்களையும் பொறுப்பு நின்று ஆக்கிப் பதிப்பித்தவர்.

(எ-க)

# தம் வசதிக்கேற்ப.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வுரையைத் தடுத்து நிறுத்த நாம் விரும்பவில்லை. பண்பு அல்ல என்று கருதினோம். ஆனால், அடுத்த நாள் 22.10.2004 அவருடன் கேள்விகேட்டு தெளிவுபெற அவைத்தலைவரிடம் இசைவுகேட்டபோது இன்று அவர் நாடாளுமன்றம் வரவில்லை. அவர் வந்திருந்தால் இக்கேள்வி எழுப்பமுடியும் என்று கூறினார். எனவே, நாம் விடுத்திருக்க வேண்டிய வினாவை இக்கட்டுரையின் வடிவமாகத் தந்துள்ளேன். அன்று அவர் வந்திருந்தால் இக்கூற்று அவருக்குப் பதிலாக அமைந்திருக்கும். மீண்டும் இச்சிக்கலை நாடாளுமன்றத்தில் எழுப்புவதற்கு வாய்ப்பு உண்டோ என்பது ஐயம். எனவே, இது இச்சிறிய கட்டுரை வடிவம் பெறுகின்றது.

மாண்புமிகு அமைச்சர் மேவின் சில்வா அவர்களுக்கு இக்கட்டுரையின் சிங்கள ஆக்கம் கொடுக்கப்படும் பொழுது பொருளற்ற முறையில் பிதற்றுவதை அவர் தவிர்த்து சிந்தனைத் தெளிவுபெறுவார் என்பது எமது நம்பிக்கை.★

### கிளிநொச்சியில் இன்று - 'மருத்துவ இதழ்' வெளியீடு

விழி என்னும் மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரும் பதில் சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதமவிருந்தினராகவும் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-3-393)

### நினைவஞ்சலிக் கூட்டம்

புதிய ஜனநாயகக கட்சியின் மறைந்த அரசியல் குழு உறுப்பினர் தோழர் சி.நவரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று முற்பகல் 1030 மணிக்கு கந்தர்மடம் ஆத்தி சூடி வீதியிலுள்ள கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில நடைபெறவுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'பொதுவுடைமைப் போராளியின் நினைவுகள்' எனும் நினைவு நூல் வெளியிட்டு வைக்கப்படுவதுடன் 'மனிதம் மண்ணில் உயரும் வரை' எனும் தலைப்பிலான கவிதாஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (எ-6)

## 23ஆம் நாள் நினைவு அழைப்பு

தோற்றம்
07 - 08 - 1933



மறைவு
16 - 10 - 2004

### அமரர் நாகமுத்து சுந்தரலிங்கம்

அன்னாரின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று (07.11.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்காக நிகழ்த்தப்படும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை(VC அடி).*
(38391)(42-14-17-26)

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## சபாரத்தினம் இரத்தினகுமார்

கந்தர்மடத்தைச் சேர்ந்த சபாரத்தினம் இரத்தினகுமார் 03.11.2004 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - ஞானாம்பிகை (கந்தர்மடம்) தம்பதிகளின் புதல்வரும் ஜெயரட்ணம் ஜெயதேவி (கொட்டடி) தம்பதிகளின் மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் அருள்குமார் (U.K.), ஞானகுமார் (Canada), சிறிக்குமார் (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50A, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (38393) (14-17-26-42)

தகவல்:
V.S.S.K.சிவகுருநாதன்.

## சின்னத்தம்பி பொன்னுத்துரை



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கற்பக்குணையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை அவர்கள் 04-11-2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் சகுந்தலா, உதயகுமார் (நோர்வே), சந்திரகுமார் (சுவிஸ்), யசோதா (ஜேர்மனி), சசிக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்காவரதன் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்), சுதர்சினி (நோர்வே), அன்பழகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, நாகம்மா, பூபாலசிங்கம் மற்றும் செல்லத்துரை, மகேஸ்வரி, துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்சன், பிரியங்கா, டிலக்ஷன், றம்மியா, ராகுல், அபிலாஸ், அனுபாஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08-11-2004) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காகக் கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கற்பக்குணை, (38385)(14-17-26)
கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி புவனேஸ்வரி இரத்தினசிங்கம்



கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி இரத்தினசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (05.11.2004) வெள்ளிக்கிழமை மெல்போனில் (ஆஸ்திரேலியா) காலமானார்.

இவர் திருமுத்து - இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி அப்புத்துரை அவர்களின் தவப்புதல்வியும் காலஞ்சென்ற யோகராசா (கொக்குவில்) அவர்களின் அன்புச் சகோதரியும் ஸ்ரீகாந்தன், சரோஜா, சாந்தி, ஜெயகாந்தன், சுகிர்தா, பாலகாந்தன், ஞானகாந்தன், கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ரோகினி, இந்திரசாமி, சிவகுமார், வனிதா, இராஜகுலசிங்கம், வாசுகி, சுகந்தி, நிர்மலதாஸ், S.அம்பிகாதேவி (நோர்வே), யோ.சிவகுமார், யோ.சந்திரகுமார், K.சந்திரகாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹேமா, ரேகா, செந்தூரன், தனுஷா, கௌசல்யா, சுராஜ், சுகுல், கீர்த்தனா, சுரேஷ், ஹம்சா, சௌமியா, ஆரணி, அனிக்கா, அபிதா, நிஷாந்தி, பிரியங்கா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தரணயா, ஹரிசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் மெல்போன் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இரத்தினசிங்கம் குடும்பத்தினர்,*
*5 நான்சி றைவ்,*
*லேலூர் VIC 3075,*
*ஆஸ்திரேலியா.* (14-17-26-42)

தகவல்:
யோ.சந்திரகுமார் *(மருமகன்)*
No. 5, உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
T.P.: 021 4590859

(38387)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா சின்னத்தம்பி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் தற்போது கோப்பாயில் வசித்தவருமான திருமதி நாகம்மா சின்னத்தம்பி அவர்கள் நேற்று (06.11.2004) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் தவமணிதேவி, கணபாலன் (சந்திரன் - டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகநாதன், உதயமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்த்திகா, வாகீசன், சிந்துஜா, வைகுந்தன், பிரியங்கன், சகானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(38402)(38-18-45)

தகவல்:
திருமதி கணபாலன்
(மருமகள்).

## திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன்

(மடத்தடி - சிறுப்பிட்டி)

சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன் அவர்கள் நேற்று (06.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவம் பத்மநாதன் (முன்னாள் கணக்காய்வு பரீட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் (அதிபர்) - குலமணி தம்பதிகளின் அன்பு மகளும் Dr.கணேசராசா (அமெரிக்கா), இரத்தினேஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி (அமெரிக்கா), கமலாதேவி, பத்மாதேவி, சிவானந்தராஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.விஜயலட்சுமி (அமெரிக்கா), குமாரசாமி (கனடா), பஞ்சலிங்கம் (அமெரிக்கா), கணபதிப்பிள்ளை (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), செல்வராசா (கிராம அலுவலர்- சாவகச்சேரி - கோயில்குடியிருப்பு), காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் கமலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம், கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் நந்தகுமார், நளினி, இரத்தினகுமார், கோகுலன், நிவேதா, நிதர்சினி, நிலானி, பிறேமராகவன், கோபிகா, கௌசிகா ஆகியோரின் பெரியதாயாரும் ராசு, விவேக், ஷீலா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2004) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.30 மணியளவில் சிறுப்பிட்டி கிந்திசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*'சிவபதி'*
*பருத்தித்துறை வீதி,*
*மடத்தடி, சிறுப்பிட்டி.*
(38399)(38-18-45)

தகவல்:
ச.பத்மநாதன்
(கணவர்).


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
அர்ஜுன், லாராதத்தா, விவேக் நடித்த
அரசாட்சி காட்சி நேரம் 11.00, 3.00, 7.00. (பு.நே)
அடுத்த வெளியீடு, இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக 11 ஆம் திகதி முதல்
ரத்ரபதி
(C-37740)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இன்றுமுதல் கம்பஸ் காட்சி நேரம் 10.30, 2.30, 6.30,
இரவு 8.30 இந்கு Spider Man I
மிகவிரைவில ட்றீம்ஸ் (ரீல்ஸ)

ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரம் ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G ரெயின்போ காலனி (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
11 முதல் அட்டகாசம்

சங்கானை
விஜயகாந், பிரபுதேவா, வடிவேல் நடித்த
எங்கள் அண்ணா காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00
DARE DRVALIN (ரீல்ஸ்) (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.


தீபாவளியை
முன்னிட்டு
யாழ். சிங்கர் காட்சி
அறையில்
சமையலறை
உபகரணங்களை
அதிக விலைக் கழிவுகளுடன்
பெற்றுக்கொள்ளலாம். இச்சலுகை
எதிர்வரும் 15.11.2004 வரை மட்டுமே!
உடனே விரையுங்கள்
SINGER
NO.1, Stanley Road, Jaffna.
021-222 5408

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
ராசி சில்க்ஸ் நல்லி சில்க்ஸின் இணைந்தசேவை
உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல
வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள், சிறுவர்கள்,
இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் இன்றே வாருங்கள்
இத்தள்ளுபடி 7 ஆம் திகதிமுதல் 11 ஆம் திகதிவரையும்
NOTE: எமக்கு யாழ் நகரில் ராசி சில்க்ஸ்,நல்லி சில்க்ஸ் தவிர்ந்த வேறு கிளை ஸ்தாபனம் இல்லை.
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். 021 - 222 5571
நல்லி சில்க்ஸ்
121/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 - 222 5573

சுடர் ஒளி
THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

இப்போது
உங்கள் பிரதிகள்
முகவர்களிடம்
நவம்பர்
07 - 13,
இதழ்.

# இலங்கைக்கான நிதி உதவிகள் திரும்பும் என்று எச்சரிக்கை

இலங்கையில் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படாவிட்டால் இலங்கைக்கான சர்வதேச நிதி உதவிகள் வேறு நாடுகளுக்குச் செல்லும் நிலை ஏற்படும்.

- இப்படி எச்சரிக்கின்றார் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைப் பிரதிநிதி அலெக்ஸ்சாண்ரோ பிஜோ. ரோய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் எட்டப்படாவிட்டால் சர்வதேச உதவிகளை இலங்கை இழக்கும் நிலை ஏற்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் அடுத்த 2 வருடங்களில் 570 மில்லியன் டொலரை வழங்க, உதவும் நாடுகள் இணங்கின. அதில் 4.5 கோடி டொலரை ஜப்பான் வழங்க இணங்கியது. ஆனால், அரசும் புலிகளும் உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று ஜப்பான் இரு தரப்புகளையும் கேட்டுள்ளது.

பேச்சை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றால், உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகளை வேறு நாடுகளுக்குத் திருப்பி விடும் - என்றார் அலெக்ஸ்சாண்ரோ பிஜோ.

## வன்னியின் பல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவிற்கு வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

புதுக்குடியிருப்பு கல்வி வலய அலுவலகத்தின் உள்ளே வெள்ளம் புகுந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டதாக கூட்டுறவுச் சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - புதுக்குடியிருப்பு - மாத்தளன் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தை மக்கள் படகுகள் மூலம் கடக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பலவன்பொக்கனை, புதியமாத்தளன், பழையமாத்தளன் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. முறிகண்டிப் பகுதியில் மக்களின் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் திருமுறிகண்டிப் பாடசாலையில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான உணவுப் பொருள்களை மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத்தினர் வழங்கிவருகின்றனர்.

மன்னாரிலும் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் சாந்திபுரம் மற்றும் பள்ளிமுனை 50 வீட்டுத்திட்டம் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, வட்டக்கச்சி, பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் வெள்ளத்தைக் கடந்து போக்குவரத்துச் செய்யும் வகையில் பொதுமக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் உதவி புரிந்து வருகின்றனர். உழவு இயந்திரம் மற்றும் வாகனங்களின் மூலம் இந்த மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கான மீட்புப்பணி, சமைத்த உணவு வழங்கல், குடிதண்ணீர் விநியோகம் போன்ற பணிகளைச் செய்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

மாவட்டரீதியில் அரச அதிபர்களுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

வெள்ளப் பாதிப்புக்களுக்கு உள்ளாகும் மக்களின் விவரங்கள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தினர் ஆகியோரை தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-12)

## சேது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோருடன் சந்திரிகா குமாரதுங்க சேது சமுத்திரத்திட்டம் குறித்துப் பேசியிருக்கின்றார்.

இத்திட்டத்தினால் இலங்கையின் சுற்றுச்சூழலில் பாதிப்பு ஏற்படும் என எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வதற்கு இந்தியா இணங்கியுள்ளது.

சேது சமுத்திரத்திட்ட ஆவணங்களை இலங்கைப் பொறியியலாளர்கள் இருவர் பார்வையிட்டு ஆராய்ந்து உண்மை நிலையைக் கண்டறியமுடியும் என இந்திய அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார். பாதுகாப்பு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படலாம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் ஜனாதிபதி சந்திரிகாவும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமரும் இந்த உடன்படிக்கை தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளனர். (ஐ-3-12)

**கணக்கீடு**
திரு. பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
**A/L 2006**
**பங்குடமை**
Mon., Fri.
4.00 - 5.00 p.m.
ஆரம்பம்:
08-11-2004-Mon. (38353)
**STAR**
கல்வி நிலையம், சுன்னாகம்

**வெளிநாட்டு அழைப்பு**

உங்கள் இடங்களிலிருந்து வெளிநாட்டு அழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள 2 ரூபா 10 சதம் மட்டுமே!

மேலதிக விவரங்களுக்கு:
0777 554528
(சி-38774)(30)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**14-11-2004**

இக்கல்வியாண்டு 2004/2005 இற்குரிய இறுதிப் பிரிவுகளிற்கான வகுப்புக்கள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இப்பிரிவில் அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன. புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS,யாழ்ப்பாணம். (சி38573)




## வெளிநாட்டுச் சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை ஐரோப்பா உட்பட வெளிநாடுகளில் வாழும் சட்டவல்லுநர்கள் அக்குவேறு அணிவேறாகப் பரிசீலிக்கின்றனர் என்ற தகவலையும் அப்போது அவர் வெளியிட்டார்.

ஐரோப்பிய விஜயத்தின்போது ஜெனீவாவில் தமது அமைப்பின் சட்ட வல்லுநர்களுடன் கலந்துரையாடிய விடயங்கள் குறித்துத் தமிழ்ச்செல்வன் விவரங்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது, உயர்மட்ட அரசியல்குழு ஜெனீவாவில் சட்டவல்லுநர் குழுவுடன் கலந்துரையாடியது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பாக விரிவாக அவர்களுடன் ஆராய்ந்தோம். அதிகாரசபையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்தும் அவ்வாறு நடைமுறைப்படுத்தும்போது எழக்கூடிய சட்டச்சவால்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தோம். ஒவ்வொரு துறை தொடர்பாகவும் தனித்தனியே விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி வல்லுநர்களைக் கேட்டுள்ளோம்.

துறைசார்ந்த நிபுணர்கள் அந்தத்துறைகளைத் தனித்தனியே பரிசீலிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நிபுணர்கள் அறிக்கைகள் எமக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தா

## ஆய்வுகூட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறி மூலம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டன. வழியில் ஓமந்தைச் சோதனைச்சாவடியில் கடமைபுரிந்த படையினர் இந்த உபகரணங்களை எடுத்துச்செல்லப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை எனத் தெரிவித்து அதனை யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதிக்கவில்லை. இதனால் அந்த உபகரணங்கள் அங்கிருந்து பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்குத் திருப்பி எடுத்துச்செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டுள்ளன. (ஐ-3)

## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்கள் கிணற்றில் தேடியபோது அடியில் அவரது சடலம் காணப்பட்டது என்று கூறப்படுகின்றது. ஆவரங்கால் நவோதய வீதியைச் சேர்ந்த சந்திரன் திலீபன் (வயது-19) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸார் விசாரணைகளை நடத்துகின்றனர். (ஐ-11)

**தேவை**

தமிழ், ஆங்கிலம், கணனி ரைப்பிங் தெரிந்த பெண் உடன் தேவை. இன்று வரவும்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் கணனியில் அச்சுப்பதித்து பல்கலைக்கழக விதிமுறைக்கமைய அழகாகப் பயிண்டிங் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
ராஜ் புக் பயிண்டிங் அன் கொம்பியூட்டர் பிரின்டிங்,
43,பலாலி வீதி, கந்தர் மடம்,
யாழ்ப்பாணம். 077 6176794
(38337)

**பிற்போடப்பட்டுள்ளது**

இன்று (07.11.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

கூட்டம் நடைபெறும் திகதிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
செயலாளர்,
பழையமாணவர் மன்றம்.
(38401)(30)

**விற்பனைக்கு**

250 - CC ரக G.Q XXXX இலக்கம் உடைய (Full Body) ஹன்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0777 917763
0777 034512
(38400)(30)

**தவறிவிட்டது**

நேற்றைய தினம் பற்றிக் உடுபுடைவைகள் அடங்கிய பார்சல் ஒன்று கந்தர்மடம் ஆலடிச் சந்திக்கும் திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 077 7447946 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது 66/3, பழம் வீதி, கந்தர்மடத்தில் தொடர்புகொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.
(38403)(30)



**மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்**

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

உத்தரவாதம் உண்டு
விலை 14,000/= மட்டும்
IDD ரூபா 25/=மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம்.

கையிருப்பு முடியும்வரை மட்டும்
உடனே விரையுங்கள்!
மேலதி விவரங்களுக்கு:

**பவர் செலூலர் ரேடிங் கம்பனி**
OFFICE:- இல. 185, முதலாம் மாடி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7070, 0712 399 220, 0777 281 521.
SHOP:- 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-38620)(30-16-18)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
07-11-2004

# இந்தியத் தலையீடு: ஈழத் தமிழர்கள் இலவுகாத்த கிளிகளா?

டன்ஸ்ரன் லூயிஸ்



இந்திய இராணுவத்தளபதி என்.சி.விஜ் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் கொழும்பு வந்துசேர்ந்தார். இலங்கை அரசும் இந்திய அரசும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடும் நிலையை எட்டியுள்ள இவ்வேளையில், இந்திய இராணுவத் தளபதியின் இந்தக் கொழும்பு விஜயம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருக்கிறது. கொழும்பு வந்துசேர்ந்ததும் இலங்கை இராணுவத் தளபதி, இலங்கை வெளிவிவகார அமைச்சர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஆகியோரை உடனடியாகவும் மறுநாள் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரையும் சந்தித்து ஆலோசனைகளை நடத்தினார். அவர் இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கியிருந்தபோது வவுனியா.

அநுராதபுரம் ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்யவிருந்தார் என்றும் செய்திகள் வெளியாகின. இலங்கை இராணுவத்தின் பிரதான படையணிகளும், கட்டமைப்புகளும், கட்டளைப் பீடங்களும் நிறைந்த இவ்விரு நகரங்களுக்கும் இந்திய இராணுவத் தளபதி சென்று அங்குள்ள களநிலைவரங்களை அங்கு நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத் தளபதிகளுடன் ஆராய்வது என்பது கொழும்பு அரசின் விருப்பத்துடன் அனுமதியுடன் கொழும்பு அரசின் தேவைக்காக நடைபெறுகின்ற விடயம் என்பதை எவரும் விளங்கிக்கொள்வர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளார் என்பதையும் முதலில் உறுதிப்படுத்தியவர் இந்திய இராணுவத் தளபதியே.

## இறைமையுள்ள அரசை இன்னோர் இறைமையுள்ள அரசு கேட்டல்

இறைமையுள்ள அரசொன்றின் வேண்டுதல், விருப்பம், தேவைகருதி மற்றுமோர் இறைமையுள்ள அரசின் - அதுவும் தென்னாசிய வல்லரசான இந்தியாவின் - இராணுவத் தளபதி வந்துசெல்வது பொதுவானதும் சகஜமானதும்தான் என்ற ரீதியில் கொழும்பு அரச தரப்பால் விளங்கப்படுவதற்கான காரணங்கள் இருக்கலாம்.

இறைமையுள்ள அரசு ஒன்றின் வேண்டுகோளும் மற்றுமோர் இறைமையுள்ள, அதுவும் ஒரு பெரியண்ணன் தோரணையிலுள்ள வல்லரசின் பிரசன்னமும் என்ற அடிப்படையில் இந்திய இராணுவத் தளபதியின் விஜயத்தை விளக்கவோ, விளங்கிக் கொள்ளவோ எவருக்கும் விருப்பம்தான்.

உண்மையில் கொழும்பும் புதுடில்லியும் செய்துகொள்ளவிருக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம், இலங்கை அரசுக்கு எதிராக வேறு ஓர் அந்நிய இராணுவத்தின் அச்சுறுத்தல் நிலவுகின்ற வேளையில் செய்யப்பட்டிருப்பின், அதற்குப் பல நியாயங்கள் கூறப்படலாம்.

ஆனால், இலங்கையின் இனப்பிரச்சினை நீடிக்கின்ற நிலையிலும், போர் ஓய்வு அமுலில் உள்ளபோது ஓர் அரசியல் தீர்வு இறுதியாக எட்டப்படுவதற்கான ஓர் இடைக்காலத்தை வரையறுத்து, இடைக்காலத்தீர்வு ஒன்றுக்கு முனையப்படுகின்ற இவ்வேளையில், இவ்வாறான ஓர் ஒப்பந்தத்துக்கு முயற்சிக்கப்பட்டமை பல்வேறு விதமான அசௌகரியங்களைப் பேசமுற்படும்போதும் இரு தரப்பாருக்கும் விளைவிக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் தெட்டத் தெளிவாகத் தெரியத் தொடங்கிவிட்டன.

## போர்நிறுத்தம் எப்படிச் சாத்தியப்பட்டது?

கடந்த இரண்டரை ஆண்டுகளாக நீடிக்கும் போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட வேளையில், இராணுவவியல் அடிப்படையில் ஒன்றையொன்று வெற்றிகொள்ளமுடியாத இரு சக்திகள் உலகின் எல்லாப் பாகங்களிலும் போல இங்கும் அரசியல் பேச்சுக்குள் நுழைகின்றன என்பது தெளிவாக உரைக்கப்பட்டது. அரசைப் பொறுத்தவரையில் முதுகு உடைந்த தேசியப் பொருளாதாரமும், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை செப்ரெம்பர் 11 நியு,யோர்க் தாக்குதலின் பின்னர் உலக அரசுகள் சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்று திரண்டு யுக்திகள் வகுக்க முற்படக்கூடிய சூழ்நிலை அழுத்தமும், போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாக உந்தியிருக்கின்றது என்ற வெளிச்சமான யதார்த்தநிலைகள் தெரிவிக்கப்படுவது நோக்கத்தக்கதுதான். எனினும், ஒரு சாராரை மறுசாரார் வெற்றிகொள்ளவோ தோற்கடிக்கவோ முடியாத நிலைமைதான் போர்நிறுத்தத்துக்குப் புலிகளையும் அரசையும் உடனடியாக உந்தியது. நல்ல அழகான வார்த்தையில் சொல்வதானால் "சமபல நிலை" அல்லது "இராணுவச் சமவலு நிலை" நிலவியது என்பதே உண்மை.

## விடுதலைப் புலிகள் என்ன சொல்கிறார்கள்?

இந்திய இராணுவத் தளபதி இலங்கை வந்திருந்தமை சம்பந்தப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பாகச் சில நடைமுறை விவகாரங்களை ஆராய்வதற்காக இருக்கும். அவர் வந்து சேர்ந்திருந்த அதேதினத்தன்று பிற்பகல் வன்னியில் செய்தியாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அவ்வாறு ஒரு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருப்பது உண்மையானால், அது தமது இயக்கத்துக்கும் இலங்கை அரசபடைகளுக்குமிடையிலான இராணுவவலுச் சமநிலை பாதிக்கும் என்றும் - இவ்வாறு வலுச்சமநிலை குழம்புதல் சமாதான முயற்சிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் - துல்லியமாகத் தெரிவித்தார்.

## புதுடில்லியின் உளப்பூர்வ நேசத்துக்குரிய ஜே.வி.பி.!

தென்னிலங்கையில் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளுக்கு எதிர்ப்பை வளர்ப்பதில் முன்னின்று செயற்பட்டுவரும் ஜே.வி.பி., கொழும்புக்கும் புதுடில்லிக்குமான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை விரைவாகக் கைச்சாத்திடுவதிலும், அதன் உடனடி அமுலாக்கத்திலும் மிகத் தீவிரமான அக்கறையுடன் காரியங்களை ஆற்றத் தொடங்கியிருந்தமையைத் தென்னிலங்கையின் புத்திஜீவிகள் உறுதிப்படுத்துகின்றனர். ஜே.வி.பியைப் பொறுத்தவரை புதுடில்லியின் உளப்பு,ர்வமான ஆதரவை ஏற்கனவே சம்பாதித்துவிட்ட ஒரு தீவிர வலதுசாரிக் கட்சியாக அது திகழ்கிறது. ஆனால், மேற்கத்திய ஊடகங்களும் உள்நாட்டில் சிலரும் ஜே.வி.பி. சீன ஆதரவுக்கட்சி என்றும் - ஏதோ இடதுசாரிச் சித்தாந்திகள் என்றும் - புனைகதைகள் கூறுகின்றனர்.

## சுகப்பிரசவமாகும் அந்த ஒப்பந்தம்!

அரசியல் பேச்சுக் காலத்தினூடாக விடுதலைப் புலிகள் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைப் பொறுப்பேற்பதைப் புதுடில்லி நிச்சயமாக விரும்பவில்லை என்பதைப் பல மாதங்களுக்கு முன்பிருந்தே தென்னாசிய அரசியல் விமர்சகர்கள் சிலர் சுட்டிக்காட்டியிருந்தனர். ஜே.வி.பி. இடைக்கால அதிகார சபை யோசனைகளையிட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதையே விரும்பவில்லை. ஜே.வி.பியால் உருவாக்கப்பட்டிருக்கும் தென்னிலங்கை அரசியல் சூழலுக்குள் சகித்தலுடன் தனது ஆட்சிய திகாரத்தைக் காப்பாற்றப் படாதபாடுகள் பதினெட்டும் படும் எங்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள், 1998ஆம் ஆண்டு அரசியல் யாப்பைப் புறக்கணித்து அரசியல் நிர்ணயசபை ஒன்றின் மூலமாக எடுக்கப்படும் தீர்மானத்தை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் ஆணை கேட்டுப் புதியதொரு யாப்பை நாட்டுக்கு அறிமுகம் செய்ய முனைந்துள்ளார். இதற்கேற்ப இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸின் ஒரு பகுதி ஆகியனவற்றின் ஆதரவைத் தனக்காக்கியுள்ளது. ஜே.வி.பி. புதிய அரசியல் யாப்பு நாட்டுக்குத் தேவையென்பதிலும் அந்த யாப்பில் தமது நிலைவரங்களைச் சீர்செய்யக்கூடிய உள்ளடக்கங்கள் சேர்க்கப்படவேண்டும் என்பதிலும் தெளிவாக உள்ளது. ஆகையினால், ஜனாதிபதி ஜே.வி.பியைத் தூரத் துரத்துகிறார் என்று யாரும் கனவுகூடக் காணமுடியாது. அத்துடன், அவ்வாறான தூரத் துரத்துகை நடைபெறமாட்டாது என்பதற்கு மற்றுமொரு வலுவான காரணமும் உள்ளது. அக்காரணம் எதுவெனில், அவ்வாறு ஜே.வி.பி. தூரத் துரத்தப்படுவதையோ ஜனாதிபதியுடனான ஜே.வி.பியின் தேனிலவு குழம்புவதையோ புதுடில்லி ஆட்சிபீடம் ஒருபோதும் விரும்பமாட்டாது என்பதைக் கொழும்பிலுள்ள ஜே.வி.பி. ஆதரவு பேராசிரியர்கள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறான ஒரு நிலைமைக்குள் ஒரு 'சுகப்பிரசவமாக' கொழும்புக்கும் புதுடில்லிக்குமான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் நிறைவேறுகிறது. இதுவிடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை நேருக்கியாகவே செயற்படுகிறது என்பதும் வாசகர் தெரிவித்துள்ளது உண்மையாகும்.



## ஜப்பான் பிரதிநிதியும் ஜனாதிபதியும் இந்தியாவில்

இவ்வாறான ஒரு கட்டத்தில் அமெரிக்காவின் நட்புநாடான ஜப்பானின் பிரதிநிதி யசூசி அஹாஷி வன்னியில் விடுதலைப் புலிகளின்

(VIII பக்கம் பார்க்க)

# "யாழ்: தேவியில் நாங்கள் காதல் செய்தால் யாழ்: மீட்டுமே ரயில் தண்டவாளம்.........."

காதல் வைரஸ். காதல் டொட்கொம். காதல் சடுகுடு என்று வரிசையாகத் திரைப்படங்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இப்போது 'காதல் கடிதம்' என்ற படம் புதிதாக உருவாகத் தொடங்கி இருக்கிறது. இதில் என்ன விசேஷம் என்றால் தென்னிந்திய பிரபல இசையமைப்பாளர் உதயா. நோர்வேயில் இருக்கும் இலங்கைத் தமிழரான வசீகரன் எழுதிய பாடல்கள் அடங்கிய அல்பத்தை நோர்வேயில் வெளியிட்டு இருக்கிறார். அந்த அல்பத்தில் உள்ள அத்தனை பாடல்களும் அற்புதமாக அமைந்திருக்கின்றன. பாடல் சிறப்பாக இருந்ததைப் பார்த்த வசீகரன். இசையமைப்பாளர் உதயாவிடம் இத்தனை சிறப்பான பாடல்களை ஒரு திரைப்படத்துக்குப் பயன்படுத்தினால் என்ன என்று கேட்டார் உடனே உதயா துள்ளிக் குதித்தார்.

இப்போது இசையமைப்பாளர் உதயாவைப் பற்றி அறியத் தருகிறேன். உதயா கொழும்பில் கொட்டாஞ்சேனையில் பிறந்து வளர்ந்து யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்று 1982 ஆம் ஆண்டு இந்தியா சென்றார். சிறுவயதிலேயே இசை மீது ஆர்வம் இருந்ததால் கேள்வி ஞானத்திலேயே இசையைக் கற்றுக் கொண்டார். எல்லா இசைக்கருவிகளையும் இசைக்கும் ஆற்றல் பெற்றார். தன் திறமை மீது நம்பிக்கை கொண்டார். இசை அல்பங்களை வெளியிட ஆரம்பித்தார். இவரின் இசை அல்பங்கள் பிரபலமடையத் தொடங்கியது.

அப்போதுதான் சினிமா உலகம் உதயா என்ற இசையமைப்பாளரைக் கண்டுகொண்டது.

இலங்கையைச் சேர்ந்த தேவதாஸ் 'மாநகர காதல்' என்ற படத்தைத் தயாரிக்க முற்பட்டபோது தன் படத்தில் இடம்பெறும் அனைத்துப்பாடல்களையும் உதயாவை வைத்து இசையமைத்தார். இது ஏ.வி.எம். ஸ்ரூடியோவில் பதிவாகியது. அதன் பிறகு 'உறவுக்கு மரியாதை' 'கண்டேன் சீதையை'. ரஞ்சித்தின் 'பீஷ்மர்' ஆகிய. திரைப்படங்களுக்கு இசையமைத்ததை விட அல்பங்களுக்கு இசையமைத்து வெளியிடுவதையே விரும்புகிறார் உதயா. இதுவரை 13 இசை அல்பங்களை வெளியிட்டுள்ளார். அத்தனையும் அமோகமாக விற்பனையாகி இருப்பதாகக் கூறுகிறார்.

'காதல் கடிதம்' அல்பத்தின் பாடல்களை திரைப்படத்தில் பயன்படுத்த திரைக்கதை தேவையல்லவா? கதை யார் எழுதுவது?

உதயாவின் துணைவி வினோலியா சிறந்த எழுத்தாளர். இந்தியாவில் வெளியாகும் முக்கால்வாசி சஞ்சிகைகளில் இவரின் கதை. கட்டுரை. நாவல்கள் வெளியர்கியுள்ளன. உதயாவின் துணைவியே 'காதல் கடிதம்' திரைப்படத்துக்குக் கதை வசனகர்த்தா. காரணம் உதயாவும். வினோலியாவும் காதல் மணம் புரிந்தவர்கள். இலங்கையில் இருந்து ஒரு பெண் சென்னைக்கு இசை பயிலுவதற்காகச் செல்கிறார். அங்கே கம்பியுட்டர் கிராபிக்ஸ் டிசைனர் ஒருவர் மீது காதல் ஏற்படுகிறது. இறுதியில் கிளைமாக்ஸ் வவுனியாவில் முடிவடைவது போல் திரைக்கதை.



'காதல் கடிதம்' திரைப்படத் தொடக்கவிழாவில் படக்குழுவினருடன் தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் சேரனும் (நான்காவதாக நிற்பவர்) உள்ளார்.

இத்திரைப்படத்தை இலங்கையைச் சேர்ந்த பத்மநாதன். நோர்வேயைச் சேர்ந்த வசீகரன். கனடாவைச் சேர்ந்த ரவி ஆகியோர் தயாரிக்க இசையையும் படப்பிடிப்பு ஒழுங்கு இணைப்பையும் உதயா கவனிக்கிறார். இத்திரைப்படத்தை 'ஆட்டோகிராப்' புகழ் சேரனின் இணை இயக்குனர் முக்கேஷ் இயக்குகிறார். ஹீரோவாகப் புதுமுகம் பாலாஜி. ஹீரோயின் மது சர்மா (பம்பாய் மொடல்) மற்றும் சிவகுமார். சரணியா. டெல்லி கணேஷ். ரமேஷ் கண்ணா இவர்களுடன் சிலோன் மனோகர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். இத்திரைப்படத்தின் ஆறு பாடல்களையும் வசீகரன் எழுதி உள்ளார். 'யாழ். தேவியில் காதல் செய்தால் யாழ். மீட்டுமே ரயில் தண்டவாளம்' என்ற பாடல் இப்போது இலங்கை வானொலிகளில் தினம் ஒலிக்கின்றது. திரைப்படம் வருவதற்கு முன்பே இப்பாடல் மிகவும் பிரபலமாகிவிட்டது. இப்பாடலைக் கேட்கும்போது ரயிலில் நாமே யாழ்ப்பாணம் போவது போன்ற உணர்வு.

பாடல்கள் பிரபலமானபின் ஒரு திரைப்படம் தயாரிக்கப்படுவது இதுவே முதல் முறை. இந்த திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளர் உதயா உச்சிக்குப் போவது உண்மை.



# அறிவுரை கூறவும் ஒரு தகுதி வேண்டும்

வயதான தந்தை வீட்டுத்திண்ணையில் இருப்பது மகனுக்குப் பிடிக்கவில்லை. அவரை அழைத்துக்கொண்டு போய் வீட்டுக்குப் பின்புறமுள்ள ஒரு மாட்டுக் கொட்டகையில் தங்கவைத்தான். ஒரு சங்கையும் அவர் கையில் கொடுத்து ''சாப்பாடு. தேநீர் தேவைப்படும்போது சங்கை ஊதினால் எல்லாம் வரும்'' என்றான். அதன்படி எல்லாம் நடந்துவந்தது.

ஒருநாள் திடீரென்று சங்கு காணாமற் போய்விட்டது. எல்லா இடங்களிலும் தேடியும் கிடைக்கவில்லை. ''அப்பா தாத்தாவிடம் இருந்த சங்கை நான்தான் எடுத்து வைத்திருக்கிறேன்'' என்றான் ஏழு வயதான மகன்.

''உனக்குச் சங்கு எதற்கு?'' என்று தகப்பன் கேட்க மகன் சொன்னான்: ''நீங்கள் தாத்தா மாதிரி ஆனதும் உங்களுக்குக் கொடுக்க ஓர் சங்கு வேண்டுமல்லவா? அதற்குத்தான்'' - என்று

## சங்கும் சட்டியும்

இ.சிறிலங்கந்தராசா தொகுத்த 'பல்சுவை மணிகள்' நூலில் வருகின்ற ஒரு துளிக்கதைதான் மேலேயுள்ளது. இதேபோன்றதொரு கதை கி.ராஜநாராயணன் தொகுத்த 'கிராமியக் கதைகள்' தொகுதியிலும் வருகிறது.

அதிலே சங்குக்குப் பதில் மண்சட்டி வருகிறது. ஒரு நாள் வழக்கம்போல கஞ்சியை ஊற்றவந்தவர் ''சட்டியை எடு'' என்றபோது. அது காணாமற்போயிருந்தது. கிழவனின் பேரன் தந்தையிடம் அதைத் தாமே எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதாகச சொல்லி 'அந்தப் பதிலை'ச் சொல்லுகிறான். கதையின் தலைப்பு 'அப்பன் குடித்த சட்டி பிள்ளைக்கு' என்பது.

இன்று ஒருவர் செய்கின்ற வினை பின்னர் அவரையும் சூழும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் இவை.

ஒரு சமயச் சொற்பொழிவாளர் பற்றிய கதை இது. அவர் கொல்லாமை பற்றியும் புலால் மறுத்தல் பற்றியும் மிகவும் உருக்கமான முறையில் பேசுவாராம். ஒருமுறை அவரது உருக்கமான அந்த விளக்கத்தை அவரது மனைவியும் கூட்டத்திலிருந்து கேட்டு உள்ளம் உருகினார்.

அடுத்த நாள் நண்பகல் அவருக்கு உணவு பரிமாறப் படுகிறது. அவர் எதிர்பார்த்த அந்தக் 'கறி' இல்லாததைக் கவனித்தவர் ''எங்கே. அந்தக் கோழிக்கு என்ன நடந்தது?'' என்றார்.

''உங்கள் சொற்பொழிவைக் கேட்டதிலிருந்து எனக்கு அந்தப்பாவத்தைச் செய்வதற்கு மனம் இடம் தரவில்லை. கூடையைத் திறந்து கோழியைக் கலைத்து விட்டேன்'' என்றாள்.

திடுக்குற்ற பிரசங்கியார் ''அடி அசடே அதெல்லாம் ஊருக்கடி... உனக்கல்ல..'' என்றாராம்.

இது. சொல்லுவது ஒன்று செய்வது இன்னொன்று என்பதற்கான எடுத்துக்காட்டு.

தென்கச்சி கோ.சுவாமிநாதன் சொல்லுகின்ற இன்னொரு கதை வருமாறு:

ஒரு பெரியவரிடம் ஒரு பெண் தனது பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்தாள். ''ஐயா என் பிளளை எப்போதும் இனிப்புச்(சீனி) சாப்பிடுகிறான். தடுக்க முடியவில்லை. நீங்கள் தான் அவனுக்கு நல்ல புத்தி கூறவேண்டும்'' என்றாள்.

பெரியவர் சிறிதுநேரம் யோசித்து விட்டு ''சரி நீ போய் ஒருவாரம் கழித்து வா'' என்று கூறி அவளை அனுப்பிவைத்தார்.

போனவள் மீண்டும் பிள்ளையுடன் வந்தாள். பெரியவர் அந்தப் பிள்ளையிடம் இனிப்புச்சாப்பிடக் கூடாது என்று நிறையப் புத்திமதி கூறியதுடன் தாயாரிடம் ''இனி அப்படிச் சாப்பிடமாட்டான்'' என்று ஆறுதல் கூறினார்.




அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம். ''இப்பொழுது சொன்ன புத்திமதிகளை ஒரு வாரத்துக்கு முன்பே சொல்லியிருக்கலாமே! ஏன் ஒரு வாரம் கழித்துவரும்படி சொன்னீர்கள்?'' என்றாள்.

அதற்குப் பெரியவர் சொன்னார்: ''ஒரு வாரத்துக்கு முன்வரை நானும் இனிப்புச்சாப்பிட்டு வந்தேன். இந்த ஒரு வார காலத்திற்குள் அந்தப் பழக்கத்தை நான் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விட்டேன். இப்பொழுது முற்றாகவே விட்டுவிட்டேன் அதனால். இப்பொழுதுதான் அந்த அறிவுரையைச் சொல்லக்கூடிய 'தகுதி' எனக்கு வந்திருக்கிறது'' -என்று!

அறிவுரை கூறுவ[illegible]ருக்கு முதலில் அதற்கான தகுதி வேண்டும் என்பதற்கா[illegible] எடுத்துக்காட்டு இது!

கவியரசு கண்ணதாசனை இதற்கெல்லாம் விதிவிலக்காகக் கொள்ளலாம் போலிருக்கிறது. அவர் தம்மளவில் பல 'தவறு'களைச் செய்தாலும் தம்மை ஒறுத்துக்கொள்வதுபோல நடந்துகொண்டு தமது பேச்சாலும் எழுத்தாலும் மக்களை நல்வழிப்படுத்தியுள்ளார். அதுபற்றிப் பின்னொரு சமயம் எழுதுவேன்.

## நந்தி ஐயா சொன்ன கதை

இந்தமுறை மற்றவர்களின் கதைகளைச் சொல்லியே - நான் அதிகமாக மூக்கை நுழைத்துக்கொள்ளாமலேயே உங்களைச் சிந்திக்க வைத்திருக்கிறேன். கதையோடு கதையாக இதற்குப் பொருத்தமாக இன்னொரு கதை - இதனைப் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் ஒரு நினைவுச் சொற்பொழிவினிடையே கூறியிருந்தார்.

மதகுரு ஒருவர் கிராமம் ஒன்றுக்கு சொற்பொழிவாற்றவென்று சென்றிருந்தார். இடையிலே அவருக்குத் தபாற் கந்தோருக்குச் செல்லவேண்டியிருந்தது. தெருவிலே இறங்கி ''கந்தோர் எங்கிருக்கிறது? அதற்கு எப்படிப் போவது?'' என்று எதிர்ப்பட்ட ஒரு சிறுவனிடம் வழிகேட்டார்.

சிறுவன் எப்படி எப்படியெல்லாம் அந்தத் தெருவால் திரும்பி வளைந்து செல்லவேண்டும் என்று அவருக்குப் புரிந்துகொள்ளும் வகையில் வழிகாட்டினான். மதகுரு அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு அன்று மாலை நடைபெறவிருக்கும் அந்தக் கூட்டத்திலே அவனும் கலந்துகொள்ளவேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதிலே தாம் 'சொர்க்கத்துக்குப் போவதற்கான வழி' பற்றிச் சொற் பொழிவாற்றப் போவதாகவும் கூறினார்.

சனி அங்கிள்

சிறுவன் அலட்சியமாகப் பதில் சொன்னான். ''பக்கத்திலேயுள்ள தபாற் கந்தோருக்கே வழி தெரியாத நீங்கள் சொர்க்கத்துக்குப் போவதற்கு எப்படி வழிகாட்டப் போகிறீர்கள்!! - என்று!

போதகருக்கு எப்படி இருந்திருக்கும்?



# யுத்தத்தின் விலை!

கொழும்பு விமான நிலையத்தில் தரை இறங்கும் போதே அந்நாட்டின் அரசியல்நிலையை உணர்த்தக்கூடிய இரண்டு சம்பவங்களைப் பார்க்கமுடிந்தது. ஏராளமாய் உலகெங்கிலும் இருந்துவந்து குவிந்துகொண்டிருந்தார்கள் புலம்பெயர்ந்த தமிழர்கள். ஐரோப்பிய நாடுகளின் விடுமுறைக்காலம். ஜேர்மனும், பிரெஞ்சும் சரளமாய்ப் பேசும் தமிழ்க்குழந்தைகள் வாழப் பாதுகாப்பற்றதாய் ஆக்கிவிட்ட, தங்கள் பிறந்த மண்ணையும், குண்டுகளுக்கும்

**தமிழகத்திலிருந்து வெளியாகும் 'குமுதம்' வார இதழின் கட்டுரையாளர் ஒருவர் அண்மையில் யாழ்பாணத்துக்கும் வன்னிப் பகுதிக்கும் விஜயம் செய்திருந்தார். தமிழ்ப்பிரதேசங்களின் இன்றைய நிலை தொடர்பான அவரது மனப்பதிவு இது. 'குமுதம்' வார இதழில் வெளியாகியிருந்த அவரது கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.**

ஷெல்களுக்கும் இடையே பங்கர்களில், காடுகளில் உயிரைக் கையில் பிடித்து வாழ்ந்த தாத்தாக்களையும் பாட்டிகளையும் பார்க்க வந்திறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பெற்றோர்களின் முகங்களிலோ பல வருட புலப்பிரிவு நிறைவுறுகிற ஒரு பரவசம்.

இன்னொரு சம்பவம் சற்று அதிர்ச்சியளிக்கக்கூடியது. சென்னையில் இருந்து விமானத்தில் ஆங்கிலத்தில் உரையாடிக்கொண்டே வந்த சிங்கள இளைஞர் ஒருவர், நான் கொழும்பு விமான நிலையத்தில் தமிழில் பேசியவுடன் சற்றே முகம் மாறி "Don't tell me that you are one of those NRT" (நீங்களும் இங்கு வசிக்காத தமிழரென்று சொல்லிவிடாதீர்கள்) எனக் கூறினார். நான் வட இந்தியப் பெண் என நினைத்ததாக் கூறிய அவர், உடனே இறுக்கமான முகத்தோடு விடைபெற்றுக்கொண்டார். அவர் தமிழ்மக்களை வெறுக்கிறார் என நினைக்க முடியவில்லை ஆனால், ஒரு சௌகரியமான தயக்கம் அவரிடம் வந்துவிட்டது.

கொழும்பில் துவங்கிய கார்ப் பயணம், வவுனியாவில் முடிந்தது. இடையே அநுராதபுரம் என்ற சிங்கள நகரம் இராணுவ வீரர்களுக்காக ஓர் அங்கீகாரமற்ற பாலியல் சந்தையாக மாற்றப்பட்டுவிட்ட ஒரு சிறு ஊர். முதலில் இராணுவ செக்போஸ்ட். அனைத்துப் பெட்டிகளையும் திறந்து சோதித்தபின் அனுப்பிவைத்தனர். பின்னர் புலிகளின் செக்போஸ்ட், இங்கு படைப்பிரிவு யூனிஃபார்ம் அணிந்த எவரும் தென்படவில்லை. கஸ்டம்ஸ் பிரிவினர் அவர்களுக்கான உடையில், வருவோரிடமுள்ள 'சீடி'க்களில் என்ன இருக்கிறது? என்று சோதனை செய்கிறார்கள். தமிழ்ச்சினிமாக்களை அனுமதித்துள்ளபோதும், புலிகள் சில தணிக்கை விதிகளுக்கு உட்படுத்தியே காட்சிக்கு அனுமதிக்கின்றனர் எனவேதான் இந்தச் சோதனை. செக்போஸ்டில் துவங்கி அரசியல் தலைமையகமான கிளிநொச்சி வரை எங்குமே ஆயுதம் தாங்கிய புலிகளைக் காணஇயலவில்லை. இதற்கு நேர்மாறாக, யாழ்ப்பாணத் திலிருந்து முகமாலைவரையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், ஏன் தலைநகர் கொழும்பிலும் கூட திரும்பிய பக்கமெல்லாம் ஆயுதமேந்திய இராணுவ வீரர்கள்.

அடுத்துவருகிறது கிளிநொச்சி. பலநூறு குண்டுகளை, ஷெல்களைத் தன் மடி எங்கும் சுமந்த அந்த மண், ஒரே சுவற்றில் நூறுமுறை சுடப்பட்ட வீடுகள், (CARPET VOMBING) (அடுத்தடுத்து ஷெல் அடிப்பது) என்ற பெயரால் அழிக்கப்பட்ட வன்னி மக்களின் அடர்பாடுகள் எனச் சிதைவுற்ற ஒரு பிரதேசம்.

ஆனாலும், அயராத நம்பிக்கைகொண்ட மக்கள், மீண்டும் ஒரு வளவாழ்வைச் சொந்த நாட்டினுள் ஏற்படுத்துவோம் என்ற முனைப்புடன் வயல்களைத் திருத்திக்கொண்டும் வீடுகளைச் செப்பனிட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். புலிகளின் பிரதேசத்தில் சீரான நிர்வாக இயக்கம் தெரிகிறது. சாலையில் நீல சீருடை அணிந்த பெண் போக்குவரத்துக் காவலர்கள், 'பாண்டியன் சுவையூற்று', 'A-9 பார் ரெஸ்ரோறன்ட்', 'சேரன் குளிரூட்டப்பட்ட உணவகம்', '24 மணிநேர தொலைபேசி வசதி, 'இணையத்தள தொடர்பு மையம்' என இரண்டாண்டில் வணிக வளர்ச்சிகள் ஆச்சரியமான இன்னொரு விடயம். இராணுவப் பிரதேசமான வவுனியாவைவிட புலிகளின் கிளிநொச்சியில் உணவின் விலை பலமடங்கு குறைவு.



ஒருபெண் என்கின்ற முறையில் எவ்வித பயமுமில்லாத ஒரு பாதுகாப்பான உணர்வும் இங்கே ஏற்பட்டது. 'புலிகளின் கடுமையான ஒழுக்கவிதிகளும் மீறுபவர்களுக்கான கடும்தண்டனையுமே இதற்குக் காரணம்' என்கிறார் சர்வதேச அரசு சாரா நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவர்.

அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரை முக்கியசாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன. மற்றப்படி பல இடங்களுக்கு மின்சாரமில்லை, பள்ளிகளெல்லாம் இடிந்தநிலையில், அயல்நாடுகளில் குடும்ப உறுப்பினர் எவருமில்லாதவர்கள் இடிபாடுகளை வீடாகப் பாவித்து வாழ்க்கை நடத்துகிறார்கள். புனர்வாழ்வுக்கான பணிகளை ICRC, UNICEF, NECORD போன்ற தொண்டு நிறுவனங்களின் உதவியோடு புலிகளின் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் செய்துவருகிறது. ஆனாலும், ஒரு அரசு இயந்திரம் களமிறங்கி சீர்செய்தாலே பலவ்ருடம் பிடிக்கும் என்ற அளவிற்கு அங்கு தேவை உள்ளது. இது புலிகள் பிரதேசத்தின் நிலை.

இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் நிலை இன்னமும் மோசம். யாழ்ப்பாணத்திற்கு விமானம் சென்று பலாலியில் இறங்கினால்... ஒரு வெட்டவெளிதான். விமான நிலையம். சுமார் இருநூறு இராணுவ வீரர்கள் அணிவகுத்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.




யாழ்ப்பாண நகருக்குள்ளேயே மோசமான நிலையில் தீப்பெட்டி குடியிருப்புக்குள் அகதிகளாய் வாழும் பலாலியின் மக்களைப் பார்த்தபோது, நமக்கே வலிக்கிறது. போர் நிறுத்தம், அமைதிப்பேச்சு, சர்வதேசத் தலையீடு ஆகிய எதுவும் இந்த மக்களைத் தங்கள் சொந்த வீட்டிற்குக் கூட இன்னும் அனுப்பவில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் ஓர் ஊர் சாவகச்சேரி. இங்குள்ள பள்ளி போரினால் தகர்க்கப்பட்டு அதன் ஒரு பகுதி சீரமைக்கப்பட்டு, இன்னொரு பகுதி சிதிலமாய் இயங்கிக்கொண்டிருக்கிறது. போர்நிறுத்தத் தமிழர் வாழ்க்கையைப்போல், பள்ளியின் முதல்வர் அருந்தவபாலன் ஆவேசமாய், "சிங்களவர் பகுதியில் 10,000 ஆசிரியர்கள் கூடுதலாய் இருக்கிறார்கள். எமக்கு 10,000 பேர் பற்றாக்குறை . அரசு எந்த நிதியுதவியும் செய்யவில்லை. சில தொண்டு நிறுவனங்கள்தான் உதவி செய்துவருகின்றன. சிங்கள அரசியல்வாதிகள் மேல் எமக்கு நம்பிக்கையில்லை. தேர்தல் நேரத்தில் சவூதி அரசு இங்குள்ள அகதிகளுக்கு அளித்த உணவுப் பொருள்களை, வாக்காளர்களைக் கவர ஜெயலத் ஜெயவர்த்தன என்கிற எம்.பி. செலவுபோல் அளித்திருக்கிறார். இவர்களை நாங்கள் எப்படி நம்புவது? எங்களுக்கென ஓர் இடைக்கால நிர்வாகம் வேண்டும்" எனப் பொரிகிறார். அமைதிப் பேச்சில் புலிகள் முன்வைத்த கோரிக்கையான இடைக்கால நிர்வாகக் கவுன்சிலை ஜே.வி.பி. போன்ற சந்திரிகாவின் கூட்டணிக் கட்சிகள் எதிர்க்கின்றன. இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் அளிக்கப்பட்டால் அவர்களுடைய பலம் பெருகிவிடும் என இக்கட்சிகள் கூறிவருகின்றன. பள்ளிக்கூட நிலைமை இதுவென்றால் மருத்துவ வசதி அதைவிட மோசம். சாவகச்சேரிப் பொது மருத்துவமனை என ஒரு பெரிய மைதானம் இப்போது இருக்கிறது. ஆங்காங்கே உடைந்த சிறு சுவர்களோடு முற்றிலும் அழிக்கப்பட்ட இந்த மருத்துவமனையை ஒரு சிறு ஹோலில் உயிர்ப்பித்து நடத்திக்கொண்டு இருக்கிறார் அம்பி கைபாகன். போரின் வலி அவர் முகத்தில் தெரிகிறது. கடும் போர் நடைபெற்ற காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்தியம் பார்ப்பதையே முழுநேரப்பணியாக, தனக்கென குடும்பத்தைக்கூட ஏற்படுத்திக் கொள்ளாத இந்த அதிசய மனிதர், தன்னந்தனியராய் முற்றிலும் அழிந்த மருத்துவமனையை மீண்டும் எழுப்ப முயன்றுவருகிறார்.

"எந்த வசதியுமில்லை. மண் தரை மீது பாய்விரித்துப் பலநோயாளிகளைப் படுக்கவைத்திருக்கிறோம். அரசைக் கேட்டால் சரியான பதில் கூட வருவதில்லை. இடைக்கால நிர்வாகக கவுன்ஸில் "புலிகள் கோரிக்கை" என்கின்றார்கள். அது மக்களின் தேவை. எந்த வசதிகளு மின்றி அதை முறையிடவோ, கேட்கவோ கூட யாருமின்றி போர்நிறுத்த காலத்திலும் எம்மக்கள் துயருறுகிறார்கள். இன்ரறிம் கவுன்ஸில் வந்தால் நாங்கள் அவர்களைக் கேள்வி கேட்கமுடியும் தானே?' - என வருந்தினார்.

புலிகளின் பிரதேசத்தில் ஒருபோதும் சந்தித்திராத, பெண்களைக் கிண்டல்செய்யும் வழக்கத்தையும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சந்திக்கமுடிந்தது. கைலாசபிள்ளையார் கோயில் எதிரில் பணியிலிருக்கும் ஒரு காவலரே அவ்வழியாகச் செல்லும் பள்ளி மாணவிகளைச் சீண்டும் காட்சி அதிர்ச்சியளித்தது.

இரண்டு பகுதிகளிலும் ஏராளமான அநாதைக் குழந்தைகள் பல்வேறு அநாதை இல்லங்களில்.... போரினால் மனநோயாளிகளாய் ஆன பெண்களுக்கு இல்லம், போரினால் காயப்பட்டு ஊனமுற்றோருக்கு ஓர் இல்லம் என போரின் உயிர்ச்சாட்சிகள்.... யுத்தத்திற்கு இவ்வளவு பெரிய விலையா? என கேள்வி எழுகிறது மனசுக்குள்.

முன்னர் சந்தித்த சாவகச்சேரி மருத்துவர் அம்பிகைபாகன் வழியனுப்பும்போது கூறியது நினைவுக்கு வந்தது. 'இவ்வளவு இழப்புக்களைச் சந்தித்துவிட்டோம் எங்கள் மக்கள் சாவுக்குள்ளேயும் வாழப் பழகிட்டாங்க.... இத்தனைக்கும் பிறகு எங்களுக்கு வெறும் அமைதி வேண்டாம் - கௌரவமான தீர்வுவேணும். தன்மானத்தோடான வாழ்க்கை வேணும்."

நெகிழவைத்த இன்னொரு விடயம், யாழ்ப்பாணத்தின் கடைகளிலாகட்டும் வன்னியின் வீடுகளிலாகட்டும் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர் என்றதும் அவர்கள் காட்டிய அன்பும், உபசரிப்பும் ... ஏதோ பிரிந்துபோன உறவினரைக் கண்டது போல் அவர்கள் அடையும் மகிழ்ச்சி ஆட்டோவிற்கு அளித்த பணத்தை "நீங்க தமிழ்நாட்டில இருந்து எங்க மண்ணுக்கு வந்ததே சந்தோசம். வேண்டாம்" எனத்திருப்பி அளித்த பட்டதாரி ஆட்டோ ஓட்டுநர் கிருபா, "என்னைக்காச்சும் ஒருக்கா தமிழ்நாட்டைப் பார்த்திடனும். ஆனா, அனுமதி கிட்டாதில" எனக்கேட்ட வித்தியா. பலர் கேட்ட, சிலர் கேட்காமல் மனதில் வைத்த, "தமிழ்நாடு மக்கள் எங்கட போராட்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? " என்ற வினா?....

நம்முடைய பத்திரிகைகளை அதிக காசு கொடுத்து வாங்கி நம்முடைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் அவர்கள் வாழ்வோடு சிறிதும் தொடர்பில்லாத திரைப்படங்களையும் பார்த்து, நம்மை அவர்களில் ஒரு பகுதியாகப் பார்க்கும் இம்மக்களை நாம் எப்போதாவதேனும் நினைத்தாவது பார்க்கிறோமா? இருபது நாள்கள் இந்த யுத்த பூமியில் இருந்தபின் மனதில் தோன்றியது இந்தக் கேள்வி.

**- ரேவதி.**

# பூமரங்களை மொட்டையடிக்கும் சிறுவர் சிறுமியர்

## சத்தமும் —— —— சந்தடியும்

மது வளவுக்குள் பூ ஆய்வதற்கு அனுமதி கேட்டுவந்த சிறுமிகள் சிலரை அந்த வீட்டு அன்பர் கோபத்துடன் சத்தம் போட்டு துரத்திக்கொண்டிருந்தார்.

ஏதோ அவசரத்தேவைக்குத் தானே பூ கேட்கிறார்கள், கொடுத்தால் என்ன என்று கேட்டதற்கு அவசரத் தேவைக்கு என்று கேட்டால் கொடுக்கலாம், இந்தப் பூக்களை வைத்துக்கொண்டு வேறு என்னதான் செய்யப்போகிறோம்? என்று திருப்பிக்கேட்டார் அவர்.

பிறகு ஏன் அவர்களைத் துரத்துகிறீர்கள்? என்று மீண்டும் கேட்டபோது அவர் சொன்னார்:

'இப்படித்தான் சிலதினங்களுக்கு முன் சரஸ்வதி பூசைக்கென்று பூ கேட்டுவந்தார்கள். வாசலில் நித்திய கல்யாணி பூத்துக்குலுங்கிக்கொண்டிருந்தது. தாராளமாகப் பிடுங்கிக்கொண்டு போகட்டும் என்று நினைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்து வேறுவேலையில் இறங்கிவிட்டேன். சிறிதுநேரம் கழித்து வெளியில் வந்து பார்த்தால், வீட்டு வளவுக்குள் இருந்த நித்திய கல்யாணி மரங்களில் மட்டுமல்ல, எக்ஷோரா, நந்தியாவெட்டை, கற்பூரப்பூ, செம்பருத்தி மற்றும் அனைத்துப் பூக்களையும் பறித்துக்கொண்டு போயிருந்தார்கள், மலர்ந்த பூக்களை மட்டுமென்றாலும் பேசாமலிருக்கலாம், மொட்டுக்களையும் கூட காம்புகளுடன் முறித்து எடுத்துக்கொண்டுபோயிருக்கிறார்கள் – வீட்டில் சுவாமிப் படத்துக்கு வைத்து கும்பிடவும்கூட ஒரு பூவையும் விட்டு வைக்கவில்லை. இப்படிச் செய்தால், எப்படி இவர்களைப் பூ ஆய்ந்து கொண்டுபோகும்படி விடலாம்? அதனால்தான் துரத்திவிட்டேன் என்றார் அந்த அன்பர்.

அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கிறதுதானே.

### அழகுக்காக மட்டுமல்ல

தமிழர்கள் குறிப்பாக இந்துக்கள் வீட்டுவளவுகளில் மலர்ச்செடிகளை வளர்ப்பது அழகுக்காக மட்டுமல்ல, கோயில் பூசைக்கும், வீட்டில் நாளாந்தம் தாம் செய்யும் வழிபாட்டுக்கும் அங்கு நடக்கும் புனித கைங்கரியங்களுக்கு பயன்படுத்திக்கொள்வதற்காகவும் தான்.

மாணவர்கள் தம் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களின்போது வீடுகள் தோறும் சென்று மலர் சேகரிப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், மேலே குறிப்பிட்டது போன்று வீட்டு உரிமையாளர்களுக்கு ஆத்திரம் ஊட்டும் வகையில் நடந்துகொள்வது சரியல்ல. மலர் மொட்டுக்கள் தேவையென்றால் அதனை அவர்களிடம் தெரிவித்துவிட்டுத்தான் ஆயவேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் கல்லூரியொன்றில் சரஸ்வதிப் பூசையின் போது மொட்டு மலர்களைக் கொண்டு வந்த மாணவிகளை பொறுப்புள்ள ஆசிரியர்கள் கடிந்துகொண்டு மொட்டுக்களை ஆய்ந்து தலை அலங்காரங்கள் செய்துகொள்வதையும் தவிர்க்கும்படி ஆலோசனை கூறியிருந்தார்கள் என்று அறிய மகிழ்ச்சியாகவிருந்தது.

### இமிற்றேசன் பூக்கள்

# 'பிளாஸ்டிக்' மலருக்கு கல்லூரியில் தடை

நந்தன் எழுதுவது

அதுமட்டுமல்ல, விஜயதசமி பூசையின்போது 'இமிற்றேசன்' அதாவது 'பிளாஸ்டிக்' பூக்களை ஏவரும் அணிந்து வரக்கூடாதென்று மகளிர் கல்லூரி ஒன்றில் முதல்நாளே அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு "டூப்ளிக்கேட்" பூக்கள் அணிந்து வந்தவர்களிடமிருந்து அவைகள் அகற்றப்பட்டதாகவும் கூட தெரியவந்துள்ளது.

புதுவிதப் பொருள்களிலும் நடைமுறைகளிலும் இளம்வயதினர் தம்மை அறியாமலே ஈடுபட்டு விடுவது இயற்கை. ஆனால், அதனால் அவர்களுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் கூட ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி அவர்களுக்குப் புரிவதில்லை. அதனை முறையாக விளங்கி அவர்களை நல்வழிப்படுத்துவது வளர்ந்தவர்களுக்குக் குறிப்பாக ஆசிரியர்களுக்குரிய கடமை. சிலசமயங்களில் ஆசிரியர்களே அவர்களுக்கு முன்னுதாரணமாகவும் செயல்படுவது அவசியம்.

### பெண்களின் உடை

பல வருடங்களுக்கு முன்வரை பெண் ஆசிரியர்கள் கட்டைப் பாவாடை அணிந்து பாடசாலைக்கு வருவதற்கு தடை இருந்தது. அவர்கள் அவசியம் சேலைதான் உடுக்கவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுத்தப்பட்டமை சமூகத்திற்கு முன்மாதிரியாக இளம்சமுதாயத் திற்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டியவர்கள் என்ற முறையில் மட்டுமன்றி தமிழர்களின் பண்பாட்டு ரீதியிலான உடையாகவிருந்தமையால் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டனர். இன்று அதுவே பெண் ஆசிரியர்களின் சீருடையாகவும் இருந்துவருகின்றது.

பொதுவில் பொதுமக்களுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடும் பெண்கள் சேலை அணியவேண்டும் என்ற ஒரு பொதுநியதி இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், இதனை சட்டரீதியாகக் கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை. பெண் உரிமைகளில் தலையிடுவதாக மனித உரிமை அமைப்புகள் போர்க்கொடி உயர்த்தவும் கூடும்.

எதுவானாலும், பாரம்பரிய விழுமியங்களைப் பேணவேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உண்டு.

நாகரீகத்தின் பேரால் அரைகுறை ஆடைகளில் பெண்கள் தோற்றமளிப்பது கலாசாரத்தைச் சீரழிப்பதாகும்.

ஜேர்மனியில் பல வருடங்கள் இருந்தவரான ஓர் இளம் தாய் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

நெற்றியில் பொட்டிட்டு சேலையுடுத்திய நிலையில் காணப்பட்ட அவரிடம் மேல்நாட்டு உடையணிவது இல்லையா என்று ஒருவர் கேட்டபோது மேல்நாட்டு உடை மேல்நாட்டுக்குத் தான் பொருந்தும் என்றும் நமது நாட்டுக்கு நமது உடைதான் சரி என்றும் பட்டெனக் கூறினார்.

எவ்வளவு பொருத்தமான பேச்சு; பொருத்தமான உடை; அவர் வாழ்க.

மேல்நாட்டுக்கே போகாதவர்கள் கூட இங்கு 'காமா சோமா'வென்று உடைகளை உடுத்துக்கொண்டு வலம்வருகிறார்கள். ஆண்கள் மட்டுமென்ன குறைந்துவிட்டார்களா?

மேல்நாட்டவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன.

அவைகளை விடுத்து நமது பண்பாட்டுக்கும் நாட்டுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமில்லாத நடையுடை பாவனைகளில் ஆர்வம்காட்டுவதை இளம்தலைமுறையினர் கைவிடவேண்டும்.

அண்மையில் பொதுநிகழ்வொன்றில் யாழ். கூட்டுறவுச் சபையின் கல்வி அபிவிருத்தி மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் பேசுகையில், இன்றைய இளம்பெண்கள் சேலை உடுக்கக்கூடத் தெரியாமல் பிறர் தயவை நாடும் நிலையில் இருக்கிறார்களே என்று கவலை தெரிவித்திருந்தார்.

தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப உடைகளில் மாற்றம் தேவையாய் இருக்கலாம். ஆனால், நமது பாரம்பரிய உடையான சேலையையும் வேட்டியையும் அணிவதற்குத் தெரியாமல் இருக்கிறோம் என்றால் அது கவலைக்குரியதே.

தமிழ்விழாக்களில், சமய நிகழ்வுகளில் பாரம்பரிய ஒன்றுகூடல்களில் தமிழர்கள் தமக்குரிய உடைகளை உடுத்துவது என்ற நிலை ஏற்படுமானால் வரவேற்கக் கூடியதாகவிருக்கும். இதற்கு யாரும் கட்டாயப்படுத்தவேண்டும் என்று இல்லை. நம்மை நாமே இதற்கு பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும்.

# முகவரி...?




டற்கரையின் அலையில் எழும் கானமே தினம் கேட்கும் ராகமாக வானமே கூரையாக அந்தப் பரந்த காணிக்குள் சிறிய கொட்டிலில் வாழ்ந்துவருபவர்களான கௌரியும் அவளது 10 வயது மகள் வாசுகியும். வாசுகியின் தந்தை அவளை விட்டுப்பிரிந்து, இல்லை கொடிய யுத்தத்தால் பிரிக்கப்பட்டு பல வருடங்களாகிவிட்டன.

வறுமை கௌரியின் வீட்டில் தாண்டவம் ஆடினாலும் வாசுகியின் ஆற்றலிலும் அறிவிலும் இறைவன் எதுவித குறையும் வைக்கவில்லை. அன்றும் வழமையாக துடுக்காய் நித்திரை விட்டெழுந்த வாசுகி, பாடசாலை போவதற்குத் தயார் செய்து பாடசாலை நோக்கி நடந்தாள்.

அவளும் பாடசாலையை அண்மிக்க காலைக் கூட்டத்திற்கு மாணவர்கள் கூடிநின்றார்கள். அங்கு இறைவணக்கத்தைத் தொடர்ந்து அதிபரின் உரை ஆரம்பமானது.

"பிள்ளைகளே நாளைக்கு உங்கட குடும்ப விவரத்தை இங்கு பதியபோகின்றோம். எனவே உங்கள் குடும்ப அட்டை, முத்திரை, அடையாள அட்டை எல்லாவற்றையும் கொண்டுவரவும்" என்று கூறி அதிபர் தனது உரையை முடித்தார்.

அதிபர் கூறியதுபோல் வாசுகி தன்தாயிடம் எல்லாவற்றையும் கேட்டுவாங்கி மறுநாள் பாடசாலைக்குப் புறப்பட்டாள்.

பாடசாலையில் வகுப்பாசிரியர் ஒவ்வொருவரினுடைய பதிவுகளையும் மேற்கொண்டார். இறுதியாக வாசுகியின் ஆவணங்களை வாங்கிய அவர் ஒரு தடவை வாசுகியை நிமிர்ந்து பார்த்தார்.

"வாசுகி என்ன ஒன்றில பலாலி என்றிருக்கு மற்றதில கட்டுவன் என்றிருக்கு இன்னொன்றில சுன்னாகம் என்றிருக்கு கடைசியா கொழும்புத்துறை என்றுமொரு பதிவுமிருக்கு உங்கட சொந்த இடம் எது பிள்ளை சரி."

எனக்குத் தெரியாது சேர் அம்மாவைத்தான் கேட்கவேணும் என்றாள் வாசுகி.

பாடசாலை முடிந்து வீட்டுக்குப்போன வாசுகி "அம்மா எங்கட சொந்த இடம் எது?"என்று தன்னுடைய மழலைப் பாணியில் தாயிடம் கேட்டாள். தாயும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "எங்கட சொந்த இடம் பலாலி."

"ஏனம்மா எங்கட இடத்திற்கு போகேலாதா?."

"அங்க ஆமிக்காரங்கள் நிக்கினம் நாங்கள் போகேலா." "ஏனம்மா இப்ப ஆமிக்காரங்கள் சண்டை பிடிக்கிறதில்லைத்தானே! குண்டு போடுறதில்லைத்தானே! சமாதானம்தானே!

இதுக்குத்தான் கொஞ்சக்காலமா நாங்களும் மறியற் போராட்டம், மகஜர் கையளிப்பு என்று அலைஞ்சு திரிகின்றோம். எப்பதான் எங்கட ஊருக்கு விடப்போறார்களோ தெரியாது" என்று பெருமூச்செறிந்தாள் தாய் கௌரி...

# செல்வச் செழிப்பு மிகு அமெரிக்காவில் இன்று பாதுகாப்புப் பற்றியே அச்சம்

## அமெரிக்கா நோக்கிய ஆன்மீகப் பயணம்...

**ஆறு.திருமுருகன் எழுதுவது...**

**ஒருவரின் சுற்றுலாப் பயணம் அவருக்குப் பல அனுபவங்களையும் படிப்பினைகளையும் தருவதாகும். அவற்றைச் சம்பந்தப்பட்டவர் தன்னோடு வைத்திருக்காமல் பிறருக்குச் சொல்வதன் மூலம் வேறு சிலரும் பல புதிய விடயங்களை அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகிறது.**

**தமது பயணம் பற்றிக் கட்டுரை எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் அவ்வாறு செய்யும்போது, பல லட்சக் கணக்கானோர் தெரிந்திராத பல புதிய விடயங்களையும் செய்திகளையும் அறிந்து கொள்ளமுடிகிறது.**

**சிறந்த ஆன்மீகப் பேச்சாளரும் சமூக நலனில் அக்கறை கொண்டவருமான இக்கட்டுரையாளரின் அமெரிக்கப் பயண அனுபவங்கள் வாசகர்களுக்குப் பல புதிய செய்திகளைச் சொல்லும்; வியத்தகு பல விடயங்களைத் தரும்.**

**உதயனின் 'சூரியகாந்தி'க்கென செஞ்சொற்செல்வர் எழுதிய சிறப்புத் தொடர் இது.**

**2**

செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி ஐந்தாவது தடவையாக இங்கிலாந்தில் உரையாற்றச் செல்ல ஆயத்தமான யான், அங்கிருந்து அமெரிக்கா சென்று அமெரிக்காவில் இருந்து கனடா சென்று மீண்டும் இங்கிலாந்து வந்து இலங்கை வருவதாக எனது பயண ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்தி இருந்தேன். பிரித்தானியத் தூதரகத்திலும் கனடா தூதரகத்திலும் ஏற்கனவே அந்நாடுகளுக்குச் சென்று வந்துள்ளமையால் சுலபமாக விசா வழங்கினார்கள். நவராத்திரி பத்து நாள்களும் லண்டன் ரூட்டிங் முத்து மாரியம்மன் கோயிலிலும் ஏனைய சில ஆலயங்கள், தமிழ்ச் சங்கங்கள் போன்றவற்றிலும் சொற்பொழிவுக்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே ஏற்படுத்தி இருந்தார்கள். லண்டன் சென்ற அன்றிரவே என் தொடர் விரிவுரை ஆரம்பமாகியது. நவராத்திரி காலம் என்பதால் லண்டனில் நடைபெற்ற பல கலை விழாக்களில் இம்முறை கலந்துகொண்டேன். திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்பர் மகாதேவன் ஜெயசீலன் அவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக எனக்கெனத் தொலைபேசியை லண்டனில் பயன்படுத்தக்கூடிய வகையில் வழங்கியிருந்தார். அத்தொலைபேசி இலக்கம் லண்டனில் வாழும் எனது நண்பர்கள், அன்பர்களுக்கு நன்கு பரீட்சயமாகிவிட்டது. லண்டனில் வெளிவரும் 'புதினம்' என்ற தமிழ்ப்பத்திரிகையில் எனது லண்டன் விஜயம் பற்றியும், அமெரிக்கா, கனடா விஜயம் பற்றியும் பத்திரிகையாசிரியர் சிறப்புக் கட்டுரை எழுதியிருந்தார். லண்டன் 'பாரதீய வித்தியாபவன்' இல் நடைபெற்ற நவராத்திரிக் கலை விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய மறுநாள் காலை பல குழந்தைகளுக்கு லண்டன் 'சிவயோகம்' மண்டபத்தில் ஏடு தொடக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அன்று மாலையே 'அமெரிக்கன் எயார்லைன்ஸ்' விமானத்தில் அமெரிக்காவிற்குப் புறப்பட்டேன். லண்டன் 'ஹீத்ரோ' விமான நிலையத்தில் விமானம் ஏறுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு மீண்டும் மீண்டும் என்னையும் சில பயணிகளையும் சோதனை செய்தே பயணத்தைத் தொடர அனுமதித்தனர். ஆறு மணித்தியாலத்தில் நானூறு பிரயாணிகளைச் சுமந்து சென்ற மிகப்பெரிய விமானம் அமெரிக்க புளோரிடா மியாமி சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தது. உலகப் பிரசித்தி பெற்ற, உல்லாசப் பிரயாணிகள் அதிகம் கூடுகின்ற மியாமி விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் இருநூறுக்கு மேற்பட்ட விமானங்கள், விளையாட்டுப் பொருள்களை அடுக்கி வைத்தது போல் நிரைநிரையாக நின்ற காட்சி, செல்வந்த நாடு என்பதற்கு முதலடையாளமாக என் கண்ணில் தென்பட்டது. ஒரே காலப்பகுதியில் ஒவ்வொரு திசைகளாலும் விமானம் புறப்படுவதும், விமானங்கள் தரையிறங்குவதும் 'ஆ...... இதென்ன அதிசயம்' என வியக்கவைத்தது. மியாமி விமான நிலையத்தில் சோதனை வரிசையில் நின்றபோது விமானநிலைய சோதனையாளர் இருவர் என்னை அழைத்து முதன் முதலாக அமெரிக்காவுக்கு வரும் பயணிகளுக்கான விசாரணைப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் ஒரு நாயைச் சங்கிலியில் பிணைத்தவாறு ஒருவர் என்னருகே வந்தார். நாய் என்னையும் பயணப் பைகளையும் மோப்பம் பிடித்த வண்ணம் சுற்றி வந்தது. நான் மிகவும் திகைப்படைந்துவிட்டேன்.

பல நாடுகளுக்குச் சென்ற பயண அனுபவம் எனக்கிருந்தபோதும் இச்சோதனை முறை மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது. நாய் மூலமான சோதனை முடிந்தபின் தனியான அறைக்கு அழைத்துச் சென்று எனது வேட்டி, நஷனல் போன்றவற்றை உடற்சோதனைக்காக இலகுபடுத்தி சோதனைகளைத் தொடர்ந்தனர். அதன் பின்பு வேறோர் இடத்துக்கு அழைத்துச் சென்று சில வினாக்களைத் தொடுத்தனர். இறுதியில் சமயப்பேச்சாளர் என்பதை என்னிடமிருந்த அல்பத்தைப் பார்த்து, ஏற்று நாட்டுக்குள் செல்ல அனுமதி வழங்கினர். அமெரிக்க தேசம் செல்வச் செழிப்பால், அறிவாற்றலால் சிறந்து நின்றபோதும் இன்று அந்நாட்டில் எவ்வேளையும் ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் நிறைந்திருப்பதை சாதாரண பயணியாகிய என்னைச் சோதனை செய்தமுறை விளங்கிக்கொள்ள வாய்ப்பளித்தது. 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அந்நாட்டில் ஏற்பட்ட திடீர் விமானத் தாக்குதலோடு அந்நாட்டுப் பாதுகாப்பு நடைமுறைகளில் தற்போது கடும்போக்கு நிலவுவதனை பயணிகளனைவரும் உணர்ந்துகொள்வர். ஆறறிவு படைத்த மனிதர்களிடையே ஏற்பட்டுள்ள அச்சத்தின் விளைவால் மனிதன் மனிதனை ஏற்றுக்கொள்வதில் ஐந்தறிவுப் பிராணியான நாயின் அனுமதியுடனேயே நடப்பது வியப்புக்குரியது. விண்வெளிக்கு மனிதன் செல்வதற்கு முன்பு நாயை முதலில் அனுப்பிப் பரிசோதித்த மனிதன், இன்று மனிதனை ஏற்றுக்கொள்வதற்கு நாயின் உதவியை நாடுகிறான். எங்கள் மண்ணிலும் கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பதற்கு நாய்களையே வெடியகற்றும் நிபுணர்கள் பயன்படுத்துவதைக் காணலாம். மேலைநாட்டவர்கள் காவல் கடமைகளுக்கு நாய்களைப் பயன்படுத்துவது சர்வசாதாரணம். எனினும், சைவசமயத்தவர்கள் முழுமுதற்கடவுளாகிய சிவன் காவல்தெய்வமான வைரவர் உருப்பெற்றபோது அவரருகே நாயையும் கொண்டு விளங்குவதாக ஆதிமுதல் வணங்கியதில் எவ்வளவு அர்த்தமுண்டு. சிந்தித்தால் எம் சமய காரண, காரிய உண்மைகள் அர்த்த புஷ்டியுடையவை என்பது தெளிவாகிறது.

மியாமி விமான நிலையத்துக்கு மீண்டும் உங்களை அழைக்கிறேன்.

என்னை வரவேற்பதற்காக அந்நாட்டுக்கு அழைத்த புளோரிடா தமிழ்ச் சங்கப்பிரமுகர்கள் திரு. பாலசுப்பிரமணியம், திரு.தேவராசா ஆகியோர் நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் விமானம் தரையிறங்கியும் நான் இன்னும் வரவில்லையே என்று ஏக்கத்தோடு பயணிகள் வெளியேறும் பகுதியில் ஆவலாக நின்றனர். நான் வெளியே வந்தபோது அளவற்ற ஆனந்தத்தில் என்னை அரவணைத்தனர். விமான நிலையத்துள் நடந்தவற்றைக் கேட்டு கவலையடைந்தபோதும் தம் அழைப்பின் பயனை வெற்றிகரமாக அடைய வாய்ப்பை இறைவன் அளித்ததாகக் கூறி மகிழ்வடைந்தனர். இடது பக்க சாரதிய முறையை உடைய அமெரிக்க நாட்டில் மிகப் பெரிய கார்களை எல்லோரும் பயன்படுத்துவதை வெளியே வந்த யான் கண்டுகொண்டேன். அன்பர் பாலா அவர்கள் தனது வாகனத்தில் என்னை ஏற்றி வேகமாகச் செலுத் திய வண்ணம், 'இன்னும் இருமணி நேரத்தில் உங்களை நாம் அழைத்த விஜயதசமி கலை விழா ஆரம்பமாகவுள்ளது. நாம் விரைவாகச் சென்று உணவருந்தி மாலை ஆறு மணிக்கு புளோரிடா சிவா விஷ்ணு திருக்கோயில் மண்டபத்தை அடையவேண்டும்' எனக் கூறினார். இங்கிலாந்தில் தொடர் உரையாற்றிய களை, காலையில் உட்கார்ந்திருந்து தொடர்ச்சியாக ஏடுதொடக்கிய களை, விமானப் பயணக் களை, விமான நிலைய சோதனைக்களை எல்லாம் என்னை வருத்திய போதும் திரு.பாலா, திரு.தேவராஜா, சங்கப்பிரதிநிதிகளின் உபசரிப்பும் அவர்களின் மகிழ்ச்சி ஆரவாரமும் என்னை உற்சாகப்படுத்தியது. கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொறியியலாளர் தேவராசா 20 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவில் வசித்து வருகிறார். மிகப்பிரமாண்டமான அவரது வீட்டு முகப்பே சைவப் பாரம்பரியத்தோடு அமைந்திருந்தது. அவரது மனைவி ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்று பேராதனை மருத்துவபீடத்தில் கற்கும்போது திரு.தேவராசாவின் கரம்பற்றியதாக தன்னை அறிமுகம் செய்துகொண்டார். அவரின் இரு பிள்ளைகளும் இருகரம் கூப்பி தமிழில் வணக்கம் தெரிவித்தமை உள்ளத்துக்குப் பேருவகையாக இருந்தது. யாழ்ப்பாணத்து நாற்சார் வீட்டு அமைப்பில் நடுவில் முற்றமும் உடைய அவ்வீட்டில் அழகான பட அறை. அந்தப்பூசை அறையில் மிகப்பெரிய செப்பு நடராசர் விக்கிரகம் முதல் பலதெய்வ உருவங்கள் காணப்பட்டன. வீட்டில் விஜயதசமி கால கொலுவும் வைக்கப்பட்டிருந்தது. உண்மையிலே அக்காட்சிகள் யாழ்ப்பாணத்து வீடுகளில் இன்று காணமுடியாத காட்சிகளாக அமைந்துள்ளன. அவர்கள் வீட்டுப் பூந்தோட்டத்தில் நிறையப் பூமரங்கள் பூத்துக் குலுங்கிய வண்ணம் இருப்பதனால் விசேட நாள்களில் தாமும் பிள்ளைகளும் மாலை கட்டிக் கோயிலுக்குக் கொடுப்பதாகக் கூறினர். விரைவாக விழா நடைபெறும் புளோரிடா சிவா விஷ்ணு திருக்கோயிலை நோக்கி அன்பர் பாலா அவர்கள் வாகனத்தைச் செலுத்தத் தொடங்கினார். சில மணி நேரத்தில் ஆலய முன்றிலை அடைந்தோம்.



புளோரிடா இலங்கைத் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்த விழா ஒன்றில்....

சிவா விஷ்ணு திருக்கோயிலின் அழகுத் தோற்றம் என்னைக் கவர்ந்தது. இரண்டு வாயிற் கோபுரங்கள், இரு கருவறையமைப்பில் சிவன் கோயிலையும் விஷ்ணு கோயிலையும் இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் கட்டியெழுப்பிய உன்னதத்தைக் கண்டுமெய் சிலிர்த்தது. இரு வழிப்பாதையை உடைய அழகான புற்றரைகள், செழிப்புமிக்க நந்தவனம் இவற்றுக்கு நடுவே இப்புனிதமான திருக்கோயிலைத் திட்டமிட்ட முறையில் அமைத்துப் பேணி வருகின்றனர். ஆலயத்தின் உட்பிரகாரத்தில் விநாயகர், அம்பாள், மகாலக்ஷ்மி, ஐயப்பன், நவக்கிரகங்கள், சூரியன், வைரவர் எனப் பல பரிவாரக் கோயில்களை அழகாக அமைத்துள்ளனர். இருகோயில் வாசல்களிலும் கொடித்தம்பங்கள் செம்பில் தங்க முலாம் பூசப்பட்ட முறையில் அமைத்துள்ளனர். இந்திய சிவாச்சாரியர்கள் நாமம் தீட்டியவர்களாகவும், சிவசின்னம் அணிந்தவர்களாகவும் என்னை வரவேற்றுக் காளாஞ்சி வழங்கி விழா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். ஐம்பத்தொரு ஈழத்தமிழ்க் குடும்பங்கள் புளோரிடாவில் வாழ்கின்றன. அன்றைய விழாவில் பெரும்பாலான ஈழத்தமிழ்க் குடும்பங்களும் இந்தியத் தமிழ்க் குடும்பங்களும் கலந்துகொண்டு விழா மண்டபத்தை நிரப்பினர்.

'எங்கும் எதிலும் சக்தியடா' என்ற தலைப்பில் எனது ஒரு மணிநேர உரை நடைபெற்றது. மிக ஆர்வமாகக் கேட்ட சபையினர் பெருங் கௌரவங்கள் செய்தனர். புளோரிடா தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் என்னைப் பாராட்டி நன்றி தெரிவித்தார். விழாவில் கலந்துகொண்ட ஈழத்தமிழ்க் குடும்பங்கள் தம்மை அறிமுகம் செய்து ஈழத்தின் இன்றையநிலை பற்றி வினாக்களைத் தொடுத்தனர். பின்னர் எல்லோரும் ஒன்று கூடி விருந்துபசாரம் செய்து வழியனுப்பினர். மறுநாள் புளோரிடா பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் சந்திப்பு ஒன்றை திரு. பாலா அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அவ்வேற்பாட்டில் இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர்கள், இலங்கையைச் சேர்ந்த அறிஞர்கள், சண்டிலிப்பாயைச் சேர்ந்த அறிஞர் வீட்டில் ஒன்று கூடினர். அங்கு சைவ சித்தாந்தம் பற்றியும் ஈழத்தில் காணப்படும் வழிபாட்டு முறைகள் பற்றியும் எனதுரை இடம் பெற்றது. சுற்றியிருந்த அறிஞர்கள் என்னிடம் வினாக்களைத் தொடுத்த வண்ணமிருந்தனர். நள்ளிரவு 12 மணிவரை இந்நிகழ்ச்சி தொடர்ந்த வண்ணமிருந்தது. 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் நூல் எழுதிய பண்டிதர் கந்தையா அவர்களின் மைந்தன் பொறியியலாளர் சிவகுமார் இல்லத்தில் தங்கி, மீண்டும் திரு.பாலா வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

பாலா என செல்லமாக அழைக்கப்படும் திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் வித்துவான் ஆறுமுகம், திரு.வ.பொன்னம்பலம் போன்றோரின் தமிழ்ப் பண்ணையில் வளர்ந்தவர். இயல்பாகவே தமிழ் மீதும் ஈழத்தமிழரின் விடுதலை மீதும் மிகுந்த ஆர்வம் உடையவர். ஈழத்தமிழர் பற்றிய அவரது வீடியோ நாடாக்கள், நூல்கள், புகைப்படங்கள் என்பவற்றை இரு நாள்களாக அனுபவிக்கும் வாய்ப்புக்கிட்டியது. அமெரிக்காவில் வாழும் எனது சமகால யாழ்.இந்துக் கல்லூரி நண்பர்கள் யான் வந்தசேதி அறிந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டவண்ணம் இருந்தனர்; மகிழ்ச்சி ஆரவாரத்தில் புளோரிடாவில் நின்றவேளை ஓர் அதிர்ச்சித் தகவல் என்காதை எட்டியது. இணுவிலைச் சேர்ந்த திரு.கனகநாயகம் எனும் பிரியமுள்ள அன்பர் கனடாவில் உள்ள எனது நண்பர் அருட்சோதி அவர்களுடன் தொடர்புகொண்டு அவருடாக நான் தங்கியிருக்கும் தொலைபேசியில் அதிர்ச்சித் தகவலை அறிவித்தார். யான் என்றும் மதிக்கும் என் பிரியமுள்ள மகாவித்துவான் வீரமணி ஐயர் இறந்த செய்திதான் அந்த அதிர்ச்சித் தகவல். உண்மையிலே யான் திடுக்குற்றேன். நம்பமுடியவில்லை. ஐயா அவர்களுக்கும் எனக்கும் இருந்த தொடர்பு யாழ்.மக்களுக்கு நன்கு தெரியும். யான் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதற்கு முதல்நாள் நல்லை ஆதீனத்தில் எனது தலைமையில் நடந்த அரங்கேற்றத்தில் ஆசியுரை ஆற்றியிருந்தார். மறுநாள் யான் பயணம் புறப்படுவது அறிந்து மேடையிலேயே கட்டியணைத்து முத்தமிட்டு செல்லக்குரலில் 'கண்ணா முருகா கவனமாய் போய்வாடா' என விடைதந்தார். அவர் பற்றிய சேதி கேட்டது முதல் யான மிகவும் குழம்பிப் போய்விட்டேன். அன்பர் பாலா அவர்கள் என்னைத் தேற்றினார். வீரமணி ஐயாவின் பல விழாக்களுக்குத் தலைமை வகித்த யான், அவரின் இறுதிவிழாவுக்கு இல்லாது போனமை என் வாழ்வில் மறக்கமுடியாத துயரைத் தந்தவண்ணமுள்ளது. கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள தமிழ் வானொலிகள், தொலைபேசி ஊடாக எனது இரங்கல் உரைகளை ஒலிபரப்புச் செய்தன. கனடாவில் உள்ள இணுவில் திருவூர் ஒன்றிய மக்கள் இருவாரத்தில் 'வீரமணி ஐயா நினைவஞ்சலிக் கூட்டம்' நடத்த நாள்குறித்து அந்நாளில் நீங்கள் உரையாற்ற வேண்டும் எனத் தொடர்பு கொண்டவண்ணமிருந்தனர்.

(பயணத் தொடர் வளரும்)

# அமெரிக்கத் தீபாவளி...!

# 'ஹாலோவீன்...'

அமெரிக்கர்களின் அன்றாட வாழ்க்கையில் சற்று மாறுதலை ஏற்படுத்தும் வகையில் ஒரு வெளிச்சவிழா! இந்த அமெரிக்கத் தீபாவளி!!! தலைப்பைக் கண்டதும் அட... அமெரிக்காவில்கூடத் தீபாவளியா? என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் சற்று உரக்கவே விழுகிறது. இந்த அமெரிக்கத் தீபாவளிக்குப் பெயர் "ஹாலோவீன்." தீபாவளியைப் போலவே ஹாலோவீனுக்கும் வாழ்த்து அட்டைகளிலிருந்து பூங்கொத்துக்கள், பரிசுக்கூடைகள், ஹாலோவீன் குக்கீஸ், பொய்ஸ், கண்டி எனப்படும் இனிப்புக்கள், ஸ்டிக்கர்கள், பேனா, பென்சில், ஓடியோ வீடியோ, கசெற்றுக்கள், விதவிதமான முகமூடிகள் (மாஸ்க்குகள்) எனக் கடைகளில் ஒக்ரோபர் மாதத் தொடக்கத்திலேயே படுசுறுசுறுப்பாக வியாபாரம் களைகட்டத் தொடங்கிவிடுகிறது. இது தவிர, 24 மணிநேரமும் இயங்கும் உலகளாவிய வரிசைக் கடைகளில் (ஒன் லைன் சொப்பிங்) வியாபாரம் வேறு பிசியாக நடக்கிறது.



இதெல்லாம் சரிதான்... தீபாவளியென்றால் நரகாசுரன் என்னும் அரக்கன் அழிந்த நாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறோம். ஹாலோவீனுக்கு அப்படி ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டுமே? என்பதுதானே உங்கள் கேள்வி?

ஹாலோவீனுக்கு ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. எல்லாவற்றையும் சொல்லவேண்டுமானால் ஒரு நீண்ட தொடராகத்தான் எழுத வேண்டும். இறந்தவர்கள் சொர்க்கத்துக்கும் போகாமல் நரகத்திற்கும் போகாமல் ஆவியாக அலைந்து கொண்டிருப்பவர்களை மகிழ்விக்கும் நன்னாள்தான் "ஹாலோவீன்" நாள் என்பது. இப்படிப்பட்ட கெட்ட ஆவிகளை மகிழ்ச்சியடையச் செய்வதன் மூலம் தங்களுக்கு எந்த விதமான பாதிப்புக்களும் நேராது என அமர்க்களமாக நம்புகிறார்கள் அமெரிக்கர்கள்!?



ஹாலோவீன் பற்றி அறிய இக்கட்டுரையின் கீழ் ஃப்ளாஷ் பேக் போய் அறிந்துகொள்வோமா...!? (அப்பாடா... அறுவைகளிலிருந்து தப்பித்தோம் என்கிறீர்களா?

## வினோத அலங்கரிப்புகள்....

வீட்டுக்குவீடு சோளக்காட்டுப் பொம்மைபோல ஏதாவது ஒரு பொம்மை உருவம் இருக்கும். வீடு தவறாமல் உள்ளங்கையில் வைக்குமளவு சிறிய அளவிலிருந்து ஒரு ஆள் கட்டிப் பிடிக்கும் அளவுக்கு ஏதாவது ஒரு பொம்மை உருவம். ஆள்கட்டிப்பிடிக்க முடியாத அளவு ராட்சத பூசணி என்பன இடம்பெற்றிருக்கும். பூசணியை முகம்போல வெட்டி இரவில் வண்ண விளக்குகள் ஒளிரவைத்திருப்பார்கள். பொங்கலுக்கு வீட்டு நுழைவாயிலில் இருபுறமும் தோகையுடன் கூடிய கரும்பு செழித்தெழுந்து நிற்குமே. அது போலக் காய்ந்த மக்காச் சோளத்தட்டைகளைக் குவியலாய் நிறுத்தி வைத்திருப்பார்கள். நிலைப்படியில் மரிக்கொழுந்து, மாவிலைத் தோரணம் கட்டியிருப்பது போல கலர்கலரான காய்ந்த மக்காச் சோளக்கதிர்கள், காய்ந்த பல்வேறு இலைக்கொத்துக்களைச் செருகிவைத்திருப்பார்கள். வீட்டு முகப்பில் ஒரு எலும்புக் கூடு ஓய்யாரமாக அமர்ந்து கொண்டு புகைபிடித்துக்கொண்டிருக்கும். வீட்டைச் சுற்றியுள்ள மரங்களில் மண்டை ஓடுகள், எலும்புகள் என்று தொங்கிக் கொண்டிருக்கும். இதெல்லாம் எதற்கு? எல்லாம் நம் இனத்தவர்கள் தான் என்று பேய் பிசாசுகள் விசிட் அடிக்கும் போது தெரிந்து கொள்ளத்தான்?! இரவு நேரங்களில் இதை அறியாத, பயந்த சுபாவம் உள்ளவர்கள் போனால் இருதயம் திடீர் பிரேக் போட்டுவிடும். இது போன்று வினோதமான அலங்கரிப்புக்களில் அமெரிக்க இல்லங்கள் காட்சிதரும்.



பூசணிக்காய் பண்ணையில் பூசணி வாங்க மக்கள் கியூவில் நின்ற தொருகாலம்! முகங்களில் கருப்புச் சாயம் கண்களைச் சுற்றி வைத்துக் கொண்டு ஆண்களும் பெண்களும் பேய்களாக, பிசாசுகளாக, ஆவிகளாக, சூனியக்கார - காரிகளாக மந்திரக்கோல் போன்று வைத்துக்கொண்டு போக்குவரத்துமிகுந்த இடங்களில் பெரியபெரிய கடைத் தொகுதிகளில் பொது மைதானங்களில் திடீர் திடீர் என்று தோன்றித் திகில் ஏற்படுத்துவார்கள். இதெல்லாம் ஒரு ஜாலி... ஜாலியான நிகழ்வுகளாகத் தான் ஆங்காங்கே நிகழும். மின்னல் வேகத்தில் வந்து அந்தப்பகுதியில் ஒரு கலகலப்பை ஏற்படுத்திவிட்டு வந்த சுவடு தெரியாமல் போய் விடுவாகள்.

## பேய் மாளிகை

அமெரிக்காவில் "ஹாலோவீன்" அருங்காட்சியகங்கள் அமைந்துள்ளன. இந்த ஹாலோவீன் அருங்காட்சியகங்களின் விஷேசம் என்னவென்றால் பேய் பிசாசுகள், ஆவிகளின் கூட்டுக்குடும்பங்கள் வசிப்பிடமாகத் திகழுகின்றதுதான். காதில் பூச்சுற்றுகிறார் போல் தெரிகிறதா? அமெரிக்காவின் மாநிலம் தவறாமல் ஹாலோவீன் மியூசியங்களை வருடம் முழுக்கப் பார்வையிடலாம்.


## எங்கும் கோலாகலம்....

ஆவிகளுக்குப் பிடித்த இருட்டுப் பொழுதுகளில் அங்கிங்கெனாதபடி எங்கும் ஆனந்தப் பெருவெள்ளத்தில் மக்கள் ஆழந்து போகிறார்கள். வாழ்க்கை வாழ்ந்து போவதற்கே என்கிற சித்தாந்தத்துக்கு உதாரணமானவர்கள் அமெரிக்கர்கள். ஹாலோவீன் தினத்தைப் பிரதிபலிக்கின்ற விதமாக வண்ண உடைகளில் இரவு விடுதிகளை நிறைத்துக்கொண்டு ஆட்டமும் பாட்டமுமாக, கேளிக்கைகளில் தங்களைத் தற்காலிகமாக மறந்து உல்லாசிக்கிறார்கள். ராஜராஜாக்கள், கோமாளிகள் என்ற முகமூடிகளில் அவர்களின் முகவரிகள் மறைந்திருக்கலாம். அகமும், முகமும் ஒருசேரச் சிந்துகின்ற மகிழ்ச்சிப் பூக்களை எல்லோரிடமும் சிதறவிட மறப்பதில்லை. உற்சாக பானம் அருந்திவிட்டு உளறும் நிலைக்கு யாரும் போய்விடுவதில்லை. உற்சாகமாக இருப்பதற்காக மட்டுமே இதை அருந்துகின்றார்கள். நியூமெக்சிக்கோ மற்றும் சில பகுதிகளில் வாழும் அமெரிக்க இந்தியர்கள் (சிவப்பு இந்தியக் காட்டுவாசிகள்) மட்டுமே போதை தலைக்கேற உருள்வது, பிறழ்வது எல்லாம். இந்த நாளில் அநேகர் "டேட்டிங்" வைத்துக்கொண்டு கவலையின்றி ஆவிகளோடு ஆவிகளாக ஐக்கியமாவது உட்படக் கோலாகலமாகக் கழிக்கின்றார்கள்......



நன்றி: பதிவுகள்:

# யாழ். பயணம்



என்றோரின் தீவிர மத ஈடுபாடு காரணமாகவோ என்னவோ, எனது சின்ன வயது முதலே எனக்கும் மத நம்பிக்கை அதிகம்.

இந்துமதக் கோட்பாடுகள், சம்பிரதாயங்கள் அர்த்தம் மிக்கவை என்பதில் எனக்கு அதீத நம்பிக்கை.

இருபது ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்து சென்று மணமுடித்து, மனைவி, குழந்தைகளுடன் வசதியாக வாழ்வதால் மேற்குலகக் கலாசாரத்தில் மூழ்கியிருப்பினும் இந்துமத நம்பிக்கைகளை நான் என்றுமே கைவிட்டதில்லை.

உடன்பிறந்தோர் என்ற வகையில் எனக்கு அக்காள் ஒருத்தி மட்டுமே.

யாழ்ப்பாணத்தில் தன் குடும்பத்தாருடன் வாழ்ந்துவரும் அக்கா என் பெற்றோரைத் தன்னுடனே வைத்துப் பராமரித்தாள். யாழ்ப்பாணக் கலாசாரக் கட்டுக்கோப்பின்படி அதுவே நியாயமும்கூட.

பெரும்பாலும் ஆண்டுக்கொருமுறை குடும்பத்துடன் - சிலசமயம் தனியாகவும் யாழ்ப்பாணம் வந்து பெற்றோருடன் ஒரு சில நாள்கள் தங்கிச் செல்வதை ஆத்ம திருப்தியாகக் கருதி வந்தேன்.

## ஆத்ம திருப்தி

சில ஆண்டுகளுக்கு முன்பு தாயார் நோயுற்று படுக்கையில் இருந்த சமயம் விரைந்து வந்திருந்து பணிவிடை செய்ததையும் என் மடியில் அம்மாவின் உயிர் பிரிந்ததையும் எனது கொடுத்து வைப்பாகக் கருதி ஆத்ம திருப்தி அடைந்ததுண்டு.

பத்து நாள்களுக்கு முன் நடந்த சம்பவம் இது.

யாழப்பாணத்திலிருந்து வந்த தொலைபேசி அழைப்பு தகப்பனார் திடீரெனக் காலமாகிவிட்ட செய்தியைத் தெரிவித்தது.

ஆரோக்கியமாக இருந்த அவர், இப்படித் திடீரென மறைந்துவிட்டதில் மனது கனத்தது.

கடைசிக் காலத்தில் பிள்ளைகளுக்குச் சிரமம் கொடுக்கக் கூடாதென அடிக்கடி கூறியிருந்தார்; அவர் விருப்பம் நிறைவேறிவிட்டது.

புண்ணிய ஆத்மா.

அப்பாவின் அந்திமக் கிரியைகளை நானே செய்ய விரும்பியிருந்தேன். அது எனது கடமையும்கூட. இரண்டாம் நாளே யாழ்ப்பாணம் வந்துவிடமுடிந்தது. விசா, விமானப்பயணம் யாவும் க்டும் சிரமமின்றிக் கைகூடியது எனது அதிர்ஷ்டமே.

எனக்கு உயிரளித்த தெய்வத்தின் - அப்பாவின் உயிரற்ற உடலைக் கண்டபோது மனது வெதும்பியதென்னமோ உண்மைதான்.

நான் அழவில்லை; அழக்கூடாது; எதற்காக அழவேண்டும்?

வாழ்க்கையில் தன் கடமைகளைச் சரிவர நிறைவேற்றிய திருப்தியில் அந்த ஜீவன் அமைதி தேடிக்கொண்டது.

இப்போது என் கடமையை நான் சரிவர நிறைவேற்றி ஆகவேண்டும்.

இதற்காகவே இத்தனை சிரமப்பட்டு இங்கு வந்திருக்கிறேன்.

மறுநாள் ஈமக்கிரியைகளை நடத்தி முடிப்பதென முடிவுசெய்தோம்.

ஈமக்கிரியைகளை நடத்திவைக்க வந்திறங்கிய மனிதரின் நிலை கண்டு மனதுள் ஒரு நெருடல்.

அவர் கடும் மதுபோதையில் காணப்பட்டார்.

உடலம் விட்டு ஆன்மா ஆண்டவன் பாதங்களைச் சென்றடைவதாகக் கொள்வது இந்து மத நம்பிக்கை. உயிர் பிரிந்த உடல் - பூதவுடல் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியதொன்று. அதனாலேதான், அதனைத் தீயில் சங்கமிக்கச் செய்கிறோம்.

பண்பு மறந்த - நடத்தைத் தூய்மையற்ற இந்த நபரைக்கொண்டு புனிதமான சமய அனுஷ்டானங்களைச் செய்ய வைப்பது பாவமல்லவா? ஓடியாடிச் செயற்பட்டு ஒழுங்குகள் செய்துதவிய உறவினர்களை மனம்நோக வைப்பது நியாயமல்ல; அதிருப்தியுடன், ஈமக்கிரியைகளில் கலந்து கொள்கிறேன்.

மதுபோதை நிலையில் புனிதமான - வழமையான கிரியைகளை உரியமுறையில் அவரால் செய்ய முடியவில்லை.

போதாததற்குச் சுண்ணப் பாட்டுப் பாடுபவர் தப்புத் தப்பாய், தட்டுத் தடுமாறிப் பாடிக்கொண்டிருக்கிறார். கூர்ந்து கவனித்ததில் கண்ட உண்மை; அவருக்கும் மதுபோதை.

சின்ன வயதில் அப்பா எனக்குப் பட்டுச் சால்வை கட்டிவிட்டு, என் கையைப் பற்றிக்கொண்டே அம்மன் கோயில் வீதியை வலம் வந்ததும் அத்தனை திருவாசகங்களையும் பக்தி சிரத்தையோடு பாடிப்பணிந்ததும் ஒருகணம் நினைவில் முட்டிமோதின;

நான் பொறுமைசாலி; மிகப்பொறுமைசாலி; ஆனால், கிரியைகளை நடத்தியவரின் அடுத்த தப்புத் தப்பான செயற்பாடுகள் என்னைப் பொறுமை இழக்க வைத்துவிட்டன;

"இதோ பாரும்; எங்களை மட்டும் நீர் அவமதிக்கவில்லை; இந்துமத தத்துவங்களையே ஒட்டுமொத்தமாக அவமதிக்கும் உமக்குத் தோளில் பூநூல் ஒரு கேடா? உங்களைப் போன்றவர்களால் இந்துமதத்துக்கும் இந்த மண்ணுக்கும் இழுக்கு; பாவம் நீரும் சரி, இந்தப் பாட்டுக்காரரும் சரி, கூலிக்கு மாரடிப்பவர்கள் தானே!"

சூழ்நிலையையும் மறந்து இப்படிக் கொட்டித் தீர்த்து விட்டேன்.

மேற்கத்தைய கலாசாரப் பாதிப்பு - மனித நேயத்துக்கான ஏக்கம் - இயந்திர வாழ்க்கை; - இத்தனையிலும் மத்தியில் இங்கிலாந்தில் வாழும் யாழ்ப்பாணத்தாரில் பெரும்பாலானோர் எங்கள் கலாசாரத்தையும் மத நம்பிக்கைகளையும் கட்டிக்காத்துப் பேணி வருவதைக் கண்டிருக்கிறேன்;

இது எப்படி முடிகிறது?

அது இந்த மண்ணின் - பிறந்த மண்ணின் வாசனை; மகிமை; நாம் பேசும் நாவலர் கலாசாரம் பேச்சிலும் எழுத்திலும் மட்டும்தானா?

உயிர் பிரிந்த உடலுக்கு - பூதவுடலுக்கு மரியாதை செய்வது தமிழ் மரபு; இந்தப் பண்பு அற்றுப் போகின்றதா? இல்லையே!

சமர்க்களத்தில் தன்னுடன் போரிட்டு உயிரிழந்த எதிரியின் பூதவுடலுக்கு உரிய மரியாதையும் கௌரவமும் அளிக்கும் வீரமறவர் வாழும் பூமி இது என்று பெருமைப்பட்டுக் கொண்டேனே!

இன்று யாழ்ப்பாணத்துச் சமூக நடைமுறைகள் ஏன் இப்படிக் கோணல் மாணலாகின்றன?

இதை நேர் சீர்செய்ய நாம் என்ன செய்யப்போகிறோம்?

நாங்கள் மாறாமல் இருப்பதற்கும் நீங்கள் மாறி வருவதற்கும் காரணம் ஒன்றே ஒன்றுதான்; வெய்யிலில் செல்லும்வேளையே நிழலின் அருமை புரியும்.

அண்டாண்டு காலமாய் பக்தி சிரத்தையுடனும் புனிதமாகவும் கட்டிக் காத்துவந்த நம் பழக்க வழக்கங்களை - நடைமுறைகளை - பண்பாட்டை இத்தகைய கூலிக்கு மாரடிக்கும் கும்பல் களங்கப்படுத்தவிட்டு நாம் எமது ஆத்ம திருப்தியை இழந்து விடக்கூடாது; இழந்து விடமுடியாது.

**பொன்வேலன்**

## பதுங்கியிருக்கும் மரணம்

நடந்து செல்லும் வயல் வரம்புகளில்
படுத்திருக்கும் பாம்புகள் போல்,
வீதிகளின் வெளியெங்கும்
பதுங்கியிருக்கிறது மரணம்.

கலகலப்பான மழலைக் குரல்களையும்,
தம் நீண்ட பிரிவின் பின்னான
உறவுகளையும்,
தம் கடமை முடிக்க விரையும்
எல்லோரையும் தோற்கடித்து;
வெடித்துச் சிதறடிக்கும்
ஒரு வெடிகுண்டைப் போல்,
காத்திருக்கிறது மரணம்.

பெருவீதிகளிலும், சந்திகளிலும்,
ஒழுங்கைகளிலும்,
பாலங்களுக்கு அடியிலும்,
பதுங்கியிருந்து...
தன் இரத்தம் குடிக்கும் கோரப்பற்களுடன்
பிணம் தின்னும் கழுகுபோல்
எங்கும் காத்திருக்கிறது.

தம் கண்களையும் காதுகளையும்
சிந்தனைகளையும் தொலைத்தவர்களே,
உயிர்களின் மகத்துவம் அறியாமல்
வீதிகளில்...
மரணத்துடன் ஸ்கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.

- துவாரகன்

## நீயேதான்...!

பக்கத்து வீடென்பதால்
உன்னை நான்
ஒதுக்கிவிடவில்லை.
உனது அசைவுகளை
எந்நேரமும்
அவதானித்துக் கொண்டேயிருக்கின்றேன்.
அடிக்கடி
உனது வருகையும் போகையும்
நான் நன்கு
புரிந்து கொண்டுள்ளேன்.
நீயும் அவதானித்துக்கொள்

தேவையான நேரத்தில்
அமைதி காத்தல்
எனது வழக்கம்
எது
எந்த நேரத்தில் தேவைப்படுகிறதோ
அதுவாகி
என்னால் மாறமுடியும்.

நான் மௌனமாய் இருப்பதால்
இயலாமை என்று
தப்புக்கணக்குப் போடாதே
நான்கு திசையையும்
ஒரே நேரத்தில் பார்க்கும் வல்லமை
எனக்கு உண்டு.

நான் பயிற்சி பெற்றவன்
நிரூபித்தும் காட்டியவன்.
அவதானித்துக்கொள்
உனது கணிப்பு
தவறாயிருந்தால்
துக்கப்படுவது நானல்ல
நீயேதான்.

அ.சூரியன்
ஊறணி.

## காயங்கள்...

வெற்றுக்கண்களிற்குச்
சிக்கி விடாமல்
காயங்கள் ~ நிறைகின்றன
மேனியெங்கும்....
உணர முடிகிறது
என்னால்...
ஒரு புன்னகை
ஒரு முத்தம்
ஒரு ஸ்பரிசம் ~ அல்லது
ஒரேயொரு பார்வையின்
பகிர்தல் கூடப்
போதுமானதாயிருக்கும்
அவற்றை ஆற்றிவிட ~
ஆனால்
நண்பர்களே!
நிச்சயமாய்.....,
பலிகள் தேவையில்லை
பூக்களின்.........
செண்டுகளில் இருந்து
கத்திகளை எடுங்கள்
காயங்கள்......
இனியும் வேண்டாம்.........
- த.அகிலன்.

# ஈராக் போரின் இன்னொரு முகம்

உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் கணந்தோறும் ஒரு வன்முறை விஸ்வரூபமெடுத்துக் கொண்டே இருக்கின்றது. அந்த வன்முறையின் கோரப்பிடியில் சிக்கி நாளாந்தம் செத்துமடிவோரும், பீதியில் உறைவோரும் ஏராளம் பேர்.

இந்த வன்முறையின் ஒரு கோர வடிவமே ஆள்கடத்தல். யாரோ, யாருக்காகவோ நடத்துகின்ற யுத்தத்தில் ஒரு துளியேனும் சம்பந்தப்படாத அப்பாவி மக்கள் பலியாவது இன்றைய வன்முறையின் புதியதொரு வடிவம்.

இந்த ஆள்கடத்தல் வன்முறையில் கடைசியாகச் சிக்கியுள்ளவர் இலங்கையரான தினேஷ் தர்மேந்திரா ராஜரத்தினம்.



கடந்த மாதம் 28ஆம் திகதி ஈராக்கில் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இவர், இலங்கையின் எலபொடவத்த, ஹெந்தளையில் வசித்து வந்தவர்.

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயதேயான தினேஸ் ஆரம்பத்தில் இலங்கையிலேயே சாரதியாக வேலை செய்தார். தனது 3 பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் தமது குடும்பத்தின் வளமான வாழ்விற்குமாக வசதி தேடியே குவைத் நாட்டிற்குச் சென்றார்.

தனது குடும்பத்தின் பொருளாதார வசதிக்கு மீறிய பணத்தைக் கடனாகத் திரட்டி 2003ஆம் ஆண்டு குவைத் நாட்டின் அல்~ஜெஸீமா என்னும் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சாரதியாகச் சென்றார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றின் மூலமே வேலைக்குச் சென்ற இவருக்கு இலங்கை நாணயப்படி 20 ஆயிரம் ரூபா சம்பளம் என்றும் ~ விமானப் பயணச் சீட்டு இலவசம் என்றும் ~ சொல்லி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், வேலைக்குச் சேர்ந்த ஆரம்பத்தில் இரண்டு மாதங்களுக்குச் சம்பளமே கொடுக்கப்படவில்லை. அதன் பிறகும் 15 ஆயிரம் ரூபாவே வழங்கப்பட்டுவந்தது. இதுதொடர்பாகத் தினேஷ் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டபோது பயணச் சீட்டுக்கான செலவீனத்துக்குக் கழிக்கப்படுவதாகக் கூறிவிட்டனர்.

அவரது வருமானம் குடும்பத்தின் செலவீனங்களுக்குப் போதவில்லை. அவர் வெளிநாடு செல்வதற்காக வாங்கிய பணத்திற்கு வட்டி கட்டுவதற்கு அது பயன்பட்டது. இதனால், அவர் அங்கிருந்து வேறு நாட்டிற்குச் செல்வதற்கு முடிவெடுத்தார். குவைத்துக்குச் சென்று இரண்டு வருடங்கள் முடியாததால் தாய் நாடு திரும்புவதற்கு விமானப் பயணச் சீட்டினை வழங்கமுடியாது என நிறுவனம் தெரிவித்துவிட்டது.

ஆனால், சொந்த நாட்டிற்குத் திரும்பிவந்து விட்டே வேறு நாட்டிற்குச் செல்லவேண்டும். அதற்குப் பயணச் சீட்டிற்கான பணம் இல்லாததால் தனது பயணத்தைத் தாமதப்படுத்தவேண்டிய நிலை. இந்தத் தாமதமே அவருக்கு ஆபத்தாக மாறுமென்று அவர் சிறிதேனும் சிந்திக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையிலேயே அவர் நிறுவனத்தின் உரிமையாளரது கட்டளைக்குப் பணிந்து ஈராக்கிலுள்ள அமெரிக்க முகாம்களுக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. எனவே, அவரும் பங்களாதேஷைச் சேர்ந்த இன்னுமொரு சாரதியுமாக 'ட்ரக்'குகளில் ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தளம் நோக்கிப் போகும்போது தீவிரவாதிகளிடம் பிடிபட்டனர்.

கடத்தல் செய்தியை அறிந்த இவரின் மனைவி டொரின் ரீட்டா புல்ஜென்சும் 3 மகன்களும் அதிர்ந்துபோய் நிற்கின்றார்கள்.

"எனது கணவர் வெளிநாட்டில் சுகமாக வாழ்கின்றார். அவரின் சம்பாத்தியம் எமது குடும்பத்தின் வறுமையைப் போக்கும் என்று சந்தோசப்பட்ட டொரினுக்கும்", "அப்பா எங்களை விரைவில் வந்து பார்ப்பார் என்ற குதூகலத்துடன் எதிர்பார்த்திருந்த பிஞ்சுகளுக்கும்" இவரின் கடத்தல் பேரிடியாகவே உள்ளது.

தங்களுடைய வாழ்வின் வசந்தங்களை மீட்டுத் தரும்படி இறைவனிடம் வேண்டுவதோடு மீட்டுத் தர முயற்சி எடுக்குமாறு உயரதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனது கணவரின் கடத்தல் தொடர்பாகக் கண்ணீருடன் டொறின் கூறியது:~

"அவர் கடத்தப்படுவதற்கு முன் என்னிடம் போனில் கதைத்தார். அப்பொழுது அவர் தனது முதலாளி ஈராக்கிற்குப் போகுமாறு கட்டாயப்படுத்துவதுடன், போகாவிட்டால் உடனடியாக வேலையை விட்டு நீக்கப்போவதாக மிரட்டுகின்றார். வேலையை விட்டு நீக்கினால் தனது செலவிலேயே நாடு திரும்பவேண்டி ஏற்படும் என்றும் என்னிடம் தெரிவித்தார்.

"இந்த அச்சுறுத்தலுக்கு அடிபணிந்தே அவர் ஈராக்கிற்குச் சென்றிருக்கின்றார். இதனாலேயே அவர் தீவிரவாதிகளிடம் பிடிபட்டுள்ளார்.

"இவ்வாறு தனது மனத்துயரத்தைக் கண்ணீருடன் கலந்து தெரிவித்தார்".

"எமக்கு எந்தவித வசதிகளும் வேண்டாம். வெளிநாட்டுப் பணமும் வேண்டாம், எங்களுடைய அப்பா வந்தால் போதும் என்று ஏக்கத்துடன் அழும் பிள்ளைகள்....."

இந்தக் கடத்தல் வன்முறை, ஈராக்கில் கொடிகட்டிப் பறக்கின்றது. ஈராக்கிலுள்ள வெளிநாட்டவர்களை நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென எச்சரித்துப் பல கொலைகள் நடைபெற்றுவருகின்றன.

அமெரிக்கா, துருக்கி, லண்டன், கொரியா போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தும், கொலைசெய்தும் தமது எச்சரிக்கையைத் தீவிரவாதிகள் வெளிப்படுத்துகின்றனர்.

நாளுக்குநாள் பிற நாட்டவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடிப்பதும் தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிட்டால் அவர்களின் தலைகளைத் துண்டிப்பதும், கொலைசெய்வதும், வீதியோரங்களில் வீசுவதும் ஈராக்கின் தீவிரவாதிகளுக்குப் பொழுதுபோக்கான விடயமாகவே மாறிவிட்டது.

ஆனால், தாம் தொழிலுக்கமர்த்திய பிறநாட்டு ஊழியர் விடயத்தில் அந்நாட்டு தொழில் நிறுவனங்கள் அக்கறை எடுப்பதாக இல்லை.

இவற்றிலிருந்து சற்று மாறுபட்டு அண்மையில் இந்தியாவைச் சேர்ந்த சிலர் பணயக் கைதிகளாகப் பிடிபட்டிருந்தபோது இந்தியாவும், அவர்களைத் தொழிலுக்கமர்த்திய நிறுவனமும் அவர்கள் மட்டில் கூடிய கவனம் எடுத்துப் பேச்சுக்களை நடத்தியதோடு, பெருந்தொகைப் பணத்தையும் கொடுக்க முன்வந்ததால் இந்தியப் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

அன்று இந்தியா கொண்ட அக்கறை இன்று இலங்கைக்கு உள்ளதா எனக் சோதிப்பது போலவே இப்பொழுது தினேஷ் கடத்தப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக, இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விஷ்வ வர்ணபால கருத்துத் தெரிவிக்கையில்:~

ராஜதந்திர வட்டாரங்கள் மூலமாக அவரை விடுவிப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

தீவிரவாத அமைப்புகள் ஒருவரைக் கடத்தியதும், அந்நாட்டு அரசுடன் பேரம்பேசுவதும், கோரிக்கைகளை முன்வைப்பதுமே வழமையான செயல்.

ஆனால், நம் நாட்டவர் கடத்தப்பட்டுப் பல நாள்கள் சென்றுவிட்டபோதும் அவரைக் கடத்திய தீவிரவாதிகள் யாரென்று தெரியாததோடு அவர்களிடமிருந்து எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், இலங்கை அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாதநிலையில் தடுமாறுகின்றது. தினேஷைக் கடத்திய தீவிரவாத அமைப்பு 'இஸ்லாமிய இராணுவமா' அல்லது 'அன்சருள் சுன்னா'வா என்பதுகூட இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, ஈராக் அரசுக்கும் உறுதிசெய்ய முடியாதநிலை.

ஈராக் நாட்டில் இலங்கைக்கான தூதரகம் இதுவரை அமைக்கப்படவில்லை. அத்துடன், தினேஷ் எதற்காகக் கடத்தப்பட்டார்? கடத்தியவர்களின் கோரிக்கைகள் என்ன? என்பவை பற்றி எந்தவிதத் தெளிவும் இல்லாது இலங்கை அரசால் தினேஷ் விடயத்தில் விடுதலை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

ஆயினும், இலங்கை அரசு குவைத்திலுள்ள இலங்கைத் தூதர் மூலமாகவும், இந்தியப் பணயக் கைதிகளை மீட்பதற்குச் சிறப்பான இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்ட இந்தியத் தூதுவருடனும் கலந்துகொண்டு தினேஷின் விடுதலை பற்றி ஆராய்ந்து வருகின்றன.

அத்துடன், பல்வேறு பொது அமைப்புகளும் தினேஷை விடுதலை செய்யுமாறு அவரைக் கடத்திய தீவிரவாத அமைப்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

அண்மையில் சவூதி அரேபியாவில் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இலங்கையர்களின் கொலை தொடர்பாக இலங்கை அரசு எந்த நீடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே, தினேஷ் விடயத்திலும் இந்த மெத்தனப்போக்கை இலங்கை அரசு கொண்டிருக்குமோ என அஞ்சவேண்டியுள்ளது.

ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் எனது கணவரை நான் மீண்டும் பார்ப்பேன், அப்பா வந்து எங்களுடன் பேசுவார் என்று தம் வீட்டு வாசலில் கண்ணீரும் கம்பலையுமாகக் காத்திருக்கும் தினேஷின் மனைவி டொரீனுக்கும், பிள்ளைகளுக்கும் இலங்கை அரசின் பதில் என்ன?

சதாம் ஹூசேய்னின் பிடியிலிருந்து ஈராக் மக்களை மீட்பதாகக் கூறி அமெரிக்க நிர்வாகம் தொடுத்த போர் இன்று ஈராக் பிராந்தியத்தைப் பெரும் இரத்தக்களரியாக்கியிருக்கின்றது.

போரில் சம்பந்தப்பட்ட குழுக்களைச் சேர்ந்தோர் மட்டுமன்றி, அப்பாவி ஈராக்கிய மக்களும் தொழில் நிமித்தமும் சேவை புரியவும் அங்கு சென்றிருக்கின்ற வெளிநாட்டுப் பிரஜைகளும்கூட நாளாந்தம் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

வெளிநாட்டுப் பிரஜைகளுக்குத் துளியும் பாதுகாப்பற்ற பிராந்தியமாக ஈராக் மாறிவிட்டது என்பதே யதார்த்தம்.

தீபா.



# யாரோடு நோவோம்...?

சூழல் மாசடைதல் பற்றிச் சம்பாஷிக்கும் பலரும் ஒலியும் சூழலை மாசுறுத்தும் என்பதை உணர்வதில்லை. அண்மைக் காலத்தில் நமது சூழலில் ஒலியால் 'சூழல் மாசுறும்' சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. இது பற்றிப் பலரும் தமது ஆதங்கங்களைப் பத்திரிகைகளில் எழுதியாகி விட்டது. யாரும் உசும்புவதாக இல்லை. சார்பளவில் ஒலிப்பாவனை அதிகரிக்கிறதேயன்றிக் குறைவதாக இல்லை.

வெளிநாடுகள் போல இங்கு ஒலியால் மாசடைதலுக்காக நீதிமன்றம் செல்ல யாரும் விரும்புவதில்லை. கணவனின் குறட்டையொலி தனது நித்திரையைக் குழப்புவதாகக் கூறி ஒரு திருவாட்டி விவாகரத்துப் பெற்றாள். பக்கத்து வீட்டுச் சேவலின் கூவலும், நாயின் குரைப்பும் தமது நிம்மதியைக் கெடுப்பதாகக் கூறி வழக்குத் தாக்கல் செய்து வென்ற சம்பவங்களும் மேலை நாடுகளில் உண்டு. வெளிநாடுகளிலுள்ள நம்மவர்கள் பலருக்குப் படிகளில் சத்தமிட நடந்தும், அதிகம் சிரித்துப் பேசியும், சற்று உரத்த தொனியில் பாடல்களைக் கேட்டும் பிரச்சினைகளில் மாட்டிக்கொண்ட சம்பவங்கள் உண்டு.

ஒலி என்பது குறித்த அளவில் அதிர்வெண்ணில் அமையும்போதுதான் அது ரசிக்கத்தக்கதாக - நன்மை பயப்பதாக - அமையும். ஒலி மிதமிஞ்சிப் போகும் போது, அது சினத்தையும் அருவருப்பையுமே ஏற்படுத்தும். மிகவும் ரசிக்கத்தக்க ஓர் இசையோ, பாடலோ கூட மிதமிஞ்சிய ஒலியால் வெறுப்புக்குரியதாகிவிடும். முன்னைய நாள்களில் ஐதான குடிசனத் திரளில் எங்காவது ஒரு வீட்டில் நடைபெறும் நற்காரியங்களில் நான்கைந்து தினங்கள் வரை ஒலி பெருக்கியில் பாடல்கள் போடுவார்கள். பெரிய 'றெக்கோர்ட்'களைச் சுழல விட்டு, பனை மரங்களில் தொங்கும் ஒலி பெருக்கிகளில் பாடல்களைப் போடும்போது, ஊரே புதினமாகப் பார்க்கும். அப்போது கூட முதியவர்கள் அதை எரிச்சலுடனேயே பார்ப்பார்கள்.

இப்போது திருமண வீடுகள், சுபகாரியங்கள் நடைபெறும் இடங்களிலெல்லாம் ஒலிபெருக்கிப் பாவனை குறைந்துவிட்டது. அங்கெல்லாம் சிறிய சிறிய பல ஒலி பெருக்கிப் பெட்டிகளை வைத்துக் குறைந்த ஒலியில் பாடும் நிலைமை உருவாகி விட்டது.

ஆனால், ஆலயங்கள் ஒலிபெருக்கிப் பாவனையை அதிகரித்துவிட்டன. நெஞ்சுக்குள் நிம்மதி தரும் ஆண்டவன் சந்நிதிகளே நிம்மதியைக் கெடுக்கும் நிலையைப் பலரும் பரிதாபத்தோடு கூறுகின்றார்கள். கோயில்களில் மங்கல இசை வழங்க ஆள்கள் போதாமை, அவர்களுக்குப் பணம் வழங்க [illegible]காரரால் இயலாமை போன்ற காரணங்கள் ஒருபுறம்.

கோயிலில் கண்டாமணியையோ, சேமக் கலத்தையோ ஏனைய மணிகளையோ அடிக்கக் கூடிய தொண்டர்கள் போதாமை மறுபுறம் -

ஊரிலுள்ள பக்த கோடிகளை 'பூஜை ஆரம்பமாகவுள்ளது' என்பதை வெளிப்படுத்த அழைப்பு மணி மட்டும் போதாது என்ற எண்ணம் இன்னொரு புறம் -

'கோயிலின் வளர்ச்சி'யை அளவிடும் கருவியாக இருப்பது வேறொரு புறம்.

இவையெல்லாம் மின்சார மங்கல வாத்தியக் கருவியையும் ஒலிபெருக்கியையும் ஆலயங்களுக்கு முதன்மைப்படுத்தின.

ரேப்றெக்கோடர் அல்லது சீடி பிளேயர், அம்பிளிபயர், இரண்டு ஸ்பீக்கர், ஒரு மைக் கொண்ட தொகுதியினை அநேகமான ஆலயங்களில் வாங்கி வைத்துள்ளனர். குருக்களே தொழில்நுட்பவியலாளராக மாறி, ஒலி பரப்புக் கருவிகளைத் தகுந்தவாறு இயக்குவார். முதலில் பக்திப் பாடல்களால் பக்தர்கள் அழைக்கப்படுவார்கள். பூசை ஆரம்பமாகியதும் நாதஸ்வர இசை பாடும். இடையில் மைக்கை எடுத்து வந்து மந்திர உச்சாடனம் செய்யப்படும். பின்னர் மங்கல இசை, முடிவில் பக்திப் பாடல். காலத்திற்கேற்ற கோலந்தான் இது. ஆனால், முதிய - நோயுற்ற - வயோதிபர்கள், படிக்கும் பிள்ளைகள் இவற்றால் அடையும் துன்பம் சொல்லுந்தரமன்று. அருகருகே உள்ள ஆலயங்களின் ஒலி பெருக்கிகளின் சத்தம் ஒன்றையொன்று இடையூறு செய்து கர்ண கடூரமாய் ஒலிக்கும் சந்தர்ப்பங்களும் நடந்தேயுள்ளன. கிறிஸ்தவ தேவாலயத் திருவிழாக்களின் போதும் இத்தகைய பிரச்சினைகள் நிகழ்ந்துள்ளனதான். புதிதாகக் கடை விரித்துள்ள புதிய கிறிஸ்தவப் பிரிவுகள் சிலவற்றின் நிகழ்ச்சிகள் கூட வேறு மதத்தவர்களால் சகிக்க முடியாத அவல ஒலியில் அமைந்து, எரிச்சலூட்டுவனவாய் அமைந்து விடுகின்றன.

ஒருவனுக்குப் பிடித்தமான இவை, சமய சம்பந்தமான ஒலிகள் வேறொருவனுக்கோ பலருக்கோ உவப்பற்றதாக அமையலாம். ஒரு குழுமத்தின் விருப்பங்கள் எதற்காக அதை எல்லோர் மீதும் திணிக்க முயல்வது அபத்தமானது. இன்றைய ஒலிபெருக்கிப் பாவனையும் அவற்றானதுதான். மனிதர்கள் பலரை எரிச்சலுக்குள்ளாக்கும் ஒலியும் சமூகச் சூழலை - மாசுறுத்துகின்றது என்பதை உணரும் நாள் எந்நாளோ?

**- ஏகலைவன்.**

## உன் தவறும் என் சக்தியும்!

*விரிந்து வியாபகம்*
*கொண்டிருக்கும்*
*இந்த விருட்சத்தின் கிளைகளை*
*ஒவ்வொன்றாயோ... ஒட்டு மொத்தமாயோ -*
*கத்திரிப்பதிலேயே நீ கூர்மையாகியுள்ளாய்*
*உன்னுள் வளரும் வன்மத்தை*
*ஒரு கட்டுக்குள் கொண்டுவர*
*என்னால் முடியாதென்று மட்டும்*
*நீ நினைத்து விடாதே!*
*உனதெண்ணம் தவறென்று*
*நீயுணரும் பொழுதொன்றை*
*உன்னுள் போர்த்தும் வரை...*
*நான் சலியாது சக்தி கொள்வேன்*
*கடக்கும் கணங்களுள்*
*தடக்கும் ரணங்களின் வலியினூடே...*
*நான் பயணித்து வரினும்....*
*என் வலியின் வளத்தால்*
*நிமிரும் கணமொன்றின் கூர்மையை...*
*என்னுள் நீ கவனிக்கத் தவறுகிறாய்*
*இப்போது கூட நீ யொரு கிளையினை*
*வெட்டுவதை நானுணர்வேன்*
*மறுபக்கமாய் இந்த விருட்சத்தில்*
*ஒரு துளிர்ப்பின் நிகழ்தலொன்றை*
*நீ கவனிக்கத் தவறுகிறாய்*
*இப்போது அடுத்தகட்டமாய்*
*இன்னோர் கிளையொன்றை...*
*ஏன்... முடிந்தால் வேரோடே சாய்க்க....*
*முயல்வது தெரிகிறது*
*இப்போது நான் யாவும் உணர்ந்துகொண்டேன்*
*எதிர்க்கும் சக்தியும் முழுதாய்ப் பெற்றுக்கொண்டேன்*
*இனி... நீ என்ன செய்யப்போகிறாய்?*
*இனி... நான் எதற்கும் தயார்!*
*எங்கே.... உன் ஆயுதத்தோடு வா... பார்க்கலாம்.*

**- த.அஜந்தகுமார்.**

## புலம்பல்

ஏற்றத்தாழ்வுகள்
எங்களுக்கு மட்டுமல்ல...
ஏணிப்படிகளாய்
ஏறி இறங்கும்
எல்லோர் வாழ்விலும்
படிக்கற்களாய்
பழக்கப்பட்டதொன்று...

இலையுதிர்காலம்
உண்டென்றால்
இளவேனிலும்
ஒருநாள் திரும்பும்
இது!

எங்களின் அபிலாசைகட்கு
நாங்களே அத்திவாரமிட்ட
நம்பிக்கையின்
அடித்தளங்கள்...
பட்டைகள் குற்றப்பட்ட
ஏழைகள் பட்டியலில்
எங்கள் வாழ்வு மட்டும்
ஏனோ வடிவாக
வடிவமைக்கப்படுகிறது
ஒரு... வட்டத்திற்குள்....
நாங்கள் புலம்பும்
ஒவ்வொரு புலம்பலின்
அதிர்வுகளினால் றான்...
நாளைய.. வசந்தங்கள்
பிரசவிக்கப்படுகின்றன...
நாங்கள்மட்டும்...?
எதிர்காலங்களின்
எதிர்வுகளை
சுமந்தபடி... எந்நாளும்...

**- க.நாகேஸ்வரா.**

## முடியவில்லை என்னால்...

பள்ளிக்கு வெறுங்காலோடு வந்த
பையனை "தம்பி கக்கூசிற்கு
போகேக்கை செருப்போடு போ" என
சொல்லமுடியவில்லை என்னால்.
'அண்ணா போராளி' என நெஞ்சு
நிமிர; சொன்ன சிறுமி
"அப்பாவிற்குக் கண்ணிவெடியால்
காலில்லை
'காலொன்று பூட்டமுடியுமா' என
கதறியதை மறக்கமுடியவில்லை
கொட்டும் மழையில்....
கூரைக் கொட்டிலுக்குள் கூட
குடை தேவைப்பட்டதையும்
மர நிழலில் கற்ற மாணாக்கர் நிலையும்
மனதில் வந்து போவதை
தடுக்க முடியவில்லை
ஈன்ற தாய் கூட மறந்திருப்பாள்
ஐம்பது பிள்ளையில் ஒரு பிள்ளை - முன்பு
ஐந்து நாளாய் காய்ச்சலில்
அவதியுற்றதை தன்மகவிற்குற்றது போல்
தவிப்புடன் கூறிய ஆசிரியை
அத்தகைய் அன்பை அவனியில்
எங்கும் காணவில்லை
இங்கு -
'டொக்டராய் வரவேணுமடா' என
அம்மா ரியூசனிற்கு அனுப்ப,
ராஜாவில் வசூல்ராஜா பார்த்து
'சிறுக்கி சிரிச்சு வந்தா...' என
சீழ்க்கை அடித்து வரும் மாணவனையும்
அங்கு......
ஊக்குவிக்க யாருமில்லாமல்
ஊர்ச் சிறுவர் இல்லத்தில் இருந்த பையன்
'அக்கா நான் டொக்டராய் வந்து
இங்கை எல்லோருக்கும் சேவை செய்வேன்'
என
உயிர்ச்சத்து 'ஏ' குறைபாடு
உள்ள கண்கள் பளீரென மின்ன
உறுதி கூறியதையும்
ஒப்பிடமுடியவில்லை என்னால்....

**- பிருந்திகா.வை**

## இந்தியத் தலையீடு....

அரசியல்துறையினருடன் பேசிய பின்பு கொழும்பு திரும்பியதும் செய்தியாளர்களைச் சந்தித்தார். அங்கு அவரிடம் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது எவ்வித உள்ளூர் மட்டத் தாக்கங்களும் இந்த ஒப்பந்தத்தால் ஏற்படப்போவதில்லை என்று சமாளித்துள்ளார். அவர் இந்தியா சென்றுள்ளார். இலங்கை விவகாரம் குறித்து அங்கு அவர் பேசவுள்ளார்.

இந்தியாவுக்கான ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எங்கள் ஜனாதிபதி சென்றுள்ளார். அவர் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகிறார் என்று இந்திய இராணுவத் தளபதி கொழும்பில் உறுதிப்படுத்தியிருந்தார். பிரதமர் மன்மோகன்சிங், எதிர்க்கட்சித் தலைவர்களான வாஜ்பாய், அத்வானி, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், வெளியுறவுத்துறை அதிகாரிகள் எனப் பலரைச் சந்திரிகா சந்திக்கிறார். பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் உட்பட இனப் பிரச்சினை விவகாரத்தின் எதிர்பார்க்கப்படும் பல திருப்பு முனைகள் பற்றி இந்தியாவின் கவனத்தை ஈர்ப்பார் என்று கொழும்பில் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்தியப் பாதுகாப்புத்துறையின் முக்கிய பிரமுகர்கள் கொழும்புக்கும் இலங்கையின் இராணுவக் கேந்திர நகரங்களுக்கும் விஜயங்களை மேற்கொண்ட இந்தத் தறுவாயில், இலங்கை ஜனாதிபதி புதுடில்லிக்குக் காலடி வைப்பதும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதும் அனைவராலும் கூர்மையாகப் பார்க்கப்படும் விடயமாகும்.

அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல் சக்திகளாக - சில வேளைகளில் அரசியல் இராணுவச் சக்திகளாக - உள்ள கூறுகளை ஓர் அணியாக்கிப் பலப்படுத்தி அரங்கேற்றுவதில் இந்தியா மறைகரமாகத் தொழிற்படுகிறது என்று இலங்கைத் தமிழ் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுவருகின்றன. கருணா அணி, ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.டி.பி., ஆனந்த சங்கரியாரின் அணி முதலியன விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல் நிலைப்பாடுள்ளவர்கள் என்று தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் இனங்காணும் சக்திகளை ஒன்று திரட்டிப் பலப்படுத்தும் கைங்கரியம் நடைபெறுவதாகவும் அது இந்திய ஆசீர்வாதத்துடன் நடைபெறுவதாகவும் கூட அந்த ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்விடயங்களையிட்டும் விடுதலைப் புலிகள் மிகமிக அசௌகரியப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்கள் சார்பு ஊடகங்கள் மூலம் அறியமுடிகிறது.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் இந்தியாவின் பலபல வண்ணக்கரங்கள் இலங்கை இனப்பிரச்சினையைத் தீவிரமாக மீண்டும் பிசையத் தொடங்கிவிட்டன. இப்பிசைவுகளும் இராணுவச் சமவலு நிலை குறைவதாக விடுதலைப் புலிகள் கவலைப்படுவதும் வடக்கு - கிழக்கின் சிவில் சமூகத்தை மீண்டும் இலவுகாத்த கிளிகள் ஆக்கப்போகிறதா? அன்றேல் வன்முறைப் போரைத் தவிர வேறு வழியின்றி சிவில் சமூகம் அதை ஏற்கும் இராணுவவியல் துர்ப்பாக்கியம் நிகழுமா? போர்ப்பேயின் சன்னதங்களை யாருமே விரும்பவில்லை.








# பாடம் சொல்லிக் கொடுக்கும் ரோபோ

ஜெனீவாவில் சர்வதேச ரோபோக்களின் கண்காட்சி நடைபெற்று வருகிறது. பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறு விதமான ரோபோக்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றன. வீட்டு வேலைகளைச் செய்யும் ரோபோ, குழந்தைகளைத் தாலாட்டும் ரோபோ, அபாயகரமானவேலைகளை எளிதாகச் செய்து முடிக்கும் ரோபோ என்று பல்வேறு வேலைகளுக்கும் இப்போது ரோபோக்கள் வந்துவிட்டன.

தென்கொரியாவின் 'ஜரோபி' என்ற புதிய வகை ரோபோ, வீட்டு வேலைகளைச் செய்வதுடன் குழந்தைகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கிறது அந்த ரோபோ.

சிறுவன் ஒருவனுக்கு விளையாட்டுடன் ரோபோ பாடம் சொல்லிக் கொடுக்கும் காட்சி இது.

அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும்
செல்வங்களுக்கு வழங்குகிறது.


உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம், 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு – ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

## அமெரிக்காவில் பூசணிக்காய் விழா



அமெரிக்காவில் இது பூசணிக்காய் வாரம். கலி போர்னியாவில் உள்ள ஹீஃப் முன்பேயில் ஒக்டோபர் 16 – 17 திகதிகளில்விழாநடந்தது. காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை நடக்கும் விழாவில் விற்கப்பட்ட பதார்த்தங்கள் எல்லாம் பூசணிக்காயில் செய்யப்பட்ட தாகத் தான் இருந்தன. பூசணி ரோல், பூசணி ஐஸ்கிறீம், பூசணி சாசேஜ், வெள்ளை சாக்லேட், பூசணி பட்ஜ் என்பன விற்கப்பட்டன. முக்கியமாக மிகவும் பிரபல மான பூசணியின் 25,000 துண்டுகள் இந்த 2 நாட்களில் விற்கப்பட்டன. 16ஆம் திகதி சனிக்கிழமை பகலில் பிரதான வீதியில் அணிவகுப்பு ஒன்று நடந்தது. இதில், போட்டியில் வெற்றிபெற்ற பூசணிக்காய் ஏற்றப்பட்ட டிரக் முன்னால் செல்ல, ஆரஞ்சு பகேமாத், பாண்ட் வாத்தியங்கள், கிளாசிக் கார்கள், பூதம் எல்லாம் பின் னால் வந்தன.

இதில் போட்டி என்னவென்றால் மிகப் பெரிய பூச ணிக்காய் எது என்பதுதான். எது அதிக எடை உள் ளதோ அதுதான் சிறந்தது. 11ஆம் திகதி நடந்த போட் டிக்கு வந்த 70 பூசணிக்காய்களில் ஆரஞ்சு சுரைக்காய் ஒன்றுதான் அதிக எடை உள்ளதாக இருந்தது. திடகாத் திரமாக இருந்த இந்த சுரைக்காய் 1,229 பவுண்ட் எடை இருந்தது. எனவே, இதுதான் அணிவகுப்பில் டிரக் கில் ஏற்றி எடுத்துவரப்பட்டது. இந்த சுரைக்காயை உற்பத்தி செய்தவருக்கு 6, 145 டொலர் (ஒரு பவுண் டுக்கு 5 டொலர் வீதம்) பரிசு கிடைத்தது.



## சீனாவில் ஒப்பனைத் திருவிழா

சீனாவின் பீஜிங் நகரில் சர்வதேச ஒப்பனைத் திருவிழா கடந்த ஒருவாரமாக நடைபெற்று வருகி றது. இதையொட்டி ஆடை, அலங்கார அணிவகுப்பு, சிகை அலங்காரப்போட்டி, அழகு சாதனப் பொருட் களின் அறிமுக விழா நடைபெற்றன.

இந்த விழாவில் பட்டாம்பூச்சி போல ஒரு மொடல் அழகி பாவனை செய்தபடி மேடையை வலம்வந்த காட்சி. அழகுசாதனப் பொருட்கள் விற்பனையில் சீனா இப்போது முதல் இடத்தில் இருக்கிறது.



புகைப்படப் பிரதியாக்கத்துறையில்
ஒரு பெரும் பாய்ச்சல்...!
3R முதல்
12"x36"
வரை
ஒரே கூரையின் கீழ் மூன்று
சேவைகள் குடாநாட்டில்
இங்கு மட்டுமே...!
Konica
அறிமுகம்
1998இல் Konica
அறிமுகம்
2001இல் Frontier (Fuji)
Frontier-350
அறிமுகம்
2004இல் Kodak
Noritsu QSS-3201
தன்னிகரில்லா சேவை...
சேவையால் கிடைத்த பெருமை...
ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்
&
கொனிகா கலர் லாப்
14,வேங்கடேசன் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3493